# தமிழ்

## உகரம்

### இரண்டாம் பருவம்




தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை – 600025.
www.tamilvu.org

# தமிழ்

## உகரம்

## இரண்டாம் பருவம்

தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600025.

**தமிழ்நாடு அரசு**

**முதல்பதிப்பு** - 2025

**விலை: ரூ. 220.00**

**பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்**

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**நூல் அச்சாக்கம்**

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

www.textbooksonline.tn.nic.in

| ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்) |
| --- |
| குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா? மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா? பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா? அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098 உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும் (CHILD LINE 1098 NIGHT & DAY) |
| மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா? பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா? தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா? அழையுங்கள் 14417 உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும் (14417 கல்வித் தகவல் மையம்) |

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

-'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.

## தமிழ்த்தாய் வாழ்த்து - பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும் பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப்பெண்ணே! தமிழ்ப்பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன்வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

| பாடம் | பாடப்பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 17 | **கீழடி நம் தாய்மடி** | 1 |
| | தெரிந்துகொள்வோம் : இடைச்சொற்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் : ஓவியம் | |
| | செந்தமிழ்ச்செல்வம் : மூதுரை | |
| 18 | **ஜப்பான் நாட்டின் பண்பாட்டுச் சிறப்புகள்** | 15 |
| | தெரிந்துகொள்வோம் : மரபுத்தொடர்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் : கடைசி இலை | |
| | செந்தமிழ்ச்செல்வம் : திருக்குறள் | |
| 19 | **தமிழரின் அறிவியல் சிந்தனை** | 24 |
| | தெரிந்துகொள்வோம் : பெயரெச்ச வகைகள் | |
| | கேட்டல் கருத்தறிதல் : அனுபவமே சிறந்த ஆசிரியர் | |
| | செந்தமிழ்ச்செல்வம் : திருக்குறள் | |
| 20 | **என் முதல் விண்வெளிப் பயணம்** | 35 |
| | தெரிந்துகொள்வோம் : இரட்டுறமொழிதல் (சிலேடை) | |
| | கேட்டல் கருத்தறிதல் : இரப்பர் உருவான கதை | |
| | செந்தமிழ்ச்செல்வம் : நாலடியார் | |
| 21 | **செயலிகள்** | 46 |
| | தெரிந்துகொள்வோம் : வினையெச்ச வகைகள் | |
| | கேட்டல் கருத்தறிதல் : நுட்பமான அறிவு | |
| | செந்தமிழ்ச்செல்வம் : திருக்குறள் | |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 22 | சமூக ஊடகமும் இணையப் பாதுகாப்பும் | | 56 |
| | தெரிந்துகொள்வோம் | ஒலி வேறுபாட்டுச் சொற்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | அறிவே ஆயுதம் | |
| | செந்தமிழ்ச்செல்வம் | திருக்குறள் | |
| 23 | ஆராய்ச்சி மணி | | 66 |
| | தெரிந்துகொள்வோம் | வேற்றுமை | |
| | கேட்டல் கருத்தறிதல் | மெய்ப்பொருள் காண்பது அறிவு | |
| | செந்தமிழ்ச்செல்வம் | நீதிநெறி விளக்கம் | |
| 24 | அன்பு என்னும் அறம் | | 78 |
| | தெரிந்துகொள்வோம் | உவமைத்தொடர்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | கடமைக்குச் செய்யாதே! | |
| | செந்தமிழ்ச்செல்வம் | திருக்குறள் | |
| | மீள்பார்வை – பயிற்சிகள் | | 87 |
| 25 | மூலிகை மருத்துவம் | | 92 |
| | தெரிந்துகொள்வோம் | வழுநிலை, வழாநிலை | |
| | கேட்டல் கருத்தறிதல் | இன்றே செய்! | |
| | செந்தமிழ்ச்செல்வம் | நல்ல உணவு உண்போம் | |
| 26 | உடல்நலம் காப்போம் | | 102 |
| | தெரிந்துகொள்வோம் | கருத்து மாறாத் தொடர்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | நேர்மை | |
| | செந்தமிழ்ச்செல்வம் | இளைய தோழனுக்கு | |

| பாடம் | பாடப்பொருள் | பக்க எண் |
| --- | --- | --- |
| 27 | **சீர்திருத்தச் செம்மல்** | 114 |
| | தெரிந்துகொள்வோம் : வழாநிலைத் தொடர்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் : சிந்தித்துச் செயல்படு | |
| | செந்தமிழ்ச்செல்வம் : திருக்குறள் | |
| 28 | **கேள்வி என்னும் கலை** | 124 |
| | தெரிந்துகொள்வோம் : தொகைச்சொற்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் : தனித்தன்மையை இழக்காதே! | |
| | செந்தமிழ்ச்செல்வம் : ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | |
| 29 | **வள்ளலாரின் வாழ்வியல் நெறி** | 138 |
| | தெரிந்துகொள்வோம் : புணர்ச்சி | |
| | கேட்டல் கருத்தறிதல் : அறிவே ஆயுதம் | |
| | செந்தமிழ்ச்செல்வம் : மணிமேகலை | |
| 30 | **அன்னை தெரசாவின் அருள்உள்ளம்** | 151 |
| | தெரிந்துகொள்வோம் : தொடர் உருவாக்குதல் | |
| | கேட்டல் கருத்தறிதல் : அன்பு வேண்டும் | |
| | செந்தமிழ்ச்செல்வம் : திருக்குறள் | |
| | **மீள்பார்வை – பயிற்சிகள்** | 164 |

## 17.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

அருங்காட்சியகம் சென்று வந்த அனுபவத்தைப் பற்றி உங்கள் வகுப்பு நண்பர்களுடன் கலந்துரையாடுக

## 17.2 படிப்போம்

# கீழடி நம் தாய்மடி

நற்றமிழ்த் தொலைக்காட்சி நேயர்கள் அனைவருக்கும் கல்விக்கரசியின் இனிய வணக்கம். இன்றைய சிறப்புப்பார்வை நிகழ்ச்சியில் கீழடி அகழாய்வு குறித்து நாம் அறிந்துகொள்ளப் போகிறோம்.

தமிழ்மக்களைத் தரணியில் உயர்த்திய தனிச்சிறப்புமிக்க தளம்; அதுவே கீழடி ஆய்வுக்களம்.

நமக்குக் கீழடி ஆய்வுக்களத்திலிருந்து நேரடியாகச் செய்திகளை வழங்க, நம் செய்தியாளர் அறிவுச்செல்வன் நம்முடன் இணைந்துள்ளார். அவரிடம் செய்திகளை விரிவாகக் கேட்போம்.

**கல்விக்கரசி** : வணக்கம் அறிவுச்செல்வன். இப்போது நீங்கள் இருக்கும் இடம்பற்றிக் கூறுங்கள்.

**அறிவுச்செல்வன்** : வணக்கம் கல்விக்கரசி. நான் தற்போது கீழடி அகழாய்வுக் களத்தில் உள்ளேன். இது, தமிழ்நாட்டிலுள்ள சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ளது. மேலும், மதுரைக்கு மிக அருகில் உள்ளது.

**கல்விக்கரசி** : நல்லது அறிவுச்செல்வன். நீங்கள் நிற்கும் இடத்தில் வளையங்கள் அடுக்கி வைத்ததுபோல் உள்ளன! அவை பற்றிக் கூறுங்கள்.


உறைகிணறு


பானை

**அறிவுச்செல்வன்** : நீங்கள் காண்பது, உறைகிணறு! இது, சுடுமண் உறைகளால் (வளையங்களால்) ஆனது. பொதுவாக, மணற்பாங்கான பகுதிகளில் கிணற்றினுள் மணல் சரியாமல் இருக்க, இதுபோன்ற கிணறு கட்டப்படுவதுண்டு. அதனை ஒட்டி காண்பது தெரிவது சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட சுவர்.

**கல்விக்கரசி** : சுடுமண் உறைகள், சுட்ட செங்கற்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியிருக்கிறார்களா! அருமை. மேலும் தகவலைப் பகிருங்கள்.

அறிவுச்செல்வன் : இங்கே பாருங்கள். பானையும் பானை ஓடுகளின் குவியலும் கிடைத்துள்ளன. இவற்றைக் காணும்போது இங்கு, பானை செய்யும் தொழிற்கூடம் செயல்பட்டிருக்கலாம் என அறியமுடிகிறது.

கல்விக்கரசி : அப்படியா! வேறு என்னென்ன பொருள்கள் கிடைத்துள்ளன?

அறிவுச்செல்வன் : இங்கு, அணிகலன்கள் கிடைத்துள்ளன. பெண்கள் அணியும் தங்கத்தாலான அணிகலன்கள், கல்மணிகள், கண்ணாடி மணிகள், சுடுமண் மணிகள், சங்கு வளையல்கள், தந்தத்தாலான வளையல் துண்டுகள் ஆகிய பொருள்கள் கிடைத்துள்ளன.




தங்கத்தாலான அணிகலன்கள்




கண்ணாடி மணிகள்

கல்விக்கரசி : உழவுத்தொழில் தொடர்பான பொருள்கள் எவையேனும் கிடைத்துள்ளனவா?

அறிவுச்செல்வன் : ஆம். உழவு மட்டுமன்றி, கால்நடை வளர்ப்பு, நெசவுத்தொழில் நடந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.

கல்விக்கரசி : அவற்றைப் பற்றிச் சற்று விளக்கமாகக் கூறுங்கள்.

அறிவுச்செல்வன் : விலங்குகளின் எலும்புத்துண்டுகள் கிடைத்துள்ளன. அவை அங்குப் பயன்படுத்தப்பட்ட விலங்குகளுக்கானவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் திமிலுள்ள காளை, பசு, எருமை, வெள்ளாடு ஆகியவற்றை உழவுத்தொழிலுக்குப் பயன்படுத்தி இருக்கலாம். மேலும், நெசவுத்தொழிலுக்குப் பயன்பட்ட தக்களி போன்ற பொருள்களும் கிடைத்துள்ளன.

கல்விக்கரசி : அக்கால மக்களின் எழுத்தறிவு எப்படி இருந்தது? அதற்கான சான்றுகள் கிடைத்துள்ளனவா?



நூல் நூற்கும் தக்களிகள்



எலும்புக் கருவிகள்

அறிவுச்செல்வன் : கிடைத்துள்ளன. இங்குக் கிடைத்த பானை ஓடுகளில் கீறல்களும் குறியீடுகளும் காணப்படுகின்றன. எனவே, அக்காலத்திலேயே மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்துள்ளனர் என அறியமுடிகிறது. உலகின் தொன்மையான மக்கள்சமூகமாகத் தமிழ்மக்கள் விளங்கினர். இவ்வுண்மையைக் கீழடி அகழாய்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

கல்விக்கரசி : கீழடியிலிருந்து நேரடியாகத் தகவல்களை வழங்கியமைக்கு நன்றி அறிவுச்செல்வன். நேயர்களே! கீழடியில் அகழாய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அவற்றின் மூலம் கிடைக்கும் செய்திகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. கூடுதல் செய்திகளுடன் மீண்டும் உங்களைச் சந்திப்பேன். நன்றி! வணக்கம்!

## பொருள் அறிவோம்

1. தரணி – உலகம்
2. தொன்மை - பழைமை
3. திறம் - திறமை
4. தக்களி - நூல் நூற்கப் பயன்படும் ஒரு கருவி
5. பறைசாற்றும் – வெளிப்படுத்தும்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. கீழடி எங்கு அமைந்துள்ளது?
2. கீழடியில் என்ன நடைபெறுகிறது?
3. உறைகிணறுகள் ஏன் கட்டப்படுகின்றன?
4. கீழடி அகழாய்வில் கிடைத்த அணிகலன்கள் யாவை?
5. கீழடியில் கிடைத்த உழவுத்தொழிலுக்கான சான்றுகளைக் கூறுக.

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(எலும்புத்துண்டுகள், சிவகங்கை, தொழிற்கூடம், உறைகிணறு, சுட்ட செங்கல்)

1. தமிழ்நாட்டில் ________________ என்னும் மாவட்டத்தில் கீழடி உள்ளது.
2. மணற்பகுதிகளில் ________________ கட்டப்படுகிறது.
3. கீழடியில் காணப்பட்ட சுவர் ________________ கொண்டு கட்டப்பட்டிருந்தது.
4. பானை ஓடுகளின் குவியல் ________________ இருந்ததற்குச் சான்றாகும்.
5. கீழடியில் விலங்குகளின் ________________ கிடைத்துள்ளன.

## இ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தொன்மை என்பதன் பொருள் ________________.

அ) புதுமை ஆ) பழைமை இ) இளமை ஈ) பெருமை

2. கீழடி அகழாய்வில் கிடைத்த அணிகலன்கள் ________________ ஆல் ஆனவை.

அ) தங்கம் ஆ) இரும்பு இ) செம்பு ஈ) வெள்ளி

3. கீழடியில் நெசவுத்தொழில் நடைபெற்றதற்குச் சான்று ________________.

அ) தக்களி ஆ) வளையல் இ) ஓடு ஈ) பானை

## 17.3 தெரிந்துகொள்வோம்

### இடைச்சொற்கள்

தனித்து இயங்காமல் பெயர்ச் சொல்லையோ வினைச் சொல்லையோ சார்ந்து வருவது இடைச்சொல் ஆகும்.



**இடைச்சொற்கள் அறிவோம்**

**வேற்றுமை உருபுகள்**

ஐ, ஆல், கு, இன், அது, கண் ஆகியவை

**விகுதிகள்**

ஆன், ஆள், ஆர் போன்றவை

**சாரியைகள்**

அன், அத்து, அம் போன்றவை

**உவம உருபுகள்**

போல, போன்ற, அன்ன, ஒத்த போன்றவை

**சுட்டு எழுத்துகள்**

அ, இ

**வினா எழுத்துகள்**

ஆ, எ, ஏ, ஓ, யா

| 1) வேற்றுமை | எடுத்துக்காட்டு | படங்கள் |
|---|---|---|
| ஐ | குமரன் புத்தகத்தைப் படித்தான். |  |
| ஆல் | இது, மரத்தால் செய்த பெட்டி. |  |
| கு | கவின் ஓவியத்திற்கு வண்ணம் தீட்டினான். |  |

| 2) விகுதிகள் | எடுத்துக்காட்டு | படங்கள் |
|---|---|---|
| ஆன் | விமல் பாடல் பாடினான் |  |
| ஆள் | குழலி வீணை வாசித்தாள் |  |
| ஆர் | அரசர் பரிசு வழங்கினார் |  |

| 3) உவம உருபு | எடுத்துக்காட்டு | படங்கள் |
|---|---|---|
| போல | பொன்னி மயில்போல ஆடினாள் |  |
| | முயல் மான்போலத் துள்ளியது. |  |
| | வீரன் புலிபோலப் பாய்ந்தான். |  |

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் தொடர்களிலுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து (✓) செய்க.

1. பழம் தின்றாள். (ஆள்/ ஆன்)
2. பந்து விளையாடினான். (ஆன்/ஆள்)
3. கவிதையைப் படி. (ஐ/கு)
4. கண்ணால் பார். (ஐ/ஆல்)
5. பறவை போலப் பற. (போல/ஐ)

### ஆ) பொருத்தமான இடைச்சொற்களை இணைத்துத் தொடர் உருவாக்குக.

(ஆர், ஆல், கு, போல, ஐ)

1. முருகன்/மரக்கன்று/நட்டான். 1. முருகன் மரக்கன்றை நட்டான்.
2. வெண்மணி/ குயில்/பாடினாள். ______________________
3. வள்ளி/ஊசி/தைத்தாள். ______________________
4. மாறன்/கடற்கரை/சென்றான். ______________________
5. ஆசிரியர்/பாடம்/நடத்து ______________________

**இ) படங்களுக்குப் பொருத்தமாக இடைச்சொல் வருமாறு தொடர்கள் உருவாக்குக.**



1. ____________________




2. ____________________



3. ____________________

## சுவைச்செய்தி




குடியம் குகை

இந்தியாவின் மிகத் தொன்மையான பழங்கற்கால வாழ்விடம், குடியம் குகை. இது, தமிழ்நாட்டிலுள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இவ்விடம் இராபர்ட் புரூஸ் பூட் மற்றும் வில்லியம் கிங் ஆகியோரால் 1863இல் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. பழங்கற்கால மனிதர்கள் இயற்கைச் சீற்றங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள, இயற்கையாக அமைந்துள்ள குகைகளைப் பயன்படுத்தினர் என்பதற்கு இந்த இடம் சிறப்பான சான்றாகும். இப்பகுதியில் 16 பாறை மறைவிடங்கள் உள்ளன. இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய பழங்கால மனிதர்கள் இந்தக் குகைகளில் வாழ்ந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.


## 17.4 மொழியோடு விளையாடுவோம்

**படத்தைப் பார்த்து எழுத்துகளை வரிசைப்படுத்திச் சொல் உருவாக்குவோம்.**

| | | |
|---|---|---|
|  | ர ஆ ம் | ஆரம் |
|  | ணி கா த | |
|  | தி த் கு மூ க் | |
|  | ளை ல் ய வ | |
|  | சு லு கொ | |
|  | தி ம் ர மோ | |

## கருத்து விளக்கப்படம்

**கீழ்க்காணும் அறிவிப்பைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**




### வினாக்கள்

1. அறிவிப்பு எதனைப் பற்றியது?
2. வெளியிடப்படும் நூலின் தலைப்பு என்ன?
3. நூல் வெளியீட்டு விழா எங்கு நடைபெறுகிறது?
4. நூல் வெளியீட்டு விழா எப்போது நடைபெறுகிறது?
5. இந்த நூலை எழுதிய ஆசிரியர் யார்?

## 17.5 கேட்டல் கருத்தறிதல்

### ஓவியம்

மாறனும் கந்தனும் சிறந்த ஓவியர்கள். ஒருநாள் கந்தன் பழங்கள் நிறைந்த கூடையின் ஓவியத்தை வரைந்திருந்தான். மாறனிடம் தான் வரைந்த ஓவியத்தைக் காட்டினான். அந்த ஓவியம், உண்மையான பொருள் போன்றே வரையப்பட்டிருந்தது. அதனைப் பார்த்த மாறன், மிகவும் அருமையாக உள்ளது என்று பாராட்டினான். அதில் மனநிறைவு அடையாத கந்தன், அந்தப் படத்தைத் தன் வீட்டுவாசலில் வைத்தான். அதனைப் பார்த்த பறவைகள் உண்மையான பழங்கள் என்று எண்ணி அவற்றை உண்ண வந்தன. ஆனால், படம் வரையப்பட்ட பலகையைக் கொத்திக்கொத்தி ஏமாற்றமடைந்தன. இதனைக் கண்ட கந்தன் கைதட்டி மகிழ்ந்தான்.

மாறன், கந்தனுக்குப் பாடம் புகட்ட எண்ணினான். விருந்திற்கு வருமாறு அவனை அழைத்தான். வீட்டிற்கு வந்த கந்தனைச் சிறிது நேரம் காக்கவைத்தான். பிறகு உண்ண அழைத்தான். கடும்பசியில் இருந்த கந்தன் மேசையின் மீதிருந்த உணவு வகைகளை உண்ணச் சென்றான். ஆனால், அவற்றைக் கையால் எடுக்கமுடியவில்லை. ஏனெனில், அங்கிருந்த உணவுப்பொருள்கள் அனைத்தும் ஓவியங்கள். அப்போதுதான் கந்தனுக்கு முந்தைய நாள் தான் செய்த தவறு புரிந்தது.

### வினாக்கள்

1. கந்தன் வரைந்த ஓவியம் எது?
2. கந்தன் வரைந்த ஓவியம் எவ்வாறு இருந்தது?
3. ஓவியத்தைப் பார்த்த மாறன் என்ன கூறினான்?
4. பறவைகள் ஏமாற்றமடையக் காரணம் என்ன?
5. மாறன் ஏன் கந்தனை விருந்திற்கு அழைத்தான்?

## 17.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 17.7 செந்தமிழ்ச்செல்வம்

### மூதுரை

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் – மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

(பாடல் -26)

- ஔவையார்

(மாசற – குற்றம் நீங்க; சீர்தூக்கின் – ஆராய்ந்து பார்ப்பின்; தேசம் – நாடு)

**பொருள்:**

அரசனையும் குற்றம் நீங்கக் கற்றவனையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால், கற்றவனே சிறப்புடையவன் ஆவான். ஏனெனில், அரசனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. கற்றவனுக்குச் செல்லும் இடங்களில் எல்லாம் சிறப்பு உண்டாகும்.

### பழமொழி

**நிறைகுடம் தளும்பாது; குறைகுடம் கூத்தாடும்.**

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. அகழாய்வு
2. கீழடி
3. உறைகிணறு
4. வளையங்கள்
5. அணிகலன்கள்

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. அகழாய்வு
2. தொலைக்காட்சி
3. வியப்பு

## 17.8 மொழிபெயர்ப்போம்

Archaeology is the study of past, based on objects or parts of buildings that are found under the ground.

---

---

## 17.9 அறிந்துகொள்வோம்

1. அகழாய்வு – Excavation
2. தொழிற்கூடம் – Workshop
3. அணிகலன்கள் - Ornaments/Jewels
4. நெசவு – Weaving
5. எலும்பு – Bone
6. கீறல்கள் – Graffiti
7. குறியீடுகள் – Symbols
8. பொறித்தல் - Engraving

## 17.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்தி, இயற்கையை வருணித்துத் தொடர்கள் எழுதுக.**

அழகான - பசுமையான - உயரமான - நீளமான - அடர்ந்த

காடுகள் - பூக்கள் - ஆறு - மலை - புல்வெளி

## 17.11 உயர்நிலைத் திறன்

**ஒரு கதையின் நிகழ்வுகள் இடம் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.**

1. போட்டி நடைபெறுவதற்குப் பதினைந்து நாள் இருந்தது.
2. போட்டியில் தமிழ்மணி வெற்றி பெறக்கூடாது எனப் பொன்னன் நினைத்தான்.
3. பள்ளியில் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி அறிவிக்கப்பட்டது.

4. போட்டி நடைபெறுவதற்கு ஒருவாரத்திற்குமுன்பு, தமிழ்மணியின் திருக்குறள் புத்தகத்தை எடுத்து மறைத்துவைத்தான்.

5. எந்தச் செயலையும் காலம் கருதிச் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்பதைப் பொன்னன் உணர்ந்துகொண்டான்.

6. தமிழ்மணியும் தன் பெயரைப் பதிவுசெய்தான்.

7. தமிழ்மணி நேரத்தை வீணாக்காமல், முதல் வாரத்திலேயே போட்டிக்குத் தேவையான குறள்களை நன்கு படித்துவிட்டான்.

8. மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்ள முன்வந்தனர்.

9. முதற்பரிசு தமிழ்மணிக்கே கிடைத்தது. பொன்னனுக்கு மூன்றாமிடம் கிடைத்தது.

10. தமிழ்மணி எப்படி வெற்றி பெற்றான் எனப் பொன்னன் யோசித்தான்.

## 17.12 செயல்திட்டம்

கீழடி ஆய்வில் கிடைத்த பொருள்களுள் சிலவற்றின் மாதிரிகளைச் செய்துவருக.

18.1 பேசுவோம்

# உலகப் பண்பாட்டு நாள் மாறுவேடப் போட்டி

பாடம் 18



## கலந்துரையாடுவோம்

நாட்டிற்கு நாடு வேறுபடும் ஆடை, அணிகலன், பழக்கவழக்கம் போன்றவை குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 18.2 படிப்போம்

### ஜப்பான் நாட்டின் பண்பாட்டுச் சிறப்புகள்

பண்பாடு என்பது, மக்களின் உணவு, உடை, பழக்கவழக்கம், விளையாட்டு போன்றவற்றைக் குறிக்கும். ஒரு நாட்டின் பெருமைக்கும் சிறப்புக்கும் அங்கு வாழும் மக்களின் பண்பாடே காரணமாகிறது. பண்பாடு நாட்டிற்கு நாடு வேறுபடும். ஜப்பான் நாட்டின் பண்பாட்டுக் கூறுகள் சிலவற்றை நாம் இங்கு அறிந்துகொள்வோம்.



ஜப்பானியப் பாரம்பரிய உணவு வகைகளை "வாஷோகு" (Washoku) என்று அழைப்பர். அவர்களின் உணவில் அரிசி, மீன், பச்சைக் காய்கறிகள் ஆகியவை முதன்மை இடத்தைப் பெறுகின்றன. சுஷி, சஷிமி, மிசோ சூப்கள், டெம்புரா, குஷியாகி, டோன்காட்சு ஆகியவை ஜப்பானியர்கள் விரும்பி உண்ணும் உணவுகளாகும். உணவுகளை 'சாப்ஸ்டிக்' (chopstick) எனப்படும் இரு குச்சிகளைக் கொண்டே உண்பர்.



கிமோனோ (Kimono) என்பது ஜப்பானியர்களின் பாரம்பரிய ஆடையாகும். இதனை விழாக்கள் மற்றும் பாரம்பரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கும்போது அணிவர். பெண்கள், பூக்களால் பின்னப்பட்ட வண்ணக் கிமோனோக்களை அணிந்து, அன்னப்பறவைபோல நடப்பர். இந்தக் காட்சி மிக அழகாக இருக்கும்.

சுமோ (Sumo) ஜப்பானியர்களின் பாரம்பரிய விளையாட்டு. இது ஜப்பானின் தேசிய விளையாட்டும் ஆகும். இவ்விளையாட்டு, தமிழரின் மல்யுத்தத்தைப் போன்றதாகும். சுமோ விளையாட்டில் கலந்துகொள்ளும் வீரர்கள் சண்டையிடுவதற்கு ஏற்ப, பெரிய உடலைக் கொண்டிருப்பர். அவர்கள் தங்கள் உடல்வளர்ச்சிக்காக சான்கோனேப் (Chankonabe) எனப்படும் தனிவகை உணவை உண்பர்.



ஜப்பானியர்கள் செர்ரி பூக்கள் (cherry) பூக்கத் தொடங்கும் காலத்தில் பூக்களைப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனை ஹனாமி (Hanami) என்பர். இக்காலங்களில் பூங்காக்களுக்குக் குடும்பமாகச் சென்று பொழுதுபோக்குவர்.



ஜப்பானியர்கள் அழகுணர்ச்சி மிக்கவர்கள். மேலும், விழாக்கள் நடத்துவதிலும் விருந்து பரிமாறுவதிலும் பழக்கவழக்கங்களை முறையாகப் பின்பற்றுவதிலும் சிறந்தவர்களாக விளங்குகின்றனர்.

## பயிற்சிகள்

### அ) வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக.

1. ஜப்பானியர்களின் உணவில் முதன்மையானவை எவை?
2. ஜப்பானியர்கள் சாப்ஸ்டிக்கை எதற்குப் பயன்படுத்துகின்றனர்?
3. ஜப்பானியர்களின் பாரம்பரிய விளையாட்டு எது?
4. கிமோனோ பற்றிக் கூறுக.
5. ஹனாமி என்று எதனை அழைப்பர்?

### ஆ) பொருத்துக.

1. வாஷோகு - உடை
2. கிமோனோ - விளையாட்டு
3. சுமோ - உணவு
4. ஹனாமி - பூக்கள் பார்த்தல்

### இ) சரியான தொடரைக் கண்டறிக.

1. ஜப்பானியர்களின் பாரம்பரிய ஆடை கொஹன். (சரி/தவறு)
2. சுமோ வீரர்கள் சான்கோனேப் என்னும் உணவினை உண்பர். (சரி/தவறு)
3. ஜப்பானியர் அரிசி உணவை உண்பது இல்லை. (சரி/தவறு)

## 18.3 தெரிந்துகொள்வோம்



### மரபுத்தொடர்கள்

மீனா : ஆதிரா! நீ ஏன் கலைக்கல்லூரியில் சேர விண்ணப்பிக்காமல் ஆறப்போடுகிறாய்?

ஆதிரா : மருத்துவம் பயிலக் காத்திருக்கிறேன். அதில் சேர்ந்தால் வெளுத்து வாங்குவேன்.

மீனா : நீ விண்ணப்பிக்காமல் பூசி மெழுகியதற்கு இப்போது தான் காரணம் புரிகிறது. வாழ்த்துகள் ஆதிரா.

## பயிற்சிகள்

**அ) மரபுத்தொடரைப் பொருளுடன் பொருத்துக.**

1. ஆறப்போடுதல் - மறைத்தல்
2. வெளுத்து வாங்குதல் - காலம் தாழ்த்துதல்
3. பூசி மெழுகுதல் - மிக நன்றாகச் செய்தல்

**ஆ) பின்வரும் தொடர்களில் மரபுத்தொடர்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

(பூசி மெழுகினான், ஆறப்போட்டான், வெளுத்து வாங்கினான்)

1. அருண்மொழி, அன்றாடம் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாமல் ____________.
2. குமரன், கூடைப்பந்து போட்டியில் ____________.
3. வெற்றிமாறன், தான் செய்த செயலுக்கான காரணத்தைக் கூறாமல் ____________.

**இ) பின்வரும் உரையாடலுக்குப் பொருந்தும் மரபுத்தொடரை எழுதுக.**

(பூசி மெழுகுதல், ஆறப்போடுதல், வெளுத்து வாங்குதல்)

| | | |
|---|---|---|
|  | அம்மா : பனிமொழி, இன்று கைவினைப் பொருள்கள் செய்யும் போட்டி உள்ளதே?<br>பனிமொழி : ஆம் அம்மா. மிக நன்றாகச் செய்து வெற்றி பெறுவேன். | |

| | | |
|---|---|---|
|  | அன்பு : சிவா! நாளைக்குச் சுற்றுலா செல்ல வேண்டும் அல்லவா? வா... தேவையான பொருள்களை எடுத்து வைப்போம்.<br>சிவா : அதற்குள் என்ன அவசரம்? பிறகு பார்த்துக் கொள்ளலாம். | |
|  | அம்மா : செல்வா! பள்ளியிலிருந்து வருவதற்கு ஏன் இவ்வளவு நேரம்?<br>செல்வா : அது வந்து அம்மா...<br>அம்மா : என்ன செல்வா? நான் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்காமல் ஏதோ மறைப்பதுபோல் தெரிகிறதே! | |

## 18.4 மொழியோடு விளையாடுவோம்

**விடுகதைக்கு விடையளிக்க.**

1. ஒளி கொடுக்கும் ஆனால், விளக்கு இல்லை. சுடும் ஆனால், நெருப்பு இல்லை. பளபளக்கும் ஆனால், தங்கம் இல்லை அது என்ன?
2. ஐந்து பேருக்கும் ஒரே வீடு. அது என்ன?
3. கால் நான்கு உண்டு ஆனால், நடக்காது அது என்ன?
4. வெள்ளை மாளிகைக்கு வாசலும் இல்லை, வழியும் இல்லை அது என்ன?
5. மரம் ஏறினால் வழுக்கும்; காய் தின்றால் துவர்க்கும்; பழம் தின்றால் இனிக்கும் அது என்ன?

## சுவைச்செய்தி

ஓரிகாமி (Origami) என்பது காகிதத்தைப் பயன்படுத்தி வடிவங்கள் செய்யும் கலை. இது ஜப்பானியர்களின் பாரம்பரியக் கலையாகும். 'ஓரி' என்பது காகிதத்தையும் 'காமி' என்பது காகிதத்தை மடிப்பதையும் குறிக்கிறது. இவ்வாறு காகிதத்தில் வடிவம் செய்வதன் மூலம் மகிழ்ச்சியான வாழ்க்கை தங்களுக்கு அமையும் என்பது அவர்களின் நம்பிக்கையாகும்.



ஓரிகாமி

## 18.5 கேட்டல் கருத்தறிதல்

### கடைசி இலை

ஜான்சி, சூ இருவரும் தோழிகள். ஜான்சிக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தாள். மருத்துவர் சிகிச்சை அளித்தும் நோய் சரியாகவில்லை. இந்நிலையில், ஜான்சி இருந்த அறையின் ஜன்னலுக்கு வெளியே 'இவி' கொடி படர்ந்திருந்தது. பனியின் காரணமாக அக்கொடியின் இலைகள் உதிர்ந்தன. இலை உதிர்வது, தன் வாழ்நாள் குறைவதை உணர்த்துவதாக ஜான்சி நினைத்தாள். இதனை அறிந்த சூ, ஜான்சியின் எண்ணத்தை மாற்ற முயன்றாள். அன்று, கடுமையான காற்றுடன் மழை பெய்தது. காலையில் சூ ஜன்னலைத் திறந்து காண்பித்தாள். கொடியின் கடைசி இலை உதிராமல் இருந்தது. அதனைக் கண்ட ஜான்சி புத்துணர்வு பெற்றாள்; இயல்பு நிலைக்குத் திரும்பினாள்.

ஜான்சிக்கு உடல்நலம் தேறிய பின், சூ ஓர் உண்மையைக் கூறினாள். கொடியில் உதிராமல் இருந்த அந்த இலை, உண்மையானது இல்லை என்றும் அதனை ஓவியர் பெர்மன் வரைந்தார் என்றும் கூறினாள். அதனைக் கேட்ட ஜான்சி வியப்படைந்தாள். தன்மீது அன்புகொண்ட தோழியின் நல்லெண்ணத்தைப் புரிந்துகொண்டாள். அவளுடைய செயலைப் பாராட்டித் தன் நன்றியைத் தெரிவித்தாள்.

## வினாக்கள்

1. ஜான்சியின் தோழி பெயர் என்ன?

2. யாருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது?

3. ஜன்னலுக்கு வெளியே ஜான்சி எந்தக் கொடியைக் கண்டாள்?

4. கொடியிலிருந்து உதிரும் இலைகளைக் கண்டு, ஜான்சி என்ன நினைத்தாள்?

5. கடைசி இலை என்னும் கதையின்மூலம் நீங்கள் என்ன அறிந்துகொண்டீர்கள்?

## 18.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 18.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

– (குறள் 26)

-திருவள்ளுவர்

(செயற்கரிய – செய்வதற்கு அரிதான)

பொருள்:

அரிய செயல்களைச் செய்பவர் பெரியர்; அவ்வாறு செய்ய முயலாதவர் சிறியர்.

### பழமொழி

சிறுதுரும்பும் பல் குத்த உதவும்.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. விருந்தினர்
2. விழாக்காலம்
3. பண்பாடு

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. அழகு
2. இசை
3. விளையாட்டு

## 18.8 மொழிபெயர்ப்போம்

ஜப்பானியர்கள் அழகுணர்ச்சி மிக்கவர்கள். மேலும், விழாக்கள் நடத்துவதிலும் விருந்து பரிமாறுவதிலும் பழக்கவழக்கங்களை முறையாகப் பின்பற்றுவதிலும் சிறந்தவர்களாக விளங்குகின்றனர்.

______________________________________________

______________________________________________

## 18.9 அறிந்துகொள்வோம்

1. பாரம்பரியம் - Tradition
2. பூங்கா - Park
3. பழக்கவழக்கம் - Habit
4. விழாக்கள் - Festivals
5. அன்னப்பறவை - Swan
6. குடும்பம் - Family
7. அழகுணர்ச்சி - Aesthetic sense
8. விருந்து - Feast
9. மல்யுத்தம் - Wrestling
10. விளையாட்டு - Game

## 18.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

'மை' என முடியும்படி மூன்று சொல்கொண்ட தொடர் உருவாக்குக.

நாட்டுக்குத் தேவை வளமை

நம்மை உயர்த்துவது வாய்மை

பேச்சில் வேண்டும் இனிமை

________________________

________________________

________________________

## 18.11 கட்டுரை எழுதுவோம்

**கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு, உரைப்பகுதி உருவாக்குக.**

எ.கா.

பள்ளி – வகுப்பறை – உணவு இடைவேளை – தமிழ்நாடன் – இனியா - உணவு- மறந்துவிட்டாள்- பகிர்ந்து உண்டனர்.

தமிழ்நாடனும் இனியாவும் எட்டாம் வகுப்பில் படிக்கின்றனர். நண்பகல் 12மணி ஒலித்ததும் அனைவரும் உணவு உண்ணத் தயாராகினர். இனியாவும் உணவு உண்ணத் தயாரானாள். ஆனால், உணவுப்பையைக் காணவில்லை. பள்ளிப்பேருந்து வந்ததைக் கண்டு, அதில் உடனே ஏறியதும் அப்போது, உணவுப்பையை எடுத்துவர மறந்ததும் அவளுக்கு நினைவில் வந்தது. இப்போது என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தாள். அருகிலிருந்த தமிழ்நாடன், இனியா உணவு உண்ணாமல் இருப்பதைக் கண்டான். அவள் உணவுப்பை எடுத்துவர மறந்துவிட்டாள் என்பதைக் கேட்டறிந்தான். அவன் இனியாவைப் பார்த்து, "அதனாலென்ன, என்னுடைய உணவை இருவரும் பங்கிட்டுச் சாப்பிடலாம்" என்று கூறினான். இருவரும் உணவைப் பகிர்ந்து உண்டனர்.

### பயிற்சி

மாலைநேரம் – சாலையோரம் – பெரிய மரம்- நாய்க்குட்டிகள் – பசியால் வாடின – மணி – அருகில் சென்றான் - பார்த்தான் – யோசித்தான் – அருகில் கடை – பால் வாங்கினான் – நாய்க்குட்டிகள் குடித்தன – மணியுடன் விளையாடின.

## 18.12 செயல்திட்டம்

பல்வேறு நாடுகளின் பண்பாடு குறித்த புகைப்படத் தொகுப்பை உருவாக்குக.

பாடம் 19

## 19.1 பேசுவோம்









### கலந்துரையாடுவோம்

கட்டடக் கலையில் சிறந்து விளங்கிய இடங்களுக்கு நீங்கள் சென்று வந்த அனுபவங்கள் பற்றி வகுப்பில் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 19.2 படிப்போம்

# தமிழரின் அறிவியல் சிந்தனை


தமிழரின் வாழ்வில் அறிவியலுக்கு மிகச்சிறந்த இடம் உண்டு. ஒவ்வொரு காலகட்டத்திலும், தாம் கண்டறிந்த அறிவியல் உண்மைகளைத் தமது நூல்களில் குறித்து வைத்துள்ளனர். பல நூற்றாண்டிற்கு முன்பே உயிர்ப்பாகுபாடு குறித்த செய்தி, தமிழரின் பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. இதன் ஆசிரியர் தொல்காப்பியர் ஆவார்.

நம்மைச் சுற்றிப் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் வாழ்கின்றன. அவற்றையெல்லாம் அறுவகைக்குள் அடக்கிக்காட்டினார் தொல்காப்பியர். இன்றைய அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு முன்னோடியாக, அவரது கூற்று விளங்குகிறது.

மெய் (உடல்), வாய், மூக்கு, கண், காது ஆகிய ஐந்தும் ஐம்பொறிகள் என அழைக்கப்படுகின்றன. இவ்வைந்தும் ஐம்புலன்களுக்கு உரியவை. அவை,

1. கண் – பார்த்தல்
2. காது – கேட்டல்
3. வாய் – சுவைத்தல்,
4. மூக்கு – நுகர்தல்,
5. மெய் (உடல்) – உணர்தல்

ஆகிய உணர்வுகளைக் கொண்டுள்ளன. அத்தகைய ஐம்புலன் அடிப்படையில், தொல்காப்பியர் உயிர்களைப் பாகுபடுத்தியுள்ளார்.



தொல்காப்பியரின் உயிர்ப்பாகுபாடு நூற்பா பின்வருமாறு,

"ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே

இரண்டு அறிவதுவே அதனொடு நாவே

மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே

நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே

ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே

ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"

- (தொல்.மரபு. நூ. 1526)

எனத் தொல்காப்பியர், புலன் உணர்வுகளால் உயிர்களை அழகாகப் பாகுபடுத்தியுள்ளார். ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு ஐம்புலன் அறிவுடன் மனத்தால் பகுத்தறியக்கூடிய பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவையும் சுட்டிக்காட்டியுள்ளார். இஃது, அவருடைய ஆற்றல்மிகு சிந்தனையின் விளைவே ஆகும். இத்தகைய சிந்தனைகள், வளரும் அறிவியல் அறிஞர்களுக்குச் சிறந்த சான்றுகளாக அமையும்.

இன்றைய காலக்கட்டத்தில் மிகவும் வியப்பும் மகிழ்ச்சியும் உண்டாக்கும் ஒரு பெட்டகமாகத் தொல்காப்பியத்தில் அறிவியல் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

இன்றைய தாவரவியல் செய்திகளுடன் இணைத்து ஆராயும்போது பழந்தமிழர், அறிவியல் நோக்கில் ஆராய்ந்து சிந்தித்த கருத்துகளை ஒப்புமைப்படுத்தலாம். இவற்றை உலகெங்கும் பரவச்செய்தால் தமிழரின் அறிவியல் சிந்தனை அனைவராலும் அறியப்படும்.

## பொருள் அறிவோம்

1. பாகுபாடு – பிரிவு
2. ஐம்பொறிகள் – ஐந்து உறுப்புகள்
3. ஐம்புலன்கள் – ஐந்து உணர்ச்சிகள்
4. பகுத்தறிவு – நன்மை, தீமை என ஆராயும் அறிவு
5. சிந்தனை – எண்ணம்

## பயிற்சிகள்

### அ) வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக.

1. தமிழரின் பழந்தமிழ் இலக்கண நூல் எது?

2. தொல்காப்பியம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

3. உயிர்கள் எத்தனை வகைகளாகத் தொல்காப்பியரால் பாகுபடுத்தப்படுகின்றன?

4. மூன்றறிவு என்பது எவற்றின் அடிப்படையில் பிரிக்கப்படுகிறது?

5. தொல்காப்பியர் குறிப்பிடும் ஆறறிவு பற்றிக் கூறுக.

### ஆ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தொல்காப்பியம் என்பது ____________ நூல். (இலக்கிய / இலக்கண)

2. தொல்காப்பியர் உயிரினங்களை __________ வகையாகப் பிரித்துள்ளார். (ஐந்து / ஆறு)

3. ஈரறிவு என்பது உடம்பு மற்றும் ____________ அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்தப்படுகிறது. (நாக்கு / கண்)

4. மனிதன் ____________ அறிவு கொண்ட உயிரினம் ஆவான். (ஆறு / நான்கு)

5. ஆறாவது அறிவு எனக் கூறப்படுவது ____________ ஆகும். (உடம்பு / மனம்)

### இ) கீழ்க்காணும் வினாக்கள் சரியா? தவறா? என்பதைக் (✓) குறியிட்டுக் காட்டுக.

1. தமிழர்களின் வாழ்வியலில் அறிவியலுக்கு மிகச்சிறந்த இடம் இல்லை. (சரி/தவறு)

2. உடல், வாய், கண், காது, மூக்கு இவை ஐந்தும் ஐம்புலன் ஆகும். (சரி/தவறு)

3. உயிர்ப்பாகுபாடு குறித்து தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. (சரி/தவறு)

4. மனிதன் ஐம்புலன் அறிவுடன் மனத்தால் பகுத்தறியும் திறன் பெற்றவன். (சரி/தவறு)

5. தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியர் தொல்காப்பியர். (சரி/தவறு)

## 19.3 தெரிந்துகொள்வோம்

### பெயரெச்ச வகைகள்

பெயரெச்சம்

- தெரிநிலைப் பெயரெச்சம்
- குறிப்புப் பெயரெச்சம்

**தெரிநிலைப் பெயரெச்சம்**

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறினையும் வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலைப் பெயரெச்சம்.

(எ.கா.) எழுதிய மாணவன்

**செய்பவன்**
மாணவன்

**செய்பொருள்**
பாடப்பொருள்

**கருவி**
எழுதுகோல்



எழுதிய மாணவன்

**காலம்**
இறந்தகாலம்


**நிலம்**
வகுப்பறை

**செயல்**
எழுதுதல்

**குறிப்புப் பெயரெச்சம்**

காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி, காலத்தைக் குறிப்பாக உணர்த்துவது குறிப்புப் பெயரெச்சம்.

(எ.கா.) நல்ல மாணவன்




## பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் தொடர்களை உரிய பெயரெச்சச் சொற்களைக் கொண்டு நிரப்புக.**

(எழுதிய, நல்ல, பாடிய, ஆடிய, வரைந்த)

1. கவின் ____________________ நண்பன்.
2. மாலா ____________________ பாடல் இனிமையாக இருந்தது.
3. குமார் ____________________ ஓவியம் அனைவராலும் பாராட்டப்பட்டது.
4. ஆராதனா ____________________ நடனம் சிறப்பாக இருந்தது.
5. தாரணி ____________________ கட்டுரை பிழையின்றி இருந்தது.

**ஆ) கீழ்க்காணும் சொற்றொடர்களை அட்டவணைப்படுத்துக.**

| | | |
|---|---|---|
| நடிக்கின்ற நாடகம் | அழகிய மலர் | சொல்லிய கருத்து |
| சிறந்த கவிதை | சிரித்த குழந்தை | நிறைய பணம் |

| தெரிநிலை பெயரெச்சம் | குறிப்புப் பெயரெச்சம் |
|---|---|
| நடிக்கின்ற நாடகம் | அழகிய மலர் |
| | |
| | |
| | |

**இ) விடுபட்ட கட்டங்களை நிரப்புக.**


**(கபிலன், வகுப்பு, இறந்த காலம்)**

| பெயரெச்சத் தொடர் | படித்த கபிலன் |
|---|---|
| செய்பவன் | |
| கருவி | பாடநூல் |
| நிலம் | |
| செயல் | படித்தல் |
| காலம் | |
| செய்பொருள் | பாடம் |

**ஈ) பின்வரும் உரைப்பகுதியிலிருந்து பெயரெச்சங்களைக் கண்டறிந்து வகைப்படுத்துக.**

பள்ளிப்பேருந்து வந்துநின்றது. பேருந்திலிருந்து இறங்கிய மாணவர்கள் வகுப்பறைக்குச் சென்றனர். ஆசிரியர் கதை ஒன்றைக் கூறி, மாணவர்களுக்கு ஆர்வமூட்டினார். அவர் கூறிய கதை சிறப்பாக இருந்தது. அதனால் மாணவர்கள், நல்ல கதை என்று பாராட்டினர்.

## சுவைச்செய்தி



தாவரங்களும் பிற உயிரினங்களைப் போன்றே வாழ்க்கையை வாழ்கின்றன என்று உலகப் புகழ்பெற்ற இந்திய அறிவியல் அறிஞர் டாக்டர் ஜகதீஷ் சந்திர போஸ் (1858-1937) நிறுவிய போது இவ்வையகமே அவரை வியப்புடன் பார்த்தது. மற்ற உயிரினங்களைப் போன்று தாவரங்களும் துன்ப, துயரங்களுக்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாகின்றன என அவர் கண்டறிந்தார். தாவர உயிரினங்கள் பற்றிய தமது ஆய்வுகளையும், ஆய்வு முடிவுகளையும் ஆராய்ச்சிக்கட்டுரைகளாக ஒரு நூல் வடிவில் டாக்டர் ஜகதீஷ் சந்திர போஸ் 1902ஆம் ஆண்டு வெளியிட்டார். அந்நூலின் பெயர் "The Reaction of Living and Non-living" என்பதாகும்.

## 19.4 மொழியோடு விளையாடுவோம்

**வட்டத்திலுள்ள எழுத்தை உரிய இடத்தில் நிரப்பிப் புதிய சொற்களை உருவாக்குக.**

ய

| | |
|---|---|
| கல் | கயல் |
| பணம் | |
| தடம் | |
| நாணம் | |
| பந்தம் | |

## 19.5 கேட்டல் கருத்தறிதல்

### அனுபவமே சிறந்த ஆசிரியர்

அரசர் ஒரு போட்டியை அறிவித்தார். அரசரின் முன், 4 அடி நீளமுள்ள பனைமரத்துண்டு இருந்தது. அது அடி எது? நுனி எது? என்று கண்டறிய முடியாதபடி, அந்தப் பனைமரத்துண்டு அடி முதல் நுனி வரை ஒரே பருமன் கொண்டதாக இருந்தது. அதன் அடிப்பக்கம் எது? மேல்பக்கம் எது? என்று கண்டுபிடிப்பவர்களுக்கு ஆயிரம் பொற்காசு வழங்கப்படும் என்றார் அரசர்.

மக்கள் அனைவரும் விடை காண முடியாமல் திகைத்தனர். ஆனால், இளைஞன் ஒருவன் 6 அடி ஆழமுள்ள குழி ஒன்றை வெட்டினான். குழியில் தண்ணீர் நிரப்பினான். நீரில் பனைமரத்துண்டைப் போட்டான். மரத்துண்டின் ஒரு பகுதி தண்ணீரினுள் சென்றது. அதுவே மரத்துண்டின் அடிப்பகுதி என்றும் மற்றது மேற்பகுதி என்றும் கூறினான். பரிசையும் பெற்றான். ஆனால், யாராலும் கண்டுபிடிக்க முடியாததை நீ எப்படிக் கண்டறிந்தாய் என அரசர் கேட்டார். அதற்கு அந்த இளைஞன், போட்டி பற்றி என் தாத்தாவிடம் கூறினேன்; அவர் சொன்னபடி செய்தேன்; வெற்றிபெற்றேன் என்றான். முதியவரின் அனுபவ அறிவைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

### வினாக்கள்

1. அரசர் அறிவித்த போட்டி என்ன?
2. போட்டியில் வெற்றி பெறுபவருக்குக் கிடைக்கும் பரிசு யாது?
3. இளைஞன் ஏன் குழியை வெட்டினான்?
4. போட்டிக்குப் பயன்படுத்திய மரத்தின் பெயர் என்ன?
5. விடை கண்டுபிடிக்க இளைஞனுக்கு உதவியவர் யார்?

## 19.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 19.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு

– (குறள் 595)

-திருவள்ளுவர்

(மாந்தர் - மக்கள்; உள்ளம் - மனம்)

**பொருள்:**

நீர்ப்பூக்களது தண்டின் நீளம், அவை நின்ற நீரின் அளவிலேயே இருக்கும். அதுபோல, மக்களின் உயர்வு அவர்களது ஊக்கத்தின் அளவிலேயே இருக்கும்.

### பழமொழி

சொல்வது எளிது: செய்வது அரிது.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. பழந்தமிழ்
2. அறிவியல் அறிஞர்
3. தொல்காப்பியம்
4. ஐம்பொறி
5. பகுத்தறிவு

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. சிந்தனை
2. ஐம்புலன்
3. ஆற்றல்

## 19.8 மொழிபெயர்ப்போம்

தமிழர்கள், அறிவியல் சிந்தனை உடையவர்கள். தமிழ் இலக்கியங்கள், இதனை உறுதி செய்கின்றன. பிற்காலக் கண்டுபிடிப்புகளுக்கு அவை முன்னோடியாய் விளங்கின.

______________________________

______________________________

______________________________

## 19.9 அறிந்துகொள்வோம்

1. அறிவியல் - Science
2. சிந்தனை - Thought
3. அறிவியல் ஆராய்ச்சி - Scientific research
4. முன்னோடி - Pioneer
5. ஐம்புலன் - Five senses
6. பகுத்தறிவு - Reasoning
7. ஆற்றல் - Ability
8. தாவரவியல் - Botany

## 19.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**உரிய சொற்களைக் கொண்டு கவிதையை நிறைவு செய்க.**

(தென்றல், தோகை, குழந்தை, பூக்கள், பூனை)

சிவந்த வானம் அழகு

சிரிக்கும் __________ அழகு

வீசும் __________ அழகு

வீட்டுப் __________ அழகு

மலரும் __________ அழகு

மயிலின் __________ அழகு

## 19.11 கட்டுரை எழுதுவோம்

**கீழ்க்காணும் படக்காட்சிகளையும் குறிப்புச்சொற்களையும் கொண்டு, உரைப்பகுதி உருவாக்குக.**



காடு – புறாக்கள் – வேடன் - பார்த்தல்



வேடன் – வலை – புறாக்கள்



வேடன் – பிடிக்க முயலுதல்



ஒற்றுமை - தப்புதல் - ஏமாற்றம்

## 19.12 செயல்திட்டம்

அண்டத்தின் (Galaxy) மாதிரியைச் செய்து வருக.

பாடம்

# 20

## 20.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்


விண்வெளி ஆய்வுகள் குறித்து, உங்கள் நண்பர்களுடன் வகுப்பில் கலந்துரையாடுக.

## 20.2 படிப்போம்


### என் முதல் விண்வெளிப் பயணம்





என் பெயர் கல்பனா சாவ்லா. நான் இந்தியாவில் பிறந்தேன். வானூர்தித் துறையில் பொறியியல் பட்டம் பெற்றேன். விண்வெளி தொடர்பான ஆய்வுகளை நான் மிகவும் விரும்பினேன்.




அதனால், நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் 1995இல் சேர்ந்தேன். ஈராண்டுக்குப் பின், கொலம்பியா விண்கலத்தில் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. இதுதான் என் முதல் விண்வெளிப் பயணம்.


372 : 24 : 12
இந்தப் பயணத்தின்போது விண்வெளியில் 372 மணி நேரம் இருந்ததை என் சாதனையாகக் கருதுகிறேன்.


இரண்டாவது முறையாகக் கொலம்பியா விண்கலம் ஏறி, மீண்டும் விண்வெளி சென்றேன். விண்வெளியில் 16 நாள் தங்கியிருந்து ஆய்வு செய்தேன். பூமிக்குத் திரும்பும்போது, எதிர்பாராத விதமாக விண்கலம் வெடித்ததால் உயிர் இழந்தேன்.




## பொருள் அறிவோம்

1. ஊர்தி - வாகனம்
2. சாதனை - அரிய செயல்
3. நிகழ்வு - நடைபெற்ற செயல்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் இந்தியப் பெண்மணி யார்?
2. கல்பனா சாவ்லா எத்துறையைத் தேர்ந்தெடுத்துப் படித்தார்?
3. தம் முதல் விண்வெளி நிகழ்வு எனக் கல்பனா சாவ்லா எதனைக் குறிப்பிடுகிறார்?
4. கல்பனா சாவ்லாவின் அரிய சாதனை யாது?
5. நீங்கள் எத்துறையில் சாதிக்க விரும்புகிறீர்கள்?

### ஆ) கீழ்க்காணும் வினாக்கள் சரியா? தவறா? என்பதைக் (✓) குறியிட்டு காட்டுக.

1. விண்வெளிக்குச் சென்ற முதல் இந்திய பெண்மணி வாலெண்டினா. (சரி/தவறு)
2. கல்பனா சாவ்லா வானூர்தித் துறையில் பொறியியல் பட்டம் பெற்றார். (சரி/தவறு)
3. கொலம்பியா விண்கலத்தில் சென்றதுதான் கல்பனா சாவ்லாவின் முதல் விண்வெளி நிகழ்வு (சரி/தவறு)

## 20.3 தெரிந்துகொள்வோம்

### இரட்டுறமொழிதல் (சிலேடை)

இருபொருள் தரும்படி கூறுவது **இரட்டுற மொழிதல்** ஆகும்.
இது **சிலேடை** எனவும் அழைக்கப்படும்.

| | |
|---|---|
| <br>**அந்தமானைப்** பாருங்கள்! என்னே அழகு! | <br>**அந்த மானைப்** பாருங்கள்! என்னே அழகு! |
| <br>குறிஞ்சி நிலத்தில் **மலைத்தேன்** | <br>கதையைப் படித்து **மலைத்தேன்** |
| <br>மேசைக்குத் தேவை **பலகை** | <br>ஒற்றுமைக்குத் தேவை **பல கை** |
| <br>சமையலுக்கு உதவுவது **பெருங்காயம்** | <br>கீழே விழுந்தால் ஏற்படுவது **பெருங்காயம்** |

## பயிற்சிகள்

### அ) பொருத்தமான இரட்டுறமொழிதல் சொல்லைக்கொண்டு அமையுமாறு தொடரை உருவாக்குதல்.

(பெருங்காயம், அந்தமான், பலகை)

1. ____________ கடற்கரை அழகானது.

   புலியைக் கண்டு ____________ அஞ்சி ஓடியது.

2. நாற்காலி, கதவு ஆகியவற்றைச் செய்வதற்குப் ____________ உதவுகிறது.

   ____________ இணைந்தால் பெரிய பாறையைக்கூட அசைக்கலாம்.

3. முகிலன் கல் தடுக்கிக் கீழே விழுந்தான். அதனால், ____________ ஏற்பட்டது.

   ____________ சேர்த்ததால், உணவின் சுவை கூடியது.

### ஆ) பொருத்தமான இரட்டுறமொழிதல் சொல்லைக் கண்டறிக.

(ஆறுதலை, வைகை)



____________ ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.



ஆசிரியர், வாழ்வில் முன்னேற புத்தகத்தில் ____________ என்றார்.



விமலா தேர்வில் தோல்வியடைந்த தன் தோழிக்கு ____________ கூறினாள்.



சிவா தான் கண்ட பாம்பிற்கு ____________ என்று பொய் கூறினான்.

## 20.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைக் கொண்டு, கட்டத்தில் இடம் மாறியுள்ள சொற்களைக் கண்டறிக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | | வி | வெ | ண் | ளி | |
| 2. | னா | ர | த் | ர | பா | த |
| 3. | | ந் | யா | இ | தி | |
| 4. | சை | ஈ | ப் | ர் | பு | வி |
| 5. | | ன் | மீ | ண் | வி | |

1. வான்வெளியை இப்படியும் அழைக்கலாம்.
2. இந்திய அரசின் உயரிய விருது.
3. கல்பனா சாவ்லா பிறந்த நாடு.
4. மேலே தூக்கிப் போட்ட பொருள் கீழே வர இதுதான் காரணம்.
5. இரவில் ஒளி வீசும்.

### சுவைச்செய்தி

மரியா மிட்செல் என்பவர் பற்றி அமெரிக்காவைச் சேர்ந்த வானியல் அறிஞர் ஆவார். இவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இவருடைய பெயர் வால்நட்சத்திரம் ஒன்றிற்குச் (Miss Mitchell's Comet) சூட்டப்பட்டுள்ளது. வியப்பாக இருக்கிறதல்லவா! ஏனெனில், இவர்தாம் அந்த வால்நட்சத்திரத்தைக் கண்டுபிடித்தார். கண்டுபிடித்தவரின் பெயராலேயே ஒரு வால்நட்சத்திரம் அழைக்கப்படுவது, பெருமைக்குரிய செயல்தானே!



மரியா மிட்ச்செல்
(1818-1889)

## கருத்து விளக்கப்படம்




**வினாக்கள்**

1. புகைப்படக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
2. புகைப்படக் கண்காட்சி எத்தனை நாள் நடைபெறுகிறது?
3. புகைப்படக் கண்காட்சிக்கு எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?
4. விண்ணப்பத்தை நிரப்ப இறுதிநாள் எது?
5. புகைப்படக் கண்காட்சியில் யாரெல்லாம் பங்கேற்கலாம்?

## 20.5 கேட்டல் கருத்தறிதல்

### இரப்பர் உருவான கதை

கையில் தொட்டாலே ஒட்டிக் கொள்ளும் தன்மை உடைய பொருள் இரப்பர் (Rubber). அக்காலத்தில் எந்தப் பொருளின்மீதும் தண்ணீர் ஒட்டாமல் இருக்க மட்டுமே அதனைப் பயன்படுத்தினர். ஆனால், அமெரிக்காவின் சார்லஸ் குட்இயர் (Charles Goodyear, 1800-1860) என்பவர் எக்காரணமும் இன்றி இரப்பரின் மீது அளவுகடந்த விருப்பம் கொண்டிருந்தார். அவர் இரப்பரைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர ஆய்வுகள் மேற்கொண்டார்.

ஒருநாள் ஆய்வு செய்துகொண்டிருந்தபோது, இரப்பரிலிருந்து சிறுபகுதி அருகில் எரிந்துகொண்டிருந்த அடுப்பில் விழுந்தது. அதனைக் கவனிக்காமல் தன் சோதனையைத் தொடர்ந்தார் சார்லஸ். ஆய்வு நேரம் முடிந்ததும் அடுப்பினைத் தூய்மை செய்யச் சென்றவருக்கு வியப்பு ஏற்பட்டது. அங்கு விழுந்திருந்த இரப்பர் இறுகி, கையில் ஒட்டாமல் வந்தது. மேலும் அது மென்மையாகவும் வளைந்து கொடுக்கும் தன்மையும் பெற்றிருந்தது. இதனைக் கண்டறிந்த சார்லஸ், இரப்பரில் பொருள்களை உருவாக்கி விற்பனை செய்தார். இவரை இரப்பரின் தந்தை என்று அழைக்கின்றனர்.

**வினாக்கள்**

1. இரப்பரின் இயல்பு என்ன?
2. அக்காலத்தில் இரப்பரை எதற்குப் பயன்படுத்தினர்?
3. இரப்பரை ஆய்வு செய்தவர் யார்?
4. இரப்பரை ஆய்வு செய்யும்போது நடந்தது என்ன?
5. சார்லஸ் குட் இயர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

## 20.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 20.7 செந்தமிழ்ச்செல்வம்

### நாலடியார்

அறிவது அறிந்தடங்கி அஞ்சுவது அஞ்சி
உறுவது உலகுஉவப்பச் செய்து – பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

– (பாடல் 139)

சமண முனிவர்கள்

(அஞ்சுவது - அச்சப்படுவது; உவப்ப - மகிழ; எஞ்ஞான்றும் – எப்போதும்)

**பொருள்:**

அறியவேண்டிய நன்மை, தீமைகளை அறிந்து, அடக்கமுடையவராகத் திகழவேண்டும். அச்சம் கொள்ளவேண்டிய பழிச்செயல்களுக்கு அச்சப்பட வேண்டும். செய்யவேண்டிய செயல்களை உலகம் மகிழுமாறு செய்ய வேண்டும். அறநெறியில் வந்த பொருளால் மகிழ்ந்து வாழும் இயல்பும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இப்படிபட்டவர்கள் எப்போதும் துன்புற்று வாழ்வதில்லை.

### பழமொழி

நேர்மையே சிறந்த கொள்கை

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. பூமி மேற்கிலிருந்து கிழக்காகச் சுழலும்.
2. சிறந்த விண்வெளிப் பயணம்.
3. வான்வெளியில் பறக்க ஆசை.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. விண்கலம்
2. விண்வெளி
3. பாராட்டு
4. பதக்கம்
5. மாணவர்கள்

## 20.8 மொழிபெயர்ப்போம்

**Stephen William Hawking was the greatest of cosmologist and physicist. He was born in England in 1942. After graduating he did his research in Cosmology at Cambridge.**

---

---

## 20.9 அறிந்துகொள்வோம்

1. பஞ்சு ஆலை - Cotton Mill
2. விமானம் – Aircraft
3. அதிபர் – President
4. விண்கலம் - Spacecraft
5. நேர்காணல் – Interview
6. கொள்கை – Policy
7. பயணம் - Travel
8. ஆய்வு - Research

## 20.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

உலகப் புகழ்பெற்ற அறிவியல் அறிஞர் தாமஸ் ஆல்வா எடிசனை நேர்காணல் செய்வதற்காக உங்களை அழைக்கிறார்கள். அவரிடம் என்னென்ன கேள்விகள் கேட்பீர்கள்? அவற்றை இங்கே எழுதுங்கள். தாமஸ் ஆல்வா எடிசனை நேர்காணல் செய்வதற்கான கேள்விகள்:

1. அறிவியலின் மீது உங்களுக்கு விருப்பம் ஏற்படக் காரணம் என்ன?
2. நீங்கள் எண்ணற்ற கண்டுபிடிப்புகளைத் தந்திருக்கிறீர்கள். அவற்றுள் எந்தக் கண்டுபிடிப்பை மிகவும் கடினமாக உணர்கிறீர்கள்?
3. உங்களுக்கு மிகவும் வியப்பைத் தந்த கண்டுபிடிப்பு எது?
4. ____________________
5. ____________________
6. ____________________

## 20.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு, உங்கள் நண்பருக்குக் கடிதம் எழுதுக.**

அறிவியல் கண்காட்சி – பள்ளி – ஆசிரியர் – அழைத்துச் செல்லல்- மாணவர்கள் - பார்வையிடுதல் – வியப்படைதல் - செய்து பார்த்தல் – புதிய செய்திகளைப் பெறுதல் – மகிழ்ச்சி அடைதல் – வீடு திரும்புதல்.

## 20.12 செயல்திட்டம்

செயற்கைக்கோள் அல்லது விண்கலம் மாதிரியை உருவாக்குக.

## பாடம் 21

## 21.1 பேசுவோம்




### கலந்துரையாடுவோம்

கற்றலுக்குத் துணைசெய்யும் செயலிகள் பற்றி உங்கள் நண்பர்களுடன் வகுப்பில் கலந்துரையாடுக.

## 21.2 படிப்போம்

### செயலிகள்




செயலி என்பது ஒரு பயன்பாடு. பொதுவாகச் செயலியானது கணினி மென்பொருளாகவோ, ஒரு நிரலாகவோ பயன்படுத்தப்படுகிறது. இச்செயலி, திறன்பேசிகளில் ஒரு மென்பொருளாகப் பயன்படுகிறது. செயலி என்பதை ஆங்கிலத்தில் APP என்பர். Application என்பதன் சுருக்கமே APP என்பதாகும். கையடக்கக் கருவிகளை இயக்குவதே செயலிகள்தாம் என்று கூறலாம். மனிதனின் தேவைகளை அறிந்து புதுப்புது செயலிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. பொழுதுபோக்குக்கு மட்டுமல்லாமல் கல்வி கற்பதற்கும் செயலிகள் உள்ளன. அவற்றுள் இரண்டை மட்டும் இங்கு அறிந்துகொள்வோம்.

#### சேர்த்துப் படித்தல் (Read along)



குழந்தைகள் பயன்படுத்தும் செயலிகளுள் ஒன்று 'சேர்த்துப் படித்தல்'. குழந்தைகளுக்குக் கதையும், விளையாட்டும் மிகவும் பிடிக்கும். அவர்களுக்குப் பிடித்த வடிவத்தில் இச்செயலி வடிவமைக்கப்பட்டு உள்ளது. முதலில், கதைப்பகுதிக்குள் சென்றால் அதிலுள்ள படங்களும் எளிய சொற்களும் குழந்தைகளின் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும். கதையைப் படிக்கப்படிக்க குழந்தைகளைப் பாராட்டுவதுடன் நட்சத்திரப் புள்ளிகளும் (Stars) வழங்கும்.

சொற்களைப் படிக்க முடியவில்லை என்றாலும் கவலை இல்லை. அதிலுள்ள சொற்களைத் தொட்டால், சொற்களே ஒலிக்கும். இச்செயலியில் நான்கு நிலையில் கதைகள் உள்ளன. அடுத்ததாக விளையாட்டுகள் பகுதி உள்ளது. இதில் இடம் மாறியுள்ள எழுத்துகள், விரைவாகப் படித்தல், பலூன் உடைத்தல் (பலூனில் எழுத்து வரும்) ஆகிய விளையாட்டுகள் உள்ளன. அதிகப் புள்ளிகளைப் பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது. மாணவர்கள் படித்தல் திறனில் சிறந்து விளங்க இச்செயலியைப் பயன்படுத்தலாம்.

#### சொல்லி அடி

தூய தமிழ்ச்சொற்களை மீட்டு எடுக்கும் முயற்சியினால் உருவானதே 'சொல்லி அடி' என்னும் செயலி. இச்செயலியில் நான்கு பிரிவு உண்டு. அவை, விழியோடு விளையாடு, புதையல் சொற்கள், செந்தமிழ் தேடல், இரகசிய சொற்கள் என்பன. அவற்றுள் ஐவகை விளையாட்டுகள் உள்ளன.

இன்று எண்ணற்ற செயலிகள் வெளிவருகின்றன. கல்வி, பொழுதுபோக்கு, விளையாட்டு, வாணிகம் எனப் பல்வேறு பிரிவுகளில் பயன்படுத்தப்படுகின்றன. பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அறிவை வளர்த்துக் கொள்வதற்கு இவை பேருதவி புரிகின்றன. செயலிகளைப் பதிவிறக்கம் செய்யும் முன்பு, அவற்றின் நம்பகத்தன்மையை ஆராயவேண்டும். அதன்பிறகே பதிவிறக்கம் செய்து பயன்படுத்த வேண்டும்.

## பொருள் அறிவோம்

1. ஆர்வம் - ஈடுபாடு
2. எண்ணற்ற - கணக்கற்ற
3. ஐவகை - ஐந்துவகை
4. வாணிகம் - வியாபாரம்

## பயிற்சிகள்

### அ) விடையளிப்போம்


1. செயலி என்பது என்ன?
2. செயலி என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லைக் கூறுக.
3. 'சேர்த்துப் படித்தல்' (Read along) செயலியில் உங்களுக்குப் பிடித்த பகுதி எது?
4. 'சொல்லி அடி' செயலி எதற்குப் பயன்படுகிறது?
5. ஒரு செயலியைப் பதிவிறக்கம் செய்வதற்குமுன் நாம் என்ன செய்யவேண்டும்?

### ஆ) பின்வரும் வினாக்கள் சரியா/தவறா எனக் குறிப்பிடுக.

1. செயலி என்பதை மென்பொருளாகவோ நிரலாகவோ பயன்படுத்துவது இல்லை. (சரி/ தவறு)
2. Application என்பதன் சுருக்கமே APP என்பதாகும். (சரி/ தவறு)
3. பொழுதுபோக்குக்காக மட்டும் செயலிகள் உருவாக்கப்படுகின்றன. (சரி/ தவறு)
4. 'சேர்த்துப் படித்தல்' செயலியில் ஐந்து நிலையில் கதைகள் உள்ளன. (சரி/ தவறு)
5. 'சொல்லி அடி' என்ற செயலி தூய தமிழ்ச்சொற்களை மீட்டு எடுக்கும் முயற்சியினால் உருவாக்கப்பட்டது. (சரி/ தவறு)

## 21.3 தெரிந்துகொள்வோம்

**வினையெச்ச வகைகள்**




### தெரிநிலை வினையெச்சம்

> செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினையெச்சம்.

(எ.கா.) எழுதி வந்தான்

இத்தொடரில் எழுதி என்னும் எச்சம், எழுதுதல் என்ற செயலையும் இறந்த காலத்தையும் வெளிப்படையாகக் காட்டுகிறது. எனவே, இது தெரிநிலை வினையெச்சம் ஆகும்.

### குறிப்பு வினையெச்சம்

> காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் குறிப்பால் பண்பை (குணத்தை) மட்டும் உணர்த்தி வருவது குறிப்பு வினையெச்சம்.

(எ.கா.) மெல்லப் பேசினாள்

'மெல்ல' என்னும் வினையெச்சம் காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. 'மெல்ல' என்னும் பண்பு மட்டும் உணர்த்தப்படுவதால் இது குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

## பயிற்சிகள்

### அ) உரையாடலைப் படித்து வினையெச்சச்சொற்களைக் கோடிட்டுக்காட்டுக.

| | | |
|---|---|---|
| அண்ணன் | : | தம்பி படித்துவிட்டானா? |
| அக்கா | : | அவன் இப்போதுதான் படித்து முடித்தான். |
| அண்ணன் | : | அவன் எங்கே? |
| அக்கா | : | நண்பன் வீட்டிற்குச் சென்றுள்ளான். |
| அண்ணன் | : | மிதிவண்டியிலா சென்றான்? |
| அக்கா | : | இல்லை. நடந்து சென்றான். |
| அண்ணன் | : | எப்போது வருவான்? |
| அக்கா | : | விரைந்து வருவான். |

### ஆ) உரைப்பகுதியைப் படித்து வினையெச்சங்களை அட்டவணைப்படுத்துக.

தேன்மொழி நூலகத்திற்குச் சென்று தனக்குப் பிடித்த நூல்களை மெல்லத் தேடினாள். தேடி எடுத்த நூலை ஆர்வத்துடன் விரைந்து படித்தாள். தன் நண்பர்களுக்கும் படித்ததை எடுத்துக் கூறினாள். நண்பர்கள் மகிழ்ந்து பாராட்டினர்.

| தெரிநிலை வினையெச்சம் | குறிப்பு வினையெச்சம் |
|---|---|
| | |
| | |


### இ) பின்வரும் வினாக்களைப் பொருத்தமான வினையெச்சங்கள் கொண்டு நிரப்புக.

(நடந்து சென்றான், மெல்ல நடந்தான், எழுதி வந்தனர், விரைந்து சென்றான், விரைந்து எழுதினர்)

1. செல்வத்திற்கு காலில் அடிபட்டதால் ________________.
2. தேர்வு முடியும் நேரம் நெருங்கியதால் மாணவர்கள் ________________.
3. இரயில் வண்டியைக் குறித்த நேரத்தில் பிடிக்க சரவணன் தன் நண்பர்களுடன் ________________.
4. குமரன் காய்கறிகள் வாங்க கடைக்கு ________________.
5. ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாடத்தை மாணவர்கள் ________________.

## 21.4 மொழியோடு விளையாடுவோம்

**புள்ளிகளை இணைத்துப் பழத்தில் மறைந்துள்ள பழமொழியைக் கண்டறிந்து எழுதுக.**




______________________________________________

## சுவைச்செய்தி

நுண்செயலி (Processor) என்பது கணினியின் மூளை போன்று செயல்படுவது. கணினியில் விரும்பிய செயல்களை மேற்கொள்ள, நிரல்களை வடிவமைக்க, நினைவகத்திலிருந்து (memory) தரவுகளைப் (data) பயன்படுத்த, வெற்றிகரமாக கணிதச் செயல்பாடுகளை நிறைவேற்ற என்று பல வழிகளிலும் இந்த நுண்செயலி பணியாற்றுகிறது.

அமெரிக்காவின் இன்டெல் (Intel) நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த தொழில்நுட்ப வல்லுநரான மர்சியன் டெடோஃப் (Marcian Tedoff) என்பவர் 1969ஆம் ஆண்டு முதலாவது நுண்செயலியை உருவாக்கி அதற்கு இன்டெல்-4004 எனப் பெயரிட்டார். இது 1971ஆம் ஆண்டு விற்பனைக்கு வந்தது. இதற்கான காப்புரிமையை இன்டெல் நிறுவனம் பெற்றது.

## 21.5 கேட்டல் கருத்தறிதல்

### நுட்பமான அறிவு

பேராசிரியர் ஒருவர் தம் நண்பர்களுடன் எகிப்து பிரமிடுகளைப் பார்க்கச் சென்றார். அப்போது நண்பர்களுள் ஒருவர், பேராசிரியரிடம் 'இந்தப் பிரமிடின் உயரத்தைச் சரியாகக் கூறமுடியுமா?' என்று கேட்டார். அதற்குப் பேராசிரியர் 'முடியும்' என்றார். அருகில் இருந்தவர்கள் பேராசிரியர் கூறியதை நம்ப மறுத்தனர். பேராசிரியர் உடனே தம் கையில் வைத்திருந்த அளவுநாடாவைக்(Tap) கொண்டு பிரமிடின் நிழலை அளந்தார். பிறகு அதே டேப்பில் தம் நிழலை அளந்தார். தம் நிழலையும் உயரத்தையும் கணக்கிட்ட அவர், பிரமிட்டின் உயரத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டுச் சொன்னார். நண்பர்கள் பேராசிரியரின் அறிவை வியந்து பாராட்டினர். அப்பொழுது பேராசிரியர் 'நண்பர்களே இந்த உலகில் இயலாத செயல் என்று எதுவும் இல்லை. எதற்கும் எளிய வழி ஒன்று உள்ளது' என்று கூறினார்.

**வினாக்கள்**

1. பேராசிரியர் தம் நண்பர்களுடன் எங்குச் சென்றார்?
2. நண்பர், பேராசிரியரிடம் என்ன கேட்டார்?
3. பிரமிடின் உயரத்தை அளக்க பேராசிரியர் பயன்படுத்திய பொருள் எது?
4. பேராசிரியர் பிரமிடின் உயரத்தை எவ்வாறு கணக்கிட்டார்?
5. தம்மைப் பாராட்டிய நண்பர்களிடம் பேராசிரியர் என்ன கூறினார்?

## 21.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 21.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

– (குறள் 156)

-திருவள்ளுவர்

ஒறுத்தார் – வருத்துபவர்; இன்பம் - மகிழ்ச்சி; பொறுத்தார் – பொறுத்துக்கொள்பவர்

**பொருள்:**

தீங்கு செய்தவர்களை வருத்துபவர்களுக்கு அன்று ஒருநாள் மட்டும் மகிழ்ச்சி கிடைக்கும். அதனைப் பொறுத்துக்கொள்பவர்களுக்கோ உலகம் அழியும்வரை புகழ் கிடைக்கும்.

### பழமொழி

பொறுத்தார் பூமி ஆள்வார்

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. கையடக்கக் கருவி
2. விளையாட்டுகள்
3. பாராட்டுகள்
4. விழியோடு விளையாடு
5. செந்தமிழ்த் தேடல்

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. திறன்பேசி
2. ஆர்வம்
3. மென்பொருள்

## 21.8 மொழிபெயர்ப்போம்

இணைய நூலகம் மாணவர்களுக்கு மிகவும் பயனளிக்கக் கூடியதாக உள்ளது. இணைய நூலகத்தில் பல்வேறு நூல்கள் சேமிக்கப்பட்டுள்ளன. அகராதிகள், இலக்கியங்கள், கதைநூல்கள், பாடநூல்கள், பல்துறை நூல்கள் போன்றவற்றைப் படித்துப் பயன்பெறலாம்.

________________________________________

________________________________________

________________________________________

## 21.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கணினி | – | Computer |
| 2. | மென்பொருள் | - | Software |
| 3. | நிரல் | – | Programme |
| 4. | திறன்பேசி | – | Smart Phone |
| 5. | பதிவிறக்கம் | – | Download |
| 6. | செயலி | - | Application (APP) |
| 7. | பொழுதுபோக்கு | - | Entertainment |
| 8. | வடிவம் | - | Design |
| 9. | ஆர்வம் | - | Interest |
| 10. | தூண்டுதல் | - | Stimulation |

## 21.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**பின்வரும் பாடலைப் படித்துத் தொடர்ந்து எழுதுக.**

பூ பூ என்ன பூ?

மல்லிகைப் பூ

என்ன மல்லிகை ?

காட்டு மல்லிகை

என்ன காடு?

____________________

____________________

______________________________

______________________________

______________________________

## 21.11 உயர்நிலைத்திறன்

**பின்வரும் குறிப்புச்சொற்களைப் பயன்படுத்தி, அழைப்பிதழுக்கான செய்தியை உருவாக்குக.**

பள்ளி – ஆண்டுவிழா – நாள் – இடம் – நேரம் - தலைமையுரை – வாழ்த்துரை - கலை நிகழ்ச்சிகள் - சிறப்பு விருந்தினர் - சிறப்புரை – போட்டிகள் – பரிசுகள் - நன்றியுரை

## 21.12 செயல்திட்டம்

தமிழ்ச் செயலிகளின் பயன்பாட்டை நழுவமாக (PPT) உருவாக்குக.

பாடம் 22

## 22.1 பேசுவோம்




### கலந்துரையாடுவோம்

சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது குறித்தும் அவற்றைப் பாதுகாப்பாகக் கையாளுவது குறித்தும் ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 22.2 படிப்போம்

### சமூக ஊடகமும் இணையப் பாதுகாப்பும்

இணையம் இல்லை எனில், இவ்வுலகம்கூட இயக்கத்தை நிறுத்திவிடுமோ என நாம் கருதும் அளவிற்கு இணையத்தின் பயன்பாடு மிகுந்துள்ளது. இணையத்தால் ஏற்படும் நன்மைகள் மிகுதி. ஆயினும், அறியாமையால் சில எதிர்மறையான விளைவுகளும் ஏற்பட்டுவிடுகின்றன. எனவே, சமூக ஊடகத்தைப் பயன்படுத்தும்போது, நாம் எத்தகைய பாதுகாப்பு முறைகளைக் கையாளலாம் என்பதைப் பின்வரும் சூழல்கள் மூலம் அறிந்துகொள்வோம்.



சூழல் – 1

கதிர் : அம்மா! எனக்கு ஓர் உதவி செய்யுங்கள்.

அம்மா : என்ன உதவி கதிர்?

கதிர் : ஒரு கட்டுரை எழுதவேண்டும் அம்மா. உங்களுடைய மடிக்கணினியைக் கொடுங்கள்.

அம்மா : நீயே தட்டச்சு செய்யப்போகிறாயா?

கதிர் : இல்லை, அம்மா. இணையத்தில் கட்டுரைக்கான செய்திகளைத் தேடிய பின்னர்தான் எழுதுவேன்.

அம்மா : ஓ! சரி, சரி. இதோ தருகிறேன். உன் பணி முடிந்தவுடன் மடிக்கணினியைக் கொடுத்துவிட வேண்டும்.

(அம்மா, சிறுவர்களுக்கான பாதுகாப்புச் செயலியை இயக்கியபின், கதிரிடம் தருகிறார்)

சூழல் - 2

இலக்கியா : சுடர்! இந்தப் புகைப்படம் நன்றாக உள்ளதே!



சுடர்விழி : அப்படியா? நன்றி இலக்கியா.


இலக்கியா : நீ ஏன் இதனை முகநூல் (Facebook) சுயவிவரம் (Profile) வைக்கக் கூடாது?

சுடர்விழி : அதனை எடுத்து யாராவது தவறாகப் பயன்படுத்திவிட்டால் என்ன செய்வது?

இலக்கியா : அப்படி இல்லை சுடர். சுயவிவரம் பாதுகாப்பு (Profile Lock) என்னும் வசதி உள்ளது. அதனைச் செய்துவிட்டால், உன் நண்பர்களால் மட்டுமே உன் விவரங்களையும் புகைப்படத்தையும் காண முடியும். மற்றவர்களால் உன் சிறிய அளவிலான புகைப்படத்தை மட்டுமே பார்க்கமுடியும். அதைப் பதிவிறக்கம் செய்யவோ, பெரியதாக்கிப் பார்க்கவோ முடியாது.

சுடர்விழி : அப்படியா? இப்படி ஒரு வசதி உள்ளதா? அதனை இப்போதே செய்துவிடுகிறேன். நன்றி இலக்கியா.

சூழல் - 3




கவின் : அப்பா, என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள்?

அப்பா : என் செல்பேசியில் ஓர் அழைப்பு வந்தது கவின். எனக்கு ₹5 இலட்சம் ரூபாய் பரிசு கிடைத்துள்ளதாம். அதனை அனுப்புவதற்கு, என் வங்கிக் கணக்கு எண் (Bank Account No.) , கடன் அட்டை எண் (Credit Card No.), நிரந்தரக் கணக்கு அட்டை எண் (PAN CARD No.) ஆகியவற்றை அனுப்புமாறு கேட்டிருந்தனர். அதனை அனுப்ப உள்ளேன்.

கவின் : உங்களுடன் யார் தொடர்பு கொண்டார்கள்?

அப்பா : வங்கியிலிருந்து பேசுவதாகத்தான் கூறினார்கள்.

கவின் : அப்பா! எந்த வங்கியும் நீங்கள் சொல்லும் விவரங்களைச் செல்பேசியில் அழைத்தோ, குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ கேட்காது.

அப்பா : அப்படியா? யார் எனக்கு அழைப்பு விடுத்திருப்பார்கள்?

கவின் : உங்களை யாரோ ஏமாற்ற முயற்சி செய்துள்ளனர் அப்பா. இனிமேல் வங்கி தொடர்புடைய தகவல்கள், அதன் கடவுச்சொல் (Password), ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் கடவுச்சொல் (OTP) ஆகியவற்றை யாருடனும் பகிர்ந்து கொள்ளாதீர்கள்.

அப்பா : சரி, கவின். இனி, நான் கவனமாக இருப்பேன்.

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. கதிர் தன் அம்மாவிடம் எதற்காக மடிக்கணினி கேட்டான்?
2. பாதுகாப்புச் செயலி எதற்காக இயக்கப்படுகிறது?
3. சுடர்விழி ஏன் தன் படத்தை முகநூலில் பதிவிடத் தயங்கினாள்?
4. சுயவிவர பாதுகாப்பு (Profile Lock) என்றால் என்ன?
5. கடவுச்சொல்லின் பயன்பாட்டைக் கூறுக.

### ஆ) சரியா, தவறா எனக் கூறுக.

1. இணையங்கள் நமக்குத் தேவையான செய்திகளைத் தருகின்றன. ( )
2. குழந்தைகளின் பாதுகாப்பிற்காகப் பாதுகாப்புச் செயலிகள் உள்ளன. ( )
3. முகநூலில் சுயவிவர பாதுகாப்பு என்னும் வசதி உள்ளது. ( )
4. வங்கியானது செல்பேசியில் அழைத்து விவரங்களைக் கேட்காது. ( )
5. கடவுச்சொல்லை அனைவருடனும் பகிரலாம். ( )

### இ) கீழ்க்காணும் விழிப்புணர்வுச் செய்திகள் விடையாக வருமாறு, வினாக்கள் உருவாக்குக.

சமூக ஊடகத்தைப் பாதுகாப்பாகப் பயன்படுத்த நாம் கவனிக்க வேண்டியவை உள்ளன. அவை,

1. அறிமுகம் இல்லாதவர்களுடன் சமூக வலைத்தளங்களில் இணைதல் கூடாது.
2. உங்கள் புகைப்படத்தை இணையத்தில் வெளியிடும்போது மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.
3. உங்கள் கடவுச் சொற்களை (Password) நீங்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
4. நீங்கள் பயன்படுத்தும் திறன்பேசி, கணினி, மடிக்கணினியை அவ்வப்போது மேம்படுத்துதல் (Update) செய்ய வேண்டும். மேலும், அதில் வைரஸ்(Virus) தாக்குதல் ஏற்படாமலிருக்க வைரஸ் எதிர்ப்பு (Anti-Virus) பயன்படுத்துதல் வேண்டும்.

வினாக்கள்

1. ______________________________
2. ______________________________
3. ______________________________
4. ______________________________

## 22.3 தெரிந்துகொள்வோம்

### ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

தமிழில் சில எழுத்துகளின் ஒலிகள் ஏறத்தாழ ஒரே மாதிரியாக இருப்பதுபோல் தோன்றும். ஆனால், அவை வடிவம், பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி, கால அளவு ஆகியவற்றால் மாறுபடும். அவற்றை நாம் சரியாகப் பின்பற்றினால் பிழை நேர்வதைத் தவிர்க்கலாம்.

### ஓர் எழுத்து மாறுவதால் பொருள் மாற்றமடையும் சொற்கள்



மலர்கள் மணம் வீசின.



மனம் போல் வாழ்வு




மயில் அழகாக ஆடும்.



கிளியின் அலகு சிவப்பு நிறம்



உன்மீது அக்கறை உள்ளது.



ஆற்றின் அக்கரையில் யானை இருந்தது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மணம் | – | வாசனை | மனம் | – | உள்ளம் |
| அழகு | - | வனப்பு | அலகு | – | பறவையின் மூக்கு |
| அக்கறை | - | ஈடுபாடு | அக்கரை | – | அந்தக் கரை |

## பயிற்சிகள்

**அ) பொருத்தமான சொல்லைக் கொண்டு தொடரை நிறைவு செய்க.**

1. பார்க்க உதவுவது ____________________ (கண்/ கன்)
2. நண்பர்கள் ____________________ (வந்தனர்/ வந்தநர்)
3. பூனைக்குப் பிடித்தது ____________________ (பால்/ பாழ்)
4. மீன் பிடிக்க உதவுவது ____________________ (வளை/ வலை)
5. மனத்தில் ____________________ (உறுதி/ உருதி) வேண்டும்.
6. காலம் ____________________ (கருதி/ கறுதி) செயல்பட வேண்டும்.

**ஆ) தொடரில் காணப்படும் பிழைகளை வட்டமிடுக.**

1. கடற்கறையில் மக்கல் கூடிணர்.
2. குளந்தை சிறித்தது.
3. உழவர் காலையுடன் சென்றார்.
4. புராவும் எரும்பும் நன்பர்கல்.
5. கன்ணாடி முகம் பாற்க்க உதவும்.

**இ) கீழ்க்காணும் உரைப்பகுதியிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**


அகிலனும் அவண் நண்பனும் பூங்காவிர்குச் சென்றநர். அங்குப் பன்து விலையாடிநர். அப்போது மலை பெய்தது. இருவறும் மழையை இரசித்தவாரே வீட்டிற்கு வந்தனர்.

**ஈ) பொருத்துக**

1. மனம் - வனப்பு
2. மணம் - உள்ளம்
3. அழகு - மீன் பிடிக்க உதவுவது
4. அலகு - பறவையின் மூக்கு
5. வலை - வாசனை

## 22.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் படித்துக் கட்டங்களைக் கீழிருந்து மேலாக நிரப்புக.**




1. ஐம்பொறியினுள் ஒன்று
2. மரம், செடி, கொடி நிறைந்த இடம்
3. அழகைக் குறிக்கும் வேறு சொல்
4. முத்தமிழில் முதல் தமிழ்
5. ஐந்துக்குப்பின் வரும் ஓர் எண்
6. தொட்டால் சுடும் ஓரெழுத்து

## சுவைச்செய்தி

ஒரு கடிதத்தை இவர்தாம் எழுதினார் என்பதை உறுதிப்படுத்த உதவுவது அவருடைய கையொப்பமாகும். அதுபோலவே கணிப்பொறி வழியே பெறப்படும் தகவலை இவர்தாம் அனுப்பினார் என்பதை உறுதிப்படுத்த உதவுவதே மின்னணு கையொப்பம் (Digital Signature) ஆகும். இதன் அடிப்படையிலேயே வங்கியில் இணையவழிப் (on-line) பணப் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்திறவி வழங்கப்பட்டிருக்கும். அனைத்து வாடிக்கையாளர்களின் பொதுத்திறவியும் வங்கியிடம் இருக்கும்.

## 22.5 கேட்டல் கருத்தறிதல்


### அறிவே ஆயுதம்

தாமஸ் ஆல்வா எடிசன் வீட்டிற்கு நண்பர் ஒருவர் வந்திருந்தார். அவர் எடிசனைப் பார்த்து, 'வீட்டின் வெளிப்புறத்தில் சுழல்கதவு உள்ளதே, அதனைச் சுற்றிக்கொண்டு உள்ளே வருவது கடினமாக உள்ளது' என்றார். அதற்குத் தாமஸ் ஆல்வா எடிசன், 'அது ஒன்றுமில்லை. உங்களுக்குக் கடினமாக இருப்பது, எனக்கு மிகப்பயனுடையதாக இருக்கிறது' என்றார். 'அதெப்படி' என்று நண்பர் வியப்புடன் கேட்டார். அதற்கு எடிசன், 'அந்தக் கதவுடன் ஓர் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. கதவு ஒரு முறை சுற்றினால், அது எட்டு லிட்டர் தண்ணீரைத் தொட்டியில் நிரப்பும்' என்றார்.

**வினாக்கள்**

1. தாமஸ் ஆல்வா எடிசன் வீட்டிற்கு வந்தவர் யார்?
2. தாமஸ் ஆல்வா எடிசனின் வீட்டினுள் வர என்ன செய்ய வேண்டும்?
3. தாமஸ் ஆல்வா எடிசனின் நண்பர் ஏன் வியப்படைந்தார்?
4. சுழல்கதவுடன் என்ன பொருத்தப்பட்டிருந்தது?
5. சுழல்கதவைச் சுற்றினால் என்ன நிகழும்?

## 22.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 22.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

–(குறள் 293)

-திருவள்ளுவர்

(நெஞ்சு – மனம்; சுடும் – வருத்தும்)

**பொருள்:**

ஒருவர் தம் மனம் அறிய பொய் கூறக்கூடாது. அவ்வாறு கூறினால், அவர் மனமே அவரை வருத்தும்.

**பழமொழி**

பாம்பின் கால் பாம்பறியும்

### சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. சிறுவர்களுக்கான பாதுகாப்புச் செயலி.
2. முகநூலில் பதிவேற்றம் செய்தல்.
3. கடவுச்சொல்லைப் பகிர்தல் கூடாது.

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. வங்கி கணக்கு எண்
2. செல்பேசி
3. மடிக்கணினி
4. செயலி

## 22.8 மொழிபெயர்ப்போம்

உலகின் எந்த மூலையிலிருந்தும் நமக்குத் தேவைப்படும் செய்திகளை இணையத்தின் வழி உடனுக்குடன் பெறமுடியும்.

## 22.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | இணையப் பாதுகாப்பு | - | Cyber Safety |
| 2. | பாதுகாப்பு | - | Protection |
| 3. | மடிக்கணினி | - | Laptop |
| 4. | தட்டச்சு | - | Typewriting |
| 5. | ஒளிப்படம் | - | Photograph |
| 6. | வசதி | - | Facility |
| 7. | வங்கி | - | Bank |
| 8. | வங்கிக்கணக்கு | - | Bank Account |
| 9. | கடன் அட்டை | - | Credit Card |
| 10. | குறுஞ்செய்தி | - | Short Message Service (SMS) |

## 22.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் விடைகள் வருமாறு, ஐந்து விடுகதை உருவாக்குக.**

1. தண்ணீர்

   விடுகதை - அள்ள முடியும்; ஆனால், கிள்ள முடியாது. அது என்ன?

2. குடை

   விடுகதை -வெளியில் விரியும்; வீட்டில் சுருங்கும். அது என்ன?

3. உப்பு

   விடுகதை ______________________________ அது என்ன?

4. குதிரை

   விடுகதை ______________________________ அது என்ன?

5. மழை

   விடுகதை ______________________________ அது என்ன?

6. சக்கரம்

   விடுகதை ______________________________ அது என்ன?

7. புகை

   விடுகதை ______________________________ அது என்ன?

## 22.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் குறிப்புச்சொற்களைக் கொண்டு, சிறுகதை எழுதுக.**

வாணி – மீனா – தோழிகள் – ஒரே வகுப்பு – கூடைப்பந்து – விளையாட்டில் ஆர்வம் – வாணியின் பெற்றோர் – ஊக்குவித்தல் – மீனாவின் பெற்றோர் – படிப்புக்கு இடையூறு - தடை செய்தல் – மீனா வருந்துதல் – பள்ளியில் விழா – பெற்றோர் கலந்து கொள்ளுதல் – படிப்பு, விளையாட்டு – இரண்டுமே தேவை – ஆசிரியர் வலியுறுத்தல் – உடல் வலிமை – விளையாட்டு – மீனாவின் பெற்றோர் – புரிந்துகொள்ளல் – விளையாட அனுமதித்தல்.

## 22.12 செயல்திட்டம்

பாதுகாப்பாக இணையத்தைப் பயன்படுத்தும் நிகழ்வு ஒன்றினைக் காணொலியாக உருவாக்குக.

பாடம்
# 23

## 23.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

நீதிமன்றத்தின் செயல்பாடுகள் பற்றி உங்கள் நண்பர்களுடன் வகுப்பில் கலந்துரையாடுக.

## 23.2 படிப்போம்

### ஆராய்ச்சி மணி

(ஆராய்ச்சி மணியின் ஒலி கேட்கிறது)



**சூழல்**

**இடம் :** அரசவை

**பங்குபெறுவோர் :** (மன்னர் (மனுநீதிச்சோழன் ), அமைச்சர், பசு, காவலர்)

மன்னன் : அமைச்சரே...! ஆராய்ச்சி மணியின் ஒலி கேட்கிறதே! யார் அடிப்பது என்று பார்த்து வாருங்கள்.

அமைச்சர் : இதோ.. அறிந்து வருகிறேன் மன்னா!

மன்னன் : யாருக்கு என்ன துன்பம் நேர்ந்திருக்கும் ...?

(காவலருடன் அமைச்சர் வருதல்)

அமைச்சர் : மன்னா! பசு ஒன்று மணி அடிக்கிறது

மன்னன் : என்ன ... பசு மணியடிக்கிறதா? ஏன்? அதற்கு என்னவாயிற்று?

அமைச்சர் : அதற்கான காரணத்தை நம் காவலர் அறிந்து வந்துள்ளார்.

மன்னன் : காவலரே! என்னவாயிற்று?

காவலர் : புகழுடைய மன்னருக்கு வணக்கம்! நம் இளவரசர் தேரில் நகரைச் சுற்றிப்பார்க்கச் சென்றபோது...

மன்னன் : சுற்றிப்பார்க்கச் சென்றபோது என்ன நடந்தது? அதற்கும் பசுவுக்கும் என்ன தொடர்பு? விரைந்து சொல், காவலா!

காவலர் : பசுவின் கன்று ஒன்று தேர்க்காலில் அகப்பட்டு இறந்துவிட்டது மன்னா. அதன் தாய்ப்பசு நீதி கேட்டு மணி அடிக்கிறது மன்னா.

மன்னன் : அமைச்சரே! கன்றை இழந்து வருந்தும் தாய்ப்பசுவிற்குத் தக்க நீதி வழங்க வேண்டும். எங்கே... என் மகன்? அவனை அழைத்து வாருங்கள். கன்றின் நிலையை இளவரசரும் அடைய வேண்டும். உடனே அழைத்து வாருங்கள்...


அமைச்சர் : என்ன கூறுகிறீர்கள் மன்னா ...? இளவரசர் தங்களின் வாரிசு. அவர் இந்த நாட்டின் எதிர்கால மன்னராயிற்றே!

மன்னன் : அதற்காக விட்டுவிட வேண்டுமா என்ன? அமைச்சரே! பசு தன் கன்றை இழந்து வருந்துகிறது. அதற்கும் நீதி வழங்க வேண்டும் அல்லவா?

அமைச்சர் : அது வந்து மன்னா... இறந்ததோ பசுவின் கன்று. அதனால்...

மன்னன் : அதனால் என்ன அமைச்சரே? நீங்கள் தயங்குவது வேடிக்கையாக உள்ளது. மன்னனுக்கு நாட்டின் உயிர்கள் அனைத்தும் ஒன்றுதான் என்பதை மறந்துவிட்டீர்களா? மக்கள் தவறு செய்தால் மட்டும் தண்டனையா? மன்னனின் மகன் தவறிழைத்தால் மன்னிப்பா? சிபி மன்னரைப் பற்றித் தங்களுக்குத் தெரியும்தானே?

அமைச்சர் : நன்றாகத் தெரியும் மன்னா... பருந்து ஒன்று புறாவைத் துரத்திச் சென்றது. பருந்திடமிருந்து தப்பிக்க, அந்தப் புறா சிபி மன்னரிடம் தஞ்சம் அடைந்தது. அப்புறாவிற்காகத் தம் தசையைக் கொடுத்தவர் ஆயிற்றே!



மன்னன் : அந்தச் சிபி மன்னரின் வழித்தோன்றல் நான்! "எல்லா உயிர்களையும் தம் உயிர்போல்" பாதுகாப்பது மன்னரின் கடமையல்லவா? நான் என் மகனைத் தண்டிக்கத் தவறுதல் முறையன்று அமைச்சரே! உடனே தண்டனையை நிறைவேற்றுங்கள்.

(தண்டனை நிறைவேற்றப்பட்டது. தேர்க்காலில் அடிப்பட்டுப் இளவரசர் இறந்தார்.)

## பொருள் அறிவோம்

1. வேடிக்கை - வியப்பு
2. தஞ்சம் - அடைக்கலம்

## பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. ஆராய்ச்சி மணியை அடித்தது எது?
2. பசு நீதி கேட்கக் காரணம் என்ன?
3. பசு நீதி கேட்டதற்கான காரணத்தைக் கூறியவர் யார்?
4. மனுநீதிச்சோழன், தாம் யாருடைய வழித்தோன்றல் என்று கூறினார்?
5. மனுநீதிச்சோழன் சிறந்த ஆட்சியாளன் என்பதற்குக் காரணங்கள் கூறுக.

**ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

(தேர்க்காலில், தம் உயிர்போல், சிபி, ஆராய்ச்சி மணியை, காவலர்)

1. பசு ________________ அடித்தது.
2. பசு, மணி அடித்ததற்கான காரணத்தைக் கூறியவர் ________________.
3. பசுவின் கன்று ________________ அடிபட்டு இறந்துவிட்டது.
4. "எல்லா உயிர்களையும் ________________" பாதுகாப்பது மன்னரின் கடமை.
5. மனுநீதிச் சோழன் ________________ மன்னரின் வழித்தோன்றல்.

**இ) பின்வரும் வினாக்கள் சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக.**

1. பசுவின் கன்று ஒன்று ஆராய்ச்சி மணியை அடிக்கிறது. (சரி/தவறு)
2. இளவரசர் தேரில் நகரைச் சுற்றிப்பார்க்கச் சென்றார். (சரி/தவறு)
3. புறா ஒன்று பருந்திடமிருந்து தப்பிக்க மனுநீதிச் சோழரிடம் தஞ்சம் அடைந்தது. (சரி/தவறு)
4. இளவரசர் சென்ற தேர்க்காலில் அடிப்பட்டுப் பசு ஒன்று இறந்தது. (சரி/தவறு)
5. நாட்டின் மன்னனுக்கு உயிர்கள் அனைத்தும் ஒன்றுதான். (சரி/தவறு)

## 23.3 தெரிந்துகொள்வோம்

### வேற்றுமை

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. அது எட்டு வகைப்படும். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை. மற்ற உருபுகள் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன.



எழிலன் பார்த்தான்



எழிலனைப் பார்த்தான்



கண்ணன் தந்தான்



கண்ணனுக்குத் தந்தான்



கை கழுவினான்



கையால் கழுவினான்

## பயிற்சிகள்

**அ) தொடரில் வேற்றுமை உருபுகளைக் கண்டறிக.**

(ஐ, ஆல், கு)

| தொடர்கள் | உருபுகள் |
|---|---|
| அழகன் வரைந்தான்.<br>அழகனை வரைந்தான். | |
| கலையரசன் பேசினான்.<br>கலையரசனால் பேசினான். | |
| அறிவு உணவளித்தான்.<br>அறிவுக்கு உணவளித்தான். | |

**ஆ) தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகளை வட்டமிடுக.**

1. தம்பி தங்கையை அழைத்தான். (ஐ, ஆல், கு)
2. அண்ணன் நகத்தை வெட்டினான். (ஐ, ஆல், கு)
3. பூச்செடி அம்மாவால் நடப்பட்டது. (ஐ, ஆல், கு)
4. உணவு அப்பாவால் சமைக்கப்பட்டது. (ஐ, ஆல், கு)
5. தாத்தா எனக்குக் கதை கூறினார். (ஐ, ஆல், கு)
6. பாட்டிக்குப் பிறந்தநாள் கொண்டாடினோம். (ஐ, ஆல், கு)

**இ) பொருத்தமான சொல்லை நிரப்பிக் கதையை நிறைவு செய்க.**

ஓர் ஊரில் வினோதினி என்பவள் காய்கறி விற்றாள். அவள் நாள்தோறும் காய்கறி (1) ____________ மாட்டுவண்டியைப் பயன்படுத்தினாள். (2) ____________ இழுக்க மாடுகள் இரண்டு இருந்தன. (3) ____________ பணம் ஈட்டுவதிலேயே கவனம் இருந்தது. (4) ____________, மாடுகளைச் சரிவரக் கவனிப்பதில்லை. இதனைக் கண்ட வினோதினியின் கணவன், மனைவியின் (5) ____________ மாற்ற முயற்சி செய்தான். சுவர் (6) ____________ தான் சித்திரம் வரைய முடியும் என்பதை உணர்ந்த வினோதினியும் நாளடைவில் மனம் மாறினாள்.

| | | |
|---|---|---|
| 1. விற்பதற்கு | விற்பதை | விற்பதால் |
| 2. வண்டிக்கு | வண்டியை | வண்டியால் |
| 3. வினோதினியை | வினோதினியால் | வினோதினிக்கு |
| 4. அதனை | அதனால் | அதற்கு |
| 5. குணத்திற்கு | குணத்தை | குணத்தால் |
| 6. இருந்ததற்கு | இருந்ததை | இருந்தால் |

ஈ) உருபுகள் சேர்க்கப்பட்ட சொற்களை வகைப்படுத்தி எழுதுக.

| | | |
|---|---|---|
| பாம்பை | தமிழரசிக்கு | மரத்தால் |
| பூனைக்கு | சிங்கத்தை | வீட்டிற்கு |
| பள்ளியால் | பாடலை | கையால் |

| ஐ | ஆல் | கு |
|---|---|---|
| | | |
| | | |

## 23.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் படித்துக் கட்டங்களை நிரப்புக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | |
| | | | | | 5 |
| | | 3 | | | |
| 4 | | | | | 6 |
| | | | | | |
| | | | 7 | | 8 |

### இடமிருந்து வலம்

1. கால் நனைத்து மகிழும் இடம்.
3. ஐந்துக்குப் பின் வரும் ஓர் எண்.
4. நவீன உலக கருவி.

### வலமிருந்து இடம்

6. கேட்கும் உறுப்பு.
8. மாமல்லபுரத்தின் புகழுக்கு இதுதான் காரணம்.

### மேலிருந்து கீழ்

1. உறங்கினால் வரும்.
2. யானையின் இளமைப்பெயர்.
3. தமிழ் மாதங்களுள் ஒன்று.
4. ஒருமையைப் பன்மையாக்கும் சொல்.
5. பொருள்களைக் காட்சிக்கு வைத்திருக்கும் இடம்.

### கீழிருந்து மேல்

7. ஒட்டுவதற்குப் பயன்படும் பொருள்.

## சுவைச்செய்தி



மனுநீதிச்சோழன், தமிழ்நாட்டில் திருவாரூர் பகுதியை ஆட்சி செய்தவர் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. அங்குள்ள கோவிலில், வரலாற்றுச் சிறப்புமிக்க கல்தேர் உள்ளது. இந்தத் தேர் மனுநீதிச் சோழனின் வரலாற்றைக் கூறும் சிற்பங்கள் அடங்கிய அழகுக் கலைக்கூடமாக விளங்குகிறது. மேலும், கன்றை இழந்து வருந்தும் தாய்ப்பசுவின் சிலையும் அருகில் உள்ளது.

## கருத்து விளக்கப்படம்

கீழ்க்காணும் கண்காட்சி அறிவிப்பைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.




### வினாக்கள்

1. கண்காட்சி எதைப் பற்றியது?
2. கண்காட்சி எத்தனை நாள் நடைபெறுகிறது?
3. கண்காட்சி நடைபெறும் இடம் எது?
4. கண்காட்சியில் எந்த நூற்றாண்டின் நாணயங்கள் இடம் பெறுகின்றன?
5. விளம்பர அட்டையில் வழங்கப்பட்டிருக்கும் குறிப்பு என்ன?

## 23.5 கேட்டல் கருத்தறிதல்

**மெய்ப்பொருள் காண்பது அறிவு**

பெண்கள் இருவர், குழந்தை ஒன்றைத் தூக்கிக்கொண்டு சாலமோன் மன்னனிடம் வந்தனர். அவர்கள் இருவருமே குழந்தை தங்களுடையது என வாதாடினர். மன்னர் சிறிதுநேரம் சிந்தித்தார். காவலனை அழைத்தார். உடனே, "வாளை எடுத்துக் குழந்தையை இரண்டாக வெட்டி ஆளுக்குப் பாதியாகக் கொடு" என்றார். அப்பொழுது ஒரு பெண், "உனக்கும் இல்லை எனக்கும் இல்லை. மன்னர் கூறியபடியே நடக்கட்டும்" என்றாள். "அப்படிச் செய்யாதீர்கள்! அவளே வளர்க்கட்டும்" என்று பதறினாள் மற்றொரு பெண். "குழந்தைக்கு எந்தத் துன்பமும் வரக்கூடாது என்று நினைத்தவளே உண்மையான தாய்" எனத் தீர்ப்பு கூறினார் மன்னர். அவளிடமே குழந்தையைக் கொடுக்கச் செய்தார்.

**வினாக்கள்**

1. பெண்கள் ஏன் மன்னனைத் தேடி வந்தனர்?
2. மன்னன், காவலனிடம் என்ன கூறினார்?
3. மன்னனின் தீர்ப்பைக் கேட்டுப் பதறிய பெண் என்ன கூறினாள்?
4. மன்னன் யாரிடம் குழந்தையை ஒப்படைத்தார்?
5. தீர்ப்பு கூறிய மன்னனின் பெயர் என்ன?

## 23.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 23.7 செந்தமிழ்ச்செல்வம்

### நீதிநெறி விளக்கம்

கல்வி உடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும் – இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின்.

- (பாடல் 16 )

- குமரகுருபரர்

(இல்லார் - இல்லாதவர்: இரந்து - யாசித்து: தலைவணங்கி – பணிவாக வணங்கி)

**பொருள்:**

கல்வி, பொருள் என இவ்விரண்டும் செல்வம் எனப்படும். இவ்விரண்டும் இல்லாதவர், இருப்பவரிடம் யாசித்துப் பெறுவதுபோலத் தாமும் பிறரைப் பணிந்து வணங்கி இவற்றைப் பெறவேண்டும்.

**பழமொழி**

ஊருடன் ஒத்து வாழ்.

### சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. ஆராய்ச்சி மணி
2. மனுநீதிச்சோழன்
3. தேர்க்கால்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. காவலர்
2. வழக்கு
3. தீர்ப்பு
4. புறா

## 23.8 மொழிபெயர்ப்போம்

King Ellalan also known as Manu Neethi Chozhan was a famous Chozha king who ruled from Tiruvarur in Tamilnadu.

## 23.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. நீதிமன்றம் | - | Court |
| 2. துன்பம் | - | Misery |
| 3. அரசர் | - | King |
| 4. அமைச்சர் | - | Minister |
| 5. காவலர் | - | Guard |
| 6. இளவரசர் | - | Prince |
| 7. தேர் | - | Chariot |
| 8. தேர்க்கால் | - | Wheel of the Chariot |
| 9. கன்று | - | Calf |
| 10. நீதி | - | Justice |
| 11. மன்னிப்பு | - | Pardon |
| 12. தண்டனை | - | Punishment |
| 13. கடமை | - | Duty |

## 23.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

அருண் அடுத்த மாதம் ஓட்டப்போட்டியில் கலந்துகொள்ள வேண்டும். அதனால், ஒவ்வொரு நாளும் மாலையில் பயிற்சி மேற்கொண்டான். அன்றும் வழக்கம்போல, விளையாட்டுத் திடலில் ஓடிக்கொண்டு இருந்தான். அப்போது, அங்கு தமிழ்வாணன் வந்தான். அவன், அருண் ஓடும் பாதையில் வாழைப்பழத் தோலை வீசினான். அப்போது அங்கு....

## 23.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் தொடர்கள் வரிசை மாற்றப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தி, உரைப்பகுதியாக மாற்றுக.**

1. குழந்தையைக் காப்பாற்றிய அவனை அனைவரும் பாராட்டினர்.
2. சாலையோரம் நடந்து கொண்டிருந்த சிறுவன் அதனைக் கண்டான்.
3. குதிரை வண்டி அவனைக் கடந்து போயிற்று.
4. அந்தச் சிறுவனுக்கு அப்போது ஏழுவயதுதான். அவன் பெயர் நரேந்திரன்.

5. அந்த நரேந்திரன்தான் பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர் என்று அழைக்கப்பட்டவர் ஆவார்.

6. அப்போது, குதிரை வண்டி ஒன்று தெருவில் வந்துகொண்டிருந்தது.

7. குழந்தை ஒன்று தெருவில் தளர்நடை போட்டு நடந்து வந்தது.

8. குழந்தையின் அருகில், குதிரை வண்டி புயல்போல நெருங்கியது.

9. அதனைக் கண்டவர்கள் குழந்தைக்கு என்ன ஆகுமோ என்று அஞ்சினர்.

10. சிறுவன் தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் சட்டெனப் பாய்ந்து குழந்தையைத் தூக்கினான்.

## 23.12 செயல்திட்டம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் காணப்படும் நீதிநூல்களைப் பற்றித் தொகுப்பேடு உருவாக்குக.

பாடம்

# 24

## 24.1 பேசுவோம்




### கலந்துரையாடுவோம்

மேற்கண்ட படங்களின் மூலம் நீங்கள் உணர்ந்த செய்தியினை வகுப்பில் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 24.2 படிப்போம்

# அன்பு என்னும் அறம்

பேருந்திற்காகக் காத்திருந்தார் அந்தப் பெண்மணி. பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்த களைப்பு. பேருந்து வந்ததும் ஏறி, இருக்கையில் அமர்ந்தார். அனுமதியற்ற இருக்கையில் அமர்ந்ததாகக் கூறி, காவலர்கள் அப்பெண்மணியைக் கைது செய்தனர். இச்செய்தி நாடு முழுவதும் பரவியது. இதனைக் கேள்வியுற்ற ஒருவருக்கு அவருடைய பள்ளிப்பருவம் நினைவுக்கு வந்தது.



பள்ளிப்பருவத்தில் சுற்றுலா சென்று திரும்பும்போது, பேருந்தில் அவருக்கு இருக்கை மறுக்கப்பட்டது. 90 மைல் தூரத்தை நின்றபடியே பயணம் செய்தது அவரது நினைவுக்கு வந்தது. பல காலமாகத் தம் மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுவதை எண்ணி அவர் வருந்தினார். ஆகையால், இனியும் அமைதியாக இருக்கக் கூடாது என எண்ணினார்.

தம் மக்களுக்கு மறுக்கப்படும் உரிமைகளைப் பெற்றுத்தர முடிவு செய்தார். அதனைக் கேட்டுப் பெற வாய்ப்பில்லை. போராடினால்தான் கிடைக்கும். ஆனால் எப்படிப் போராடுவது? என்று சிந்தித்தார். வன்முறை சிறந்த வழியன்று. எதிரியையும் நேசிக்க வேண்டும்; எவரையும் வெறுக்கக் கூடாது; எந்த உயிருக்கும் துன்பம் தரக்கூடாது ஆகிய அறக்கருத்துகளைத் தம் பெற்றோரிடம் கேட்டு வளர்ந்தவர் அவர். மேலும், இந்திய நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட அண்ணல் காந்தியடிகளின் அமைதிப் போராட்டங்களால் ஈர்க்கப்பட்டவர்.

எனவே, அமைதிவழியில் போராட முடிவு செய்தார். தம் மக்களை ஒன்று திரட்டினார். பேருந்து புறக்கணிப்புப் போராட்டம் பற்றி விளக்கினார். அதனை ஏற்றுக்கொண்ட மக்கள், அவரது கருத்துக்கு ஒத்துழைப்பு தந்தனர். ஆனால் அப்போதைய அரசு, அந்தப் போராட்டத்தைத் தடுக்க முயற்சி மேற்கொண்டது. மக்கள் எதற்கும் அஞ்சவில்லை. அறவழியிலேயே போராட்டத்தைத் தொடர்ந்தனர். ஒரு நாள், இரு நாள் அல்ல. 381 நாள் போராட்டம் நடைபெற்றது. இறுதியில் வெற்றியும் கிடைத்தது. இதனால், மக்களுக்குப் பேருந்தில் அமரும் உரிமை கிடைத்தது.

தொடர்ந்து செய்யவேண்டிய பணிகள் பற்றிச் சிந்தித்தார். உரிமைகள் மறுக்கப்படும் இடங்களில் அவரின் அமைதிவழிப் போராட்டங்கள் தொடர்ந்தன. வெற்றியும் கண்டன.

அவர், தாம் ஏற்றுக்கொண்ட கொள்கையில் உறுதியாக நின்றார். அதனாலேயே உலக அமைதிக்கான நோபல் பரிசை இளமையிலேயே பெற்றார். அவர் பெயர் மார்ட்டின் லூதர் கிங். அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர். அறவழிப் போராட்டம் மூலம் வெற்றி கண்டு அழியாப் புகழ் பெற்றார்.

## பொருள் அறிவோம்

1. களைப்பு - சோர்வு
2. கேள்வியுற்ற - தெரிந்துகொண்ட
3. எதிரி - பகைவர்
4. கொள்கை - குறிக்கோள்
5. அழியாப்புகழ் - நிலையான புகழ்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. பேருந்தில் அமர்ந்த பெண்மணியை ஏன் கைது செய்தனர்?
2. மார்ட்டின் லூதர் கிங்கிற்கு அவருடைய பெற்றோர் சொன்ன அறிவுரைகள் யாவை?
3. மார்ட்டின் லூதர் கிங் ஏன் அமைதிவழியில் போராட நினைத்தார்?
4. பேருந்து புறக்கணிப்புப் போராட்டம் எத்தனை நாள்கள் நடைபெற்றது ?
5. மார்ட்டின் லூதர் கிங்கிற்கு நோபல் பரிசு எதற்காக வழங்கப்பட்டது?

### ஆ) பின்வரும் தொடர்கள் விடையாக வருமாறு, வினாக்கள் உருவாக்குக.

1. மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர்.
2. மக்களுக்குப் பேருந்தில் அமரும் உரிமை கிடைத்தது.



### இ) கோடிட்ட இடத்தைப் பொருத்தமான சொல்லை இட்டு நிரப்புக.

(உரிமை, சிறந்த, நோபல், பேருந்து, அன்பு)

1. மார்ட்டின் லூதர் கிங், ________________ புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொண்டார்.
2. பகைவரிடத்திலும் ________________ காட்டவேண்டும்.
3. வன்முறை ________________ வழியன்று.
4. மக்களுக்கு ________________ பெற்றுத்தர மார்ட்டின் லூதர் கிங் முடிவு செய்தார்.
5. மார்ட்டின் லூதர் கிங்கிற்கு அமைதிக்கான ________________ பரிசு வழங்கப்பட்டது.

## 24.3 தெரிந்துகொள்வோம்

### உவமைத்தொடர்கள்

| | | |
|---|---|---|
|  | கவியரசன், பேச்சுப்போட்டியில்<br>**மடை திறந்த வெள்ளம்போலத்**<br>தங்கு தடையின்றிப் பேசினான். |  |
|  | தம் மக்களின் உரிமைக்காகப்<br>போராடி வெற்றி கண்ட<br>வ. உ. சிதம்பரனார் புகழ்<br>**குன்றிலிட்ட விளக்குபோலப்**<br>பரவியது. |  |
|  | தோழி கற்றுக்கொடுத்த சதுரங்க<br>விளையாட்டின் விதிமுறைகள்<br>**உள்ளங்கை நெல்லிக்கனிபோலத்**<br>தெளிவாகப் புரிந்தது. |  |
|  | வெளிநாட்டில் வேலை செய்யும்<br>குமரன், **அத்தி பூத்தாற்போல**<br>எப்போதாவதுதான் தன்<br>பெற்றோரைக் காண வருவான். |  |
|  | சுற்றுலாவுக்குச் சென்ற<br>இடத்தில், நண்பர்களைவிட்டுப்<br>பிரிந்த மணிமாலா **கண்ணைக்<br>கட்டிக் காட்டில் விட்டதுபோலத்**<br>துன்பப்பட்டாள். |  |

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடத்தில் சரியான உவமைத்தொடரைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

(மடை திறந்த வெள்ளம்போலத், அத்தி பூத்தாற்போல, குன்றிலிட்ட விளக்குபோல, உள்ளங்கை நெல்லிக்கனிபோலத், கண்ணைக்கட்டிக் காட்டில்விட்டாற்போல)

1. திருக்குறளின் பெருமை ______________ உலகநாடுகளில் பரவி வருகிறது.
2. பணியின் பொருட்டுப் புதிய இடத்திற்குச் சென்ற குமணனுக்கு ______________ இருந்தது.
3. என் அத்தை ______________ எப்போதாவதுதான் வீட்டிற்கு வருவார்.
4. பேரறிஞர் அண்ணா ______________ தங்குதடையில்லாமல் சொற்பொழிவாற்றுவார்.
5. ஆசிரியர் நடத்திய பாடப்பகுதி ______________ தெளிவாகப் புரிந்தது.

### ஆ) உவமைத்தொடரையும் பொருளையும் பொருத்துக.

| | உவமைத்தொடர் | – | பொருள் |
|---|---|---|---|
| 1. | உள்ளங்கை நெல்லிக்கனிபோல | - | தங்குதடையின்மை |
| 2. | அத்தி பூத்தாற்போல | - | குழப்பம் |
| 3. | குன்றிலிட்ட விளக்குபோல | - | தெளிவு |
| 4. | கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல | - | அரிது |
| 5. | மடை திறந்த வெள்ளம்போல | - | பரவுதல் |

### இ) உரையாடலைப் பொருத்தமான உவமைத்தொடர்களால் நிறைவு செய்க.

| | |
|---|---|
|  | அல்லி: அடடே! வா குயிலி. இப்போதுதான் எங்கள் வீட்டிற்கு வழி தெரிந்ததா?<br>குயிலி: ஏன் அப்படிக் கூறுகிறாய்?<br>அல்லி: ஆமாம். நீ ______________ எப்போதாவதுதானே என்னைப் பார்க்க வருவாய். |
|  | அப்பா: மோகன், தமிழில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் எடுத்திருக்கிறாய். மிகச் சிறப்பு. எப்படி உன்னால் முடிந்தது?<br>மோகன்: தமிழாசிரியர் கற்றுக்கொடுத்த பாடம் ______________ மிகத்தெளிவாகப் புரிந்தது அப்பா. அதனால்தான் நூறு மதிப்பெண் எடுக்கமுடிந்தது. |

## 24.4 மொழியோடு விளையாடுவோம்

வா, போ, நீ, ஆ என வருவனவெல்லாம் ஓரெழுத்து ஒருமொழி. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் படித்து, ஓரெழுத்து ஒருமொழியால் கட்டத்தை நிரப்புக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 |
| | 4 | | 5 | |
| 6 | | 7 | | 8 |
| | 9 | | 10 | |

1. பறக்கும் எழுத்து
2. எழுதும் எழுத்து
3. அழைக்கும் எழுத்து
4. செல் எனச் சொல்லும் எழுத்து
5. பசுவைக் குறிக்கும் எழுத்து
6. வியப்பைத் தரும் எழுத்து
7. தொட்டால் சுடும் எழுத்து
8. கொடு எனச் சொல்லும் எழுத்து
9. தமிழ் மாதத்தில் ஓர் எழுத்து
10. பேச உதவும் எழுத்து

### சுவைச்செய்தி

சத்தியாகிரகம் என்பது, சத்யம் + ஆகிரகம் (சத்ய + ஆக்ரஹ) என்னும் இருசொல்லின் இணைப்பாகும். சத்யம் என்பது உண்மை, ஆகிரகம் என்பது உறுதியுடன் நிற்பது. உண்மையில் உறுதியாக நிற்பது என்பது இதன் பொருள். அண்ணல் காந்தியடிகள் இந்திய விடுதலைக்காகச் சத்தியாகிரக நெறியைப் பின்பற்றினார். வன்முறை இன்றி அமைதியாகத் தம் எதிர்ப்பைக் காட்டுவதே அகிம்சை. அவ்வழியில் இறுதிவரை போராடி, நாட்டிற்கு விடுதலையும் பெற்றுத் தந்தார்.



காந்தியடிகள்
(1869 – 1948)

## 24.5 கேட்டல் கருத்தறிதல்


### கடமைக்குச் செய்யாதே!

தருமன் என்பவர் மரக்கன்றுகள் நட நினைத்தார். அதற்கு, மூன்று பேரை வேலைக்கு நியமித்தார். மூவருக்கும் வேலையைப் பிரித்துக் கொடுத்தார். முதல் நபர் குழி தோண்ட வேண்டும். இரண்டாம் நபர் அந்தக் குழியில் மரக்கன்றை வைக்க வேண்டும். மூன்றாம் நபர் குழியில் மண்ணைத் தள்ளித் தண்ணீர் ஊற்ற வேண்டும். மூவரும் மறுநாளே வேலையைத் தொடங்கினர். அடுத்த நாள், இரண்டாம் நபர் வேலைக்கு வரவில்லை. ஆனாலும் வேலை தொடங்கியது. முதல் நபர் குழியைத் தோண்டினார். மூன்றாம் நபரோ தனக்குக் கொடுத்த வேலையைச் செய்யத் தொடங்கினார். இதனைக் கண்ட தருமன் அதிர்ச்சி அடைந்தார். அவர், மூன்றாம் நபரை அழைத்தார். 'மரக்கன்றே வைக்காமல் ஏன் குழியை மூடுகிறீர்' என்று கேட்டார். 'எனக்குக் குழியை மூடும் வேலையைத்தானே கொடுத்தீர்கள். அதைத்தான் நான் செய்கிறேன்' என்றார். அதற்குத் தருமன், என்ன நோக்கத்திற்காக வேலை செய்கிறோம் என்பதை அறியாமல், கடமைக்கு வேலை செய்யக்கூடாது என்றார். மூன்றாம் நபர் தன் தவற்றை உணர்ந்துகொண்டார்.

**வினாக்கள்**

1. மரக்கன்றுகளை வைக்க ஆசைப்பட்டவர் யார்?
2. மரக்கன்று வைக்க எத்தனை பேர் வேலைக்கு நியமிக்கப்பட்டனர்?
3. இரண்டாம் நபருக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்ட வேலை என்ன?
4. மூன்றாம் நபர் செய்த செயல் சரியா? காரணம் கூறுக.
5. இக்கதையின் மூலம் நீங்கள் என்ன புரிந்துகொண்டீர்கள்?

## 24.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 24.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்

-(குறள் 722)

-திருவள்ளுவர்

(கற்றாருள் – கற்றவர்களுள்; செல - உணரும் படி)

**பொருள்:**

கற்றவர்களுள் கற்றவர் எனப் புகழப்படுகின்றவர், கற்றவர் அவையின்முன் தாம் கற்றதை அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு சொல்லக்கூடியவர் ஆவார்.

### பழமொழி

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

### சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. காந்தியக் கொள்கை
2. அறவழிப் போராட்டம்
3. பெற்றோரின் அறிவுரை

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. அடக்கம்
2. அமைதி
3. வீரம்
4. உயர்வு

## 24.8 மொழிபெயர்ப்போம்

வன்முறை சிறந்த வழியன்று, எதிரியையும் நேசிக்க வேண்டும்; எவரையும் வெறுக்கக் கூடாது; எந்த உயிருக்கும் துன்பம் தரக்கூடாது.

___

___

## 24.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பேருந்து | – | Bus |
| 2. | இருக்கை | – | Seat |
| 3. | காவலர் | – | Police |
| 4. | செய்தி | – | News |
| 5. | சுற்றுலா | – | Tour |
| 6. | தூரம் | – | Distance |
| 7. | உரிமை | - | Rights |
| 8. | வன்முறை | – | Violence |
| 9. | பெற்றோர் | – | Parent |

## 24.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**எதிர்ச்சொற்களைக்கொண்டு பின்வருமாறு தொடர்கள் உருவாக்குக.**

காலையில் படி மாலையில் ஆடு

இன்சொல் பேசு வன்சொல் தவிர்

நன்மை செய் தீமை விலக்கு

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

## 24.11 உயர்நிலைத்திறன்

**பின்வரும் குறிப்புச் சொற்களைக்கொண்டு உரைப்பகுதி உருவாக்குக.**

தொலைக்காட்சி – கண்டுபிடித்தவர் - ஜான் லோகி பைர்டு – பொழுதுபோக்குக் கருவி – ஒளி ஒலி – நன்மைகள் - திரைப்படக் காட்சிகள் – விளம்பரங்கள் – அறிவிப்புகள் – கல்வி நிகழ்ச்சிகள் – தீமைகள் – பார்வைக் குறைபாடு – படிப்பில் ஆர்வம் குறைவு – தேவைக்கேற்றவாறு பயன்படுத்துதல்.

## 24.12 செயல்திட்டம்

உலகில் அமைதி வழியில் போராடியவர்களுள் ஒருவரைப் பற்றி நழுவம் (Powerpoint) ஒன்றினை உருவாக்குக.

# மீள்பார்வை

## பயிற்சிகள்

**1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.**

(செயலி, சிபி, தொல்காப்பியர், தக்களி, இரட்டுற மொழிதல்)

1. ஐம்புலன் அடிப்படையில், உயிர்களைப் பாகுபடுத்தியவர் ______________.
2. 'அந்தமான்' – இச்சொல் ______________ க்கு எடுத்துக்காட்டாகும்.
3. Application என்ற சொல்லைத் தமிழில் ______________ என்று அழைப்பர்.
4. பருந்திடமிருந்து தப்பிக்க, புறா ______________ மன்னனிடம் தஞ்சம் அடைந்தது.
5. கீழடி அகழாய்வில் நெசவுத்தொழிலுக்குப் பயன்பட்டதாகக் கண்டெடுக்கப்பட்ட பொருள் ______________.

**2) கீழ்க்காணும் தொடர்கள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.**

1. ஜப்பானியர்கள் உணவுகளைக் கைகளால் சாப்பிடுவர். (சரி/தவறு)
2. மனிதன் நாலறிவு உடையவன். (சரி/தவறு)
3. தெரிநிலை வினையெச்சம் செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டும். (சரி/தவறு)
4. வேற்றுமை என்பது பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தாது. (சரி/தவறு)
5. மனுநீதிச்சோழன், தமிழ்நாட்டில் தஞ்சாவூர் பகுதியை ஆட்சி செய்தார். (சரி/தவறு)

**3) கீழ்க்காணும் சொற்களை அவற்றின் பொருளோடு பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. பாகுபாடு | - | பழைமை |
| 2. கொள்கை | - | அடைக்கலம் |
| 3. தஞ்சம் | - | எண்ணம் |
| 4. தொன்மை | - | குறிக்கோள் |
| 5. சிந்தனை | - | பிரிவு |

**4) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.**

(பாடிய, வழங்கினார், வெளுத்து வாங்கினாள், மரக்கன்றுகளை, அழகாக)

1. சிவா ____________________ வாங்கினான்.
2. தேவி வினாடி வினாப் போட்டியில் ____________________.
3. கண்ணன் ____________________ பாடல் இனிமையாக இருந்தது.
4. பள்ளி ஆண்டு விழாவில் மாணவிகளின் நடனம் ____________________ இருந்தது.
5. போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சிறப்பு விருந்தினர் பரிசு ____________________.

**5) கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை எழுதுக.**

1. வால்நட்சத்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
2. குடியம் குகை அமைந்துள்ள இடம் எது?
3. மனுநீதிச் சோழன், தமிழ்நாட்டில் எந்தப் பகுதியை ஆட்சி செய்தார்?
4. காகிதத்தில் வடிவங்கள் செய்யும் கலைக்குப் பெயர் என்ன?
5. அண்ணல் காந்தியடிகள் இந்திய விடுதலைக்காகப் பின்பற்றிய நெறி யாது?

**6) கீழ்க்காணும் திருக்குறளில் விடுபட்ட சொற்களை நிரப்புக.**

(செய்வார், இழுக்கு, பொய்யற்க, இன்பம், மலர்நீட்டம்)

1. வெள்ளத்து அனைய ____________________ மாந்தர்தம்

   உள்ளத் தனைய(து) உயர்வு.

2. ஒறுத்தார்க்கு ஒருநாளை ____________________ பொறுத்தார்க்குப்

   பொன்றும் துணையும் புகழ்.

3. தன்நெஞ்(சு) அறிவது ____________________ பொய்த்தபின்

   தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

4. செயற்கரிய ____________________ பெரியர் சிறியர்

   செயற்கரிய செய்கலா தார்.

5. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்

   எண்ணுவம் என்பது ____________________.

**7) பின்வரும் பழமொழிகளைப் பொருத்துக.**

1. ஊருடன் - பல் குத்த உதவும்
2. சிறுதுரும்பும் - குறைகுடம் கூத்தாடும்
3. சுடர் விளக்காயினும் - பூமி ஆள்வார்
4. நிறைகுடம் தளும்பாது - தூண்டுகோல் வேண்டும்
5. பொறுத்தார் - ஒத்து வாழ்

**8) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.**

1. Programme -
2. Rights -
3. Space -
4. Excavation -
5. Chopstick -

**9) கீழ்க்காணும் மரபுத்தொடர்களை அவற்றின் பொருளோடு பொருத்துக.**

1. ஆறப்போடுதல் - மறைத்தல்
2. பூசி மெழுகுதல் - மிக நன்றாகச் செய்தல்
3. வெளுத்து வாங்குதல் - காலம் தாழ்த்துதல்

**10) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையை எழுதுக.**

1. தமிழ்மொழியின் தொன்மைக்கான சான்றுகள் எங்குக் கிடைத்துள்ளன?
2. ஜப்பானியர்களின் பாரம்பரிய விளையாட்டாகவும் தேசிய விளையாட்டாகவும் விளங்கும் விளையாட்டு எது?
3. விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் இந்தியப் பெண்மணி யார்?
4. பன்னாட்டுத் தரவு மறையாக்கத் தீர்வுநெறியை யார் எந்த ஆண்டு உருவாக்கினார்?
5. உலக அமைதிக்கான நோபல் பரிசை இளமையிலேயே பெற்றவர் யார்?

**11) பின்வரும் விடுகதைகளுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(தராசு, வெண்டைக்காய், கரும்பு, நிழல், தண்ணீர்)

1. நீ எங்குச் சென்றாலும் தொடர்ந்து வருவான். அவன் யார்?
2. அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது. அது என்ன?
3. கசக்கிப் பிழிந்தாலும் கடைசி வரை இனிக்கும் அது என்ன?
4. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துகள். அவை என்ன?
5. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?

12) பின்வரும் தொடர்களில் கோடிட்ட இடங்களைப் பொருத்தமான மரபுத்தொடர் கொண்டு நிரப்புக.


(ஆறப்போட்டனர், பூசி மெழுகினாள், வெளுத்து வாங்கினாள்)

1. கனிமொழி கீழே விழுந்ததற்கான காரணத்தைக் கூறாமல் ______________

2. செல்வி பரத நாட்டியத்தில் ______________.

3. ஆசிரியர் அடுத்த வாரம் தேர்வு என்று கூறியதால் மாணவர்கள் சுற்றுலா செல்லும் திட்டத்தை ______________.

13) பின்வரும் விளம்பர அட்டையைப் பார்த்துக் கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




வினாக்கள்

1. பேச்சுப் போட்டி எங்கு, எப்போது நடைபெறுகிறது?
2. பேச்சுப் போட்டியின் தலைப்பு என்ன?
3. பேச்சுப் போட்டியில் பங்கு பெறுவோருக்கான வயது வரம்பு என்ன?
4. எந்தெந்த நிறுவனங்கள் இணைந்து பேச்சுப் போட்டியை நடத்தியது?
5. போட்டியில் வெற்றி பெறுவோருக்கான பரிசுத்தொகை எவ்வளவு?

**14) பின்வரும் தொடர்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. தமிழரின் பழந்தமிழ் இலக்கண நூலாகத் தொல்காப்பியம் விளங்குகிறது.
2. இன்றைய சூழலில் கற்றல் நோக்கங்களுக்கு இணையம் பெரிதும் உதவுகிறது.
3. ஜப்பானியர்களின் உணவில் அரிசி, மீன், பச்சைக் காய்கறிகள் ஆகியவை முதன்மை இடத்தைப் பெறுகின்றன.
4. விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் இந்தியப் பெண்மணி கல்பனா சாவ்லா.
5. தமிழர்களின் தொன்மையைக் கீழடி அகழாய்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

பாடம்
25

## 25.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

இயற்கை உணவுப்பொருள்கள் பற்றிய உங்களுடைய கருத்தினை வகுப்பில் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 25.2 படிப்போம்

# மூலிகை மருத்துவம்

இயற்கை நமக்குத் தந்த வரம் மூலிகைத் தாவரங்கள். இவை, நம்மை நோயிலிருந்து பாதுகாக்கின்றன. மூலிகைத் தாவரங்கள் சிலவற்றைப் பற்றி இப்பாடப் பகுதியில் காண்போம்.



**வேம்பு**

பழங்காலத்தில் இருந்தே அம்மை நோய்க்கு அருமருந்தாக விளங்கி வருகிறது. காற்றில் பரவும் கிருமிகளைத் தடுக்கும் ஆற்றல் கொண்டுள்ளது. திருவிழாக்கள் போன்ற மக்கள் கூடும் இடங்களில் தோரணமாகக் கட்டப்படுகிறது. மேலும், வேளாண்மையில் உரமாகவும் பூச்சி விரட்டியாகவும் பயன்படுகிறது. வேப்பங்குச்சி பல் துலக்க உதவுகிறது. வேப்பம்பூ வயிற்றுப் புண்களைப் போக்குகிறது.

**துளசி**



மூலிகைகளின் அரசி என அழைக்கப்படுகிறது. மனித உடலில் ஏற்படும் சளியை அகற்றுகிறது. சிறந்த கிருமி நாசினியாகச் செயல்படுகிறது.



**சிறுபீளை**

விஷக்கடிகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. மனிதர்களின் சிறுநீரகத்தில் ஏற்படும் கல்லைப் போக்குகிறது. இதனை 'அறுவைச் சிகிச்சை மூலிகை' என்று கூறுவதுண்டு.

**ஆவாரை**



நீரிழிவு (டயாபடிஸ்) நோய்க்கு அருமருந்தாகப் பயன்படுகிறது. புற்றுநோய்க்கு எதிரான ஆற்றலைக் கொண்டுள்ளது. "ஆவாரைப் பூத்திருக்க சாவாரைக் கண்டதுண்டோ!" என்னும் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக மருத்துவப் பண்புகள் கொண்டுள்ளது.



**கீழாநெல்லி**

மஞ்சள் காமாலை நோய்க்குச் சிறந்த மருந்தாக உள்ளது. கண் நோய், நீரிழிவு நோய், கல்லீரல் நோய், ஆறாத புண் ஆகியவற்றைப் போக்குகிறது.

**நிலவேம்பு**



வேர், இலை, பூ ஆகிய அனைத்துப் பாகங்களும் மருத்துவக் குணம் நிறைந்தவை. டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களைக் குணப்படுத்துகிறது. இரத்தத்தில் தட்டணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது. இது எல்லா நிலப்பகுதிகளிலும் வளரும் தன்மை கொண்டது.

## பொருள் அறிவோம்

1. தோரணம் - அழகுக்காக வாசலில் தொங்கவிடப்படும் மாலை
2. பூச்சி விரட்டி – பயிர்களைப் பூச்சிகளிடமிருந்து காப்பது
3. விஷக்கடி - பூச்சி, பாம்பு போன்றவற்றால் ஏற்படும் நஞ்சு

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. வேளாண்மையில் பூச்சி விரட்டியாகப் பயன்படும் மூலிகை எது?
2. மூலிகைகளின் அரசி என்ற அழைக்கப்படுவது எது?
3. சிறுபீளையின் பயன் என்ன?
4. ஆவாரம்பூ எதற்குப் பயன்படுகிறது?
5. இரத்தத்தில் தட்டணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் மூலிகை எது?


### ஆ) சரியா? தவறா? கண்டறிக.

1. பல் துலக்குவதற்குக் கீழாநெல்லியைப் பயன்படுத்துவர். (சரி/ தவறு)
2. அம்மை நோய்க்கு மருந்தாக விளங்குவது வேம்பு. (சரி/ தவறு)
3. சிறுநீரகக்கல் சிக்கலுக்குச் சிறுபீளை உதவுகிறது. (சரி/ தவறு)
4. கீழாநெல்லி மூலிகை மருத்துவத்தில் பயன்படவில்லை. (சரி/ தவறு)
5. நிலவேம்பின் அனைத்துப் பாகங்களும் மருந்தாகின்றன. (சரி/ தவறு)

## 25.3 தெரிந்துகொள்வோம்

### வழுநிலை, வழாநிலை

தொடர்களில் திணை, பால், இடம், காலம், மரபு ஆகியவற்றில் பிழை இருப்பது 'வழுநிலை'. பிழை நீக்கி எழுதுவது 'வழாநிலை'



அப்பா வந்தது



நிலா சிரித்தான்



அவள் நடந்தேன்



கமல் நேற்று வருவேன் என்றான்.



நாய் கத்துகிறது

**குழலி** : இனியா! அங்கே தெரியும் படங்களின் கீழுள்ள தொடர்களைப் பார். ஏதோ பிழை இருப்பது போலத் தெரிகிறதல்லவா?

**இனியா** : ஏதோ இல்லை குழலி. அனைத்துத் தொடர்களுமே பிழையாக உள்ளன.

**குழலி** : அப்படியா? முதலில் உள்ள படத்தில் அப்பா வந்தது என உள்ளது.

**இனியா** : அதிலுள்ளது திணை வழு. அப்பா வந்தார் என்பதே சரியானது.

**குழலி** : இனியா! இரண்டாம் தொடர் எப்படி வரவேண்டும் என எனக்குத் தெரியும். நிலா சிரித்தான் என்பது, நிலா சிரித்தாள் என வரவேண்டும். ஆனால் அது என்ன பிழை?

**இனியா** : பெண்பாலுக்கு ஆண்பால் வினைமுற்று இடம்பெற்றுள்ளது. அது பால் வழு குழலி. மூன்றாம் தொடர் அவள் நடந்தேன் என உள்ளதைப் பார்.

**குழலி** : ஆம். அதை....

**இனியா** : அவள் நடந்தாள் எனக் கூறவேண்டும். அதனை இடவழு என்பர்.

**குழலி** : நான்காம் தொடரான கமல் நேற்று வருவேன் என்றான் என்பதை, கமல் நேற்று வந்தேன் என்றான் என்று கூறியிருக்க வேண்டுமல்லவா?

**இனியா** : ஆம். மிகச் சரியாகச் சொன்னாய் குழலி. அத்தொடரில் இடம்பெற்றிருப்பது கால வழு என்பர். இறுதித் தொடர்...

**குழலி** : நாய் கத்தியது என்பது சரிதானே? அதில் என்ன பிழை?

**இனியா** : நாய் கத்தாது குழலி. அது மரபு வழு. நாய் குரைக்கும் என்பதே சரியானது.

## பயிற்சிகள்

### அ) பொருத்துக.

1. மாடு வந்தார் - எழிலன் படித்தான்
2. நான் வந்தாய் - நாளை வருவேன்
3. நாளை வந்தேன் - மாடு வந்தது
4. எழிலன் படித்தாள் - மயில் அகவியது
5. மயில் கத்தியது - நான் வந்தேன்


### ஆ) பொருத்தமான சொல்லை எழுதி, உரைப்பகுதியை நிறைவு செய்க.

பூங்காவில் மான் ____________ (ஓடினர்/ஓடியது). அதனை வேலவன் ____________ (பார்த்தாள்/பார்த்தான்). அவன் அதனைக்கண்டு ____________ (மகிழ்ந்தான்/மகிழ்ந்தேன்). அப்போது குயில் ____________ (அகவியது/ கூவியது).


## 25.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டத்தை நிரப்புக. கட்டத்திலுள்ள வட்டத்தில் சிக்கிய எழுத்துகளை ஒன்றுபடுத்திப் பழமொழியைக் கண்டறிக.**

1. வெற்றிபெற இது தேவை




2. கடலில் மிதந்து செல்லும்




3. இது இருந்தால் பெரிய இழப்பு



4. தாழ்வுக்கு எதிர்ச்சொல்





______________________________

## சுவைச்செய்தி

வெளிநாட்டினரால் பச்சை இரத்தம் (Green Blood) என்று அழைக்கப்படுவது அறுகம்புல். இது, இரத்தத்தைத் தூய்மைப்படுத்துகிறது. ஜெர்மனியில் அறுகம்புல் சாறு கலந்த ரொட்டியைத் தயாரித்து உண்கின்றனர். இலங்கையில் முதன்முதலில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் நாக்கில் அறுகம்புல்லைப் பாலில் நனைத்துத் தேய்த்து அனுப்புகின்றனர்.



அறுகம்புல்

## 25.5 கேட்டல் கருத்தறிதல்

**இன்றே செய்!**

எறும்புகளின் கூட்டம் நடைபெற்றது. தலைவர் எறும்பு, 'நண்பர்களே, மழைக்காலம் முடிந்து கோடைக்காலம் தொடங்கிவிட்டது. நம்மிடமிருந்த உணவும் தீர்ந்துவிட்டது. நாம் நமக்கான உணவைச் சேகரிக்கச் செல்வோம், வாருங்கள்' என்றது.

எல்லா எறும்புகளும் மிகச் சுறுசுறுப்பாகக் கிளம்பின. ஆனால், ஓர் எறும்பு மட்டும் செல்லாமல் நின்றது. அதனைக் கண்ட தலைவர் எறும்பு 'ஏன் இப்படி நிற்கிறாய்?' எனக் கேட்டது. அதற்கு அந்த எறும்பு, 'இப்போதுதானே கோடைக்காலம் தொடங்கியுள்ளது, சில நாள் கழித்துச் சென்றால் என்ன?' எனக் கேட்டது.

அதற்குத் தலைவர் எறும்பு, 'தம்பி, எதைச் செய்தாலும் உரிய காலத்தில் செய்ய வேண்டும். இல்லையெனில் பாதிப்பு நமக்குத்தான். எதிர்பாராத விதமாக மழைவந்தால், நாம் உணவுக்கு என்ன செய்வோம்? நாளை எனத் தள்ளி வைத்தால், நமக்குத்தான் துன்பம்' என்றது. தன் தவற்றை உணர்ந்த எறும்பு, உடனே உணவு தேடச் சென்றது.

**வினாக்கள்**

1. உணவைச் சேகரிக்க அழைத்த எறும்பு எது?
2. எறும்புகள் ஏன் உணவு சேகரிக்கப் புறப்பட்டன?
3. ஓர் எறும்பு மட்டும் ஏன் உணவு தேடச் செல்லவில்லை?
4. செய்யும் செயலை ஏன் உரிய காலத்தில் செய்ய வேண்டும்?
5. நீங்கள், உரிய காலத்தில் செய்த செயலால் விளைந்த நன்மைகள் சிலவற்றைக் கூறுக.

## 25.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 25.7 செந்தமிழ்ச்செல்வம்

### நல்ல உணவு உண்போம்

உண்ணுவோமே – நன்றாய்
உண்ணுவோமே.
வெண்ணெயோடே – அப்பம்
விருப்பமோடே – நாம் உண்ணுவோமே
பழங்களோடே பாலும்
பகிர்ந்து கொள்வோம்.
கிழங்கினோடே – இனிய
கீரை உண்போம்.
விழுங்க வேண்டா – உணவை
மெல்ல வேண்டும்.

- ம.இலெ.தங்கப்பா

**பழமொழி**

நொறுங்கத் தின்றால் நூறு வயது.

### சொல்வதைக் கேட்டு எழுதுதல்

1. மூலிகைகளின் அரசி துளசி
2. ஆற்றலை வளர்க்கும் ஆவாரை
3. அறுவை சிகிச்சை மூலிகை சிறுபீளை

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தாவரம்
2. காற்று
3. செடிகொடிகள்
4. பாகங்கள்

## 25.8 மொழி பெயர்ப்போம்

இயற்கை உணவு முறைகளையும் இயற்கையோடு இயைந்த பழக்கவழக்கங்களையும் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் உடல்நலத்தையும் உளநலத்தையும் பாதுகாக்க முடியும்.

## 25.9 அறிந்துகொள்வோம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கிருமிகள் | - | Germs | 6. | நீரிழிவுநோய் | – | Diabetes |
| 2. | பூச்சி விரட்டி | – | Insectrepellents | 7. | புற்றுநோய் | – | Cancer |
| 3. | கிருமி நாசினி | – | Disinfectant | 8. | மஞ்சள் காமாலை | – | Jaundice |
| 4. | அறுவை சிகிச்சை | - | Surgery | 9. | கல்லீரல் | - | Liver |
| 5. | சிறுநீரகம் | – | Kidney | 10. | இரத்தத் தட்டணு | – | Blood Platelet |

## 25.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**படங்களைப் பார்த்துக் கதை உருவாக்கிக் கூறுக.**



## 25.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் குறிப்புச்சொற்களைப் பயன்படுத்தி, விளம்பர மாதிரி ஒன்றனை உருவாக்குக.**

வாய் திறக்க தயக்கமா – மஞ்சள் கறை பற்களா – புதிய பற்பசை – பளீரிடும் வெண்பற்கள் – புத்துணர்ச்சி மிக்கது – தன்னம்பிக்கை தருவது – நறுமணம் மிக்கது – சிறிய அளவிலும் கிடைக்கும் – இன்றே வாங்குங்கள் – புன்னகையுடன் மிளிருங்கள்.

## 25.12 செயல்திட்டம்

நீங்கள் அறிந்த மூலிகைகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.

பாடம்

# 26

## 26.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

உடற்பயிற்சி செய்வதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து உங்கள் நண்பர்களுடன் வகுப்பில் கலந்துரையாடுக.

## 26.2 படிப்போம்

### உடல்நலம் காப்போம்



**சக்தி** : வணக்கம். என் பெயர் சக்தி. 'நலவாழ்வு' என்னும் மாத இதழுக்காகத் தங்களை நேர்காணல் செய்ய வந்துள்ளேன். இந்த ஆண்டுக்கான சிறந்த பயிற்சியாளருக்கு வழங்கப்படும் துரோணாச்சார்யா விருது பெற்றுள்ளீர்கள். வாழ்த்துகள்.

**சைலேந்திரர்** : மிக்க நன்றி.

**சக்தி** : உங்கள் மாணவர்களுக்கு நீங்கள் அளிக்கும் பயிற்சி பற்றிக் கூறுங்கள்.

**சைலேந்திரர்** : என் மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி மட்டும் அளிப்பதில்லை. முழு உடலுக்கான பயிற்சியும் அளிக்கிறேன்.

**சக்தி** : முழு உடலுக்கான பயிற்சியா? அப்படி என்றால்?

**சைலேந்திரர்** : உடற்பயிற்சியைத்தான் அப்படிக் கூறினேன்.

**சக்தி** : ஆனால், உடல் உறுதிபெற விளையாட்டுக்கான பயிற்சியே போதுமே.

**சைலேந்திரர்** : அதுதான் இல்லை. ஓட்டப்பயிற்சி செய்பவர்களுக்குக் கால்கள் மட்டுமே வலிமையடையும். கைப்பந்து விளையாடுபவர்களுக்குக் கைகள் மட்டுமே வலிமையடையும். இவையெல்லாம் முழு உடற்பயிற்சி இல்லை. உடல் உறுதிக்கு, உடற்பயிற்சி கட்டாயம் வேண்டும். அதனால்தான், கவிமணி 'உடலில் உறுதி உடையவரே! உலகில் இன்பம் உடையவராம்' எனப் பாடியுள்ளார்.

**சக்தி** : ஆனால், நாம் நாள்தோறும் செய்யும் வேலையிலேயே உடலுக்குத் தேவையான பயிற்சிகள் கிடைத்துவிடாதா?

**சைலேந்திரர்** : அப்படியில்லை. உடலுக்குப் பயிற்சி செய்கிறோம் என்றால், அது முழு உடலைப் பண்படுத்தவும் சீராக்கவும் செழுமைப்படுத்தவும் உதவ வேண்டும். அப்போதுதான் உடல் உறுதி பெறும்.

**சக்தி** : உடற்பயிற்சியின் தேவைபற்றி மேலும் கூறுங்கள்.

**சைலேந்திரர்** : உடற்பயிற்சி செய்யும்போது உடலுறுப்புகள், ஒழுங்கான முறையில் ஒரே அளவில் இயங்குகின்றன. அப்போது அதிகமான காற்று உள்ளே செல்கிறது. அது, நுரையீரலை நிரப்புகிறது. நுரையீரல் தேவையான காற்றை உள்ளே எடுத்துக்கொண்டு, வேண்டாத காற்றை வெளியே அனுப்புகிறது. நுரையீரல் தன் பணியைச் சீராகச் செய்கிறது. நமது உயிரைக் காக்க சுவாசம் முதன்மையானது. அதன் முழுப்பயனைப் பெற உடற்பயிற்சி உதவுகிறது.

**சக்தி** : புரிகிறது. உடற்பயிற்சியால் வேறு என்னென்ன நன்மைகள் உண்டாகின்றன?

**சைலேந்திரர்** : நம் அனைவருக்கும் வேண்டிய நன்மை ஒன்று உள்ளது. உடற்பயிற்சி உடலை மட்டும் மேம்படுத்துவதில்லை. அது, மனத்தையும் மேம்படுத்துகிறது. உடல் உறுதியுடன் இருந்தால் மனம் உறுதியாக இருக்கும்.

**சக்தி** : புரிகிறது. ஆனால், உடற்பயிற்சிக்கு நேரம் ஒதுக்குவது சற்றுச் சிக்கலாக உள்ளதே!

**சைலேந்திரர்** : நல்ல உடல்நலத்துடன் வாழ வேண்டுமெனில், நாம் உடற்பயிற்சி மேற்கொள்ளத்தான் வேண்டும். அதற்குக் கட்டாயம் நேரம் ஒதுக்கத்தான் வேண்டும்.

**சக்தி** : இதுவரை நானும் உடற்பயிற்சி செய்யாமலிருந்தேன். இனி, உடற்பயிற்சிக்கு முதன்மை அளிப்பேன். உங்களை நேர்காணல் செய்தது மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. நன்றி.

**சைலேந்திரர்** : மகிழ்ச்சி.

## பொருள் அறிவோம்

1. உடலின் உறுதி - உடலின் வலிமை
2. சீராக்குதல் - ஒழுங்குபடுத்துதல்
3. செழுமைப்படுத்துதல் - வளப்படுத்துதல்
4. நுரையீரல் - முதன்மையான சுவாச உறுப்பு

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. துரோணாச்சார்யா விருது யாருக்கு வழங்கப்படுகிறது?
2. முழு உடல் வளர்ச்சி பெற என்ன செய்ய வேண்டும்?
3. நம் முன்னோர்கள் உடல் உறுதியுடன் வாழக் காரணம் என்ன?
4. உடலின் உறுதி குறித்துக் கவிமணி என்ன கூறியுள்ளார்?
5. உடற்பயிற்சியினால் விளையும் நன்மைகள் யாவை?

### ஆ) உரிய சொல்லைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக.

(உடற்பயிற்சி, விளையாட்டு, துரோணாச்சாரியா, மனம், நுரையீரல் )

1. உடற்பயிற்சியினால் உடல், ____________ ஆகியவை மேம்படுகின்றன.
2. முழுஉடலுக்கான பயிற்சி என்பது, ____________குறிக்கும்.
3. உடற்பயிற்சியின்போது, நமது உள்ளுறுப்பான____________சுருங்கி விரிகிறது.
4. உடல் உறுதி பெறுவதற்கு ____________பயிற்சி மட்டும் போதாது.
5. சிறந்த பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் விருது____________

### இ) பின்வரும் வினாக்கள் சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக.

1. சிறந்த பயிற்சியாளருக்கு ஆஸ்கர் விருது வழங்கப்படுகிறது. (சரி/தவறு)
2. உடல் உறுதிபெற விளையாட்டுப் பயிற்சி போதுமானது அன்று. (சரி/தவறு)
3. உடலின் உறுதி உடையவரே! உலகில் இன்பம் உடையவர். (சரி/தவறு)
4. உடற்பயிற்சி உடலை மட்டும் மேம்படுத்துவதில்லை. அது, மனத்தையும் மேம்படுத்துகிறது. (சரி/தவறு)
5. உடற்பயிற்சி செய்யாத போதும் உடலுறுப்புகள், ஒழுங்கான முறையில் இயங்குகின்றன. (சரி/தவறு)

## 26.3 தெரிந்துகொள்வோம்

### கருத்து மாறாத் தொடர்கள்

ஒரு தொடரை மாற்றி எழுதினாலும் அதன் கருத்து மாறாது.

| | | |
|---|---|---|
| நான் உடற்பயிற்சி செய்ததால், என் உடல் வலிமை பெற்றது. |  | என் உடல் வலிமை பெற்றதற்குக் காரணம் உடற்பயிற்சி. |
| கண்ணன் திட்டமிட்டுச் செய்ததால் குறித்த நேரத்தில் பணியை முடித்தான். |  | கண்ணன் குறித்த நேரத்தில் பணியை முடிப்பதற்காகத் திட்டமிட்டான். |
| ஆசிரியர் மாணவருக்குப் பரிசளித்தார். |  | மாணவர் ஆசிரியரிடமிருந்து பரிசு பெற்றார். |
| எனக்கு உடல்நலம் சரியில்லாததால் பள்ளிக்குச் செல்லவில்லை. |  | நான் பள்ளிக்குச் செல்லவில்லை ஏனெனில் எனக்கு உடல்நலம் சரியில்லை. |
| ஒரு மதிப்பெண் வினாவிற்கு அதிகநேரம் எடுத்துக்கொண்ட மான்விழி, கட்டுரை வினாவிற்கு விடையளிக்கவில்லை. |  | மான்விழி ஒரு மதிப்பெண் வினாவிற்குக் குறைந்த நேரத்தை எடுத்துக் கொண்டிருந்தால், கட்டுரை வினாவிற்கு விடையளித்திருப்பாள். |

## பயிற்சிகள்

### அ) கொடுக்கப்பட்டுள்ள முதல் தொடரின் கருத்தைப் புரிந்துகொண்டு, பொருள்மாறாமல் அடுத்துவரும் தொடரை நிரப்புக.

1. அப்பா எனக்குப் பிடித்த வண்டியை வாங்கித் தந்தார்.

   அப்பா வாங்கி தந்த வண்டி எனக்குப் ____________________.

2. பல வண்ண மலர்களால் பூங்கா அழகாகக் காட்சியளிக்கிறது.

   பூங்கா அழகாகக் காட்சியளிக்கக் காரணம் ____________________.

3. பேச்சுப்போட்டிக்காக அதிக நேரத்தை ஒதுக்கிய மான்விழி, கட்டுரைப்போட்டியில் பின்தங்கினாள்.

   மான்விழி பேச்சுப்போட்டிக்கான நேரத்தைக் குறைத்திருந்தால் ____________________.

4. ஆசிரியர் நடத்தும் பாடத்தை மாணவர்கள் ஆர்வத்துடன் கற்கின்றனர்.

   மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றுக்கொள்ளும் வகையில்____________________.

### ஆ) கருத்து மாறாத தொடர்களை இணைத்துக்காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | நான் உண்ணும் உணவுவகைகள் சத்து நிறைந்தவை. | - | என் பாட்டி கற்றுக் கொடுக்கும் விளையாட்டுகள் அனைத்தும் ஆர்வமூட்டக் கூடியவை. |
| 2. | என் பாட்டி ஆர்வமூட்டும் விளையாட்டுகளைக் கற்றுத் தருவார். | - | நான் சத்து நிறைந்த உணவுகளையே உண்பேன். |
| 3. | இசையைக் கேட்டால் மனத்திற்கு அமைதி கிடைக்கும். | - | விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற போதிய பயிற்சிகளைச் செய்தல் வேண்டும். |
| 4. | போதிய பயிற்சிகளைச் செய்தால் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெறலாம். | - | மன அமைதிக்கு இசையைக் கேட்க வேண்டும். |

### இ) பின்வரும் தொடர்களுக்குக் கருத்து மாறாத்தொடர் உருவாக்குக.

1. தொடர் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்ற மாறனைச் செய்தியாளர்கள் நேர்காணல் செய்தனர்.

   ________________________________________

2. விடுமுறை நாள்களில் என் தாத்தா வீட்டிற்குச் செல்வது எனக்கு மகிழ்ச்சியளிக்கும்.


   ________________________________________

3. படங்களை வரைவது கவினுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

   ________________________________________

## 26.4 மொழியோடு விளையாடுவோம்

**ஒரே வண்ணக் கட்டங்களில் உள்ள சொற்களை இணைத்து, சொற்றொடர் உருவாக்குக.**




| | | | | |
|---|---|---|---|---|
| பழங்கள் | மோதிரம் | பாடல் | குடி | வண்டி |
| அணில்கள் | வாள் | மாலை | கரும்பு | வீடு |

### சுவைச்செய்தி

உலகின் அனைத்து நாடுகளும் பின்பற்றக் கூடிய உடற்பயிற்சியாகச் சூரிய வணக்கம் விளங்குகிறது. இப்பயிற்சியினைக் காலையிலும் மாலையிலும் சூரியன் இருக்கும் திசையை நோக்கிச் செய்தல் வேண்டும். இதை முறையாகச் செய்தால் உடல் இறுக்கம் குறையும். உடலுக்குத் தேவையான உயிர்ச்சத்து 'டி' (D) கிடைக்கும். மனம் அமைதி பெறுவதற்கும் மகிழ்ச்சி கொள்வதற்கும் இப்பயிற்சி உதவுகிறது.



சூரிய வணக்கம்

## கருத்து விளக்கப்படம்

**கீழ்க்காணும் விளம்பரத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடையளிக்க.**




**வினாக்கள்**

1. விளம்பரம் எதனைப் பற்றியது?
2. உடல் உறுதிபெற என்ன செய்ய வேண்டும்?
3. 50% கட்டண சலுகை எப்போது வழங்கப்படுகிறது?
4. உடற்பயிற்சிக்கூடத்தில் என்னென்ன வசதிகள் உள்ளன?
5. நீங்கள் உடற்பயிற்சிக் கூடத்துக்குச் செல்வதுண்டா?

## 26.5 கேட்டல் கருத்தறிதல்

### நேர்மை

வணிகன் ஒருவன், பொருள்களையெல்லாம் சந்தையில் விற்றுப் பெரும்பணத்துடன் ஊர் திரும்பினான். வழியில் ஓரிடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டான். பின்னர், வீட்டிற்குச் சென்றான். பணத்தைப் பெட்டியில் வைக்க எண்ணினான். ஆனால், பணப்பையைக் காணவில்லை. தான் ஓய்வெடுத்த இடத்தில் தொலைத்துவிட்டதாகக் கருதினான். உடனடியாக அந்த இடத்தை நோக்கிச் சென்றான். ஆனால், அங்குப் பணப்பை இல்லை. அந்த வணிகன் விட்டுச்சென்ற பணப்பையை ஆசிரியர் ஒருவர் கண்டெடுத்தார். அதைத் தம் வீட்டிற்குக் கொண்டுசென்றார். வீட்டு வாசலின்முன்பு, ஒரு பலகையைக் கட்டி

அதில், பணப்பையைத் தொலைத்தவர்கள் இங்கு வந்து பெற்றுக் கொள்ளலாம் என எழுதிவைத்தார். செய்தியறிந்த வணிகன், அந்த வீட்டுக்குச் சென்றான். ஆசிரியரின் நல்ல பண்பைப் பாராட்டி, அந்தப்பணத்தில் பாதியைக் கொடுக்க முன்வந்தான். ஆனால், அந்த ஆசிரியர் வாங்க மறுத்துவிட்டார். உடனே அந்த வணிகன் என் மனநிறைவுக்காக வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்று கூறி, அப்பணத்தை அவர் வீட்டிலேயே வைத்துவிட்டு உடனே விரைந்து சென்றான். ஆனால், திருடன், திருடன் அவனைப் பிடியுங்கள் என்று கத்திக்கொண்டே அந்த ஆசிரியர் ஓடிவந்தார். அங்கிருந்தவர்கள், அந்த வணிகனைப் பிடித்துக்கொண்டார்கள். அவன் என்ன திருடினான் என்று அவரிடம் கேட்டார்கள். அதற்கு அந்த ஆசிரியர், என்னுடைய நேர்மையையும் இதுவரை நான் காப்பாற்றி வந்த மதிப்பையும் திருடிக் கொண்டான் என்று நடந்ததை விவரமாகக் கூறினார்.

**வினாக்கள்**

1. வணிகன் தன் பொருள்களை விற்பதற்காக எங்குச் சென்றான்?
2. வணிகனின் பணப்பை எப்படிக் காணாமல் போனது?
3. வணிகனின் பணப்பையைக் கண்டெடுத்தவர் என்ன செய்தார்?
4. பணப்பையைக் கண்டெடுத்தவர் யாரைத் திருடன் எனக் கூறினார்?
5. ஆசிரியர் தம்மிடம் இருக்கும் விலைமதிப்புள்ள பொருள்கள் என்று எவற்றைக் குறிப்பிடுகிறார்?

## 26.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 26.7 செந்தமிழ்ச்செல்வம்

### இளைய தோழனுக்கு

நட..
நாளை மட்டுமல்ல
இன்றும்
நம்முடையது தான்
நட...
பாதங்கள்
நடக்கத்
தயாராய் இருந்தால்
பாதைகள்
மறுப்புச் சொல்லப்
போவதில்லை
நட...

- கவிஞர் மு. மேத்தா

**பழமொழி**

உடலினை உறுதி செய்

### சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. துரோணாச்சார்யா
2. உடற்பயிற்சி
3. உடலுறுதி
4. மனவுறுதி

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. விளையாட்டு
2. பதக்கங்கள்
3. தொழில்நுட்பம்
4. மகிழ்ச்சி

## 26.8 மொழிபெயர்ப்போம்

Exercise is any physical activity that we perform for relaxing our body and taking away all the mental stress.

______________________________________________

______________________________________________

## 26.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | உடல்நலம் | - | Health |
| 2. | நேர்காணல் | - | Interview |
| 3. | பயிற்சியாளர் | - | Trainer |
| 4. | விருது | - | Award |
| 5. | உடற்பயிற்சி | - | Physical Exercise |
| 6. | கைப்பந்து | - | Volleyball |
| 7. | நுரையீரல் | - | Lungs |
| 8. | சுவாசம் | - | Breath |
| 9. | சிக்கல் | - | Problem |
| 10. | நன்மை | - | Advantage |

## 26.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**மூன்று சொல் கொண்ட தொடரில் இடையில் வரும் சொல் ஒரு விலங்கு/ பறவையின் பெயராக வரும்படி பாடலைத் தொடர்ந்து எழுதுக.**

அழகிய மயிலைக் கண்டேனே!
ஆடிப்பாடி மகிழ்ந்தேனே!
துள்ளும் மானைக் கண்டேனே!
துள்ளிப் பிடிக்கச் சென்றேனே!
பாடும் குயிலைக் கண்டேனே!
பாட்டுக் கேட்டு மகிழ்ந்தேனே!
ஓடும் முயலைக் கண்டேனே!
ஓடிப் பிடிக்க முனைந்தேனே!

______________________________

______________________________

______________________________

______________________________

## 26.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்துச் சுருக்கி எழுதுக.**

ஒவ்வொருவரும் பொருளை ஈட்டுவதற்கு அரும்பாடுபடுகின்றனர். அவ்வாறு பாடுபட்டு ஈட்டும் பொருளில் சிறுபகுதியை மட்டுமாவது சேமித்தல் வேண்டும். அவ்வாறு சேமிக்கும் பொருள், 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதற்கு ஏற்ப, நாளடைவில் பெருகிப் பிற்கால வாழ்வுக்கு உதவும். இப்பழமொழி, பொருளைச் சேர்ப்பதற்காக மட்டுமன்று. உழைப்பிற்கும் கல்விக்கும்கூடப் பொருந்தும். நாம் நாள்தோறும் சிறுகச்சிறுக விடாது கற்போமாயின் நாளடைவில் நம் அறிவு வளர்ந்து ஓங்கும்.

## 26.12 செயல்திட்டம்

உடற்பயிற்சியை விளக்கும் படங்களையும் உடற்பயிற்சிக் கருவிகளின் படங்களையும் சேகரித்துப் படத்தொகுப்பு ஒன்றனை உருவாக்குக.

## பாடம் 27

## 27.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

நீங்கள் மற்றவர்களுக்குச் செய்த உதவிகள் குறித்து உங்கள் நண்பர்களுடன் வகுப்பில் கலந்துரையாடுக.

## 27.2 படிப்போம்

### சீர்திருத்தச் செம்மல்

செயற்கரிய செயல் செய்து மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களே உலக வரலாற்றில் இடம்பெறுகின்றனர். அவர்களுள் ஒருவர்தான் அயோத்திதாசர். இவர், தம் வாழ்நாள் முழுவதும் சமுதாய நலனுக்காகப் பாடுபட்டார். இவரைத், 'தென்னிந்தியச் சமூகத்தின் சீர்திருத்தச் செம்மல்' என மக்கள் அழைத்தனர்.



அயோத்திதாசர்
(1845 – 1914)

### ஆசிரியர்மீது அன்பு

அயோத்திதாசரின் இயற்பெயர் காத்தவராயன். இவர், அயோத்திதாசர் என்பாரிடம் கல்வி கற்றார். தம் ஆசிரியர்மீது கொண்ட அன்பினால் தம் பெயரை அயோத்திதாசர் என மாற்றிக்கொண்டார்.

### சமூகப் பணி

அயோத்திதாசர், உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டார். அவர்கள் முன்னேறுவதற்குக் கல்வியும் பொருளாதாரமும் அடிப்படையானவை என உணர்ந்தார். அதனால், சென்னையில் 'ஆல்காட் பஞ்சமர்' என்னும் பெயரில் பள்ளிகளை நிறுவ காரணமாக இருந்தார். அப்பள்ளிகளில் இலவசமாகக் கல்வி கற்றுத்தரப்பட்டது. கல்வி உதவித்தொகை, கற்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் போராடிப் பெற்றுத் தந்தார்.

### இதழ் ஆசிரியர்

'ஒரு பைசாத் தமிழன்' என்னும் வார இதழைத் தொடங்கினார். பிறகு அது 'தமிழன்' எனப் பெயர் மாற்றப்பட்டது. தம்முடைய சீர்திருத்தக் கருத்துகளைத் தம் இதழில் செய்திகளாக வெளியிட்டார். இவ்விதழ் வாரந்தோறும் புதன்கிழமை வெளிவந்தது.

சமூகப் பணியுடன் தமிழ்ப்பணியும் மேற்கொண்டார். இவர், சிறந்த தமிழறிஞர், சித்த மருத்துவர், சமூகச் சீர்திருத்தவாதி, பகுத்தறிவாளர், பன்மொழிப் புலமையாளர், இதழாசிரியர், படைப்பாளர், அரசியல் சிந்தனையாளர் எனப் பன்முகம் கொண்ட ஆளுமையாக விளங்கினார்.

## பொருள் அறிவோம்

1. சமுதாயம் - மக்களின் தொகுப்பு
2. செம்மல் – பெருமைக்குரியவர்
3. செயற்கரிய - செய்வதற்கு அரிய

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. 'தென்னிந்தியச் சீர்திருத்தச் செம்மல்' என்று அழைக்கப்பட்டவர் யார்?
2. அயோத்திதாசரின் இயற்பெயர் என்ன?
3. அயோத்திதாசர் என்று தன் பெயரை மாற்றிக்கொள்ளக் காரணம் யாது?
4. அயோத்திதாசர் யாருக்காகப் பாடுபட்டார்?
5. அயோத்திதாசர் ஏன் பள்ளிகளைத் தொடங்கினார்?

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(ஆல்காட் பஞ்சமர், உரிமை, காத்தவராயன், புதன்கிழமை, ஒரு பைசாத் தமிழன்)

1. அயோத்திதாசர், ______________ மறுக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டார்.
2. அயோத்திதாசர் தொடங்கிய பள்ளியின் பெயர் ______________
3. அயோத்திதாசரின் இயற்பெயர் ______________.
4. அயோத்திதாசர் நடத்திய இதழின் பெயர் ______________
5. அயோத்திதாசர் நடத்திய இதழ் வாரந்தோறும் ______________ வெளிவந்தது.

### இ) பின்வரும் தொடருக்குப் பொருந்தாத கூற்றைக் குறிப்பிடுக.

அயோத்திதாசர் பன்முகம் கொண்டவர்.

1. சிறந்த தமிழறிஞர்; சித்த மருத்துவர்; சமூகச் சீர்திருத்தவாதி; மக்கள் பற்று இல்லாதவர்
2. பகுத்தறிவாளர்; பன்மொழிப் புலமையாளர்; மொழிபெயர்ப்பாளர்; இதழாசிரியர்
3. சித்த மருத்துவர்; படைப்பாளர்; அரசியல் சிந்தனையாளர்; பதவி ஆசை உடையவர்

## 27.3 தெரிந்துகொள்வோம்

### வழாநிலைத் தொடர்கள்

| வ.எண் | பிழையான தொடர்கள் | பிழையற்ற தொடர்கள் |
|---|---|---|
| 1 | நானும் அன்பரசியும் சுற்றுலா சென்றேன். | நானும் அன்பரசியும் சுற்றுலா சென்றோம். |
| 2 | எங்கள் வீட்டிற்கு நேற்று உறவினர் வந்திருக்கிறார். | எங்கள் வீட்டிற்கு நேற்று உறவினர் வந்தார். |
| 3 | கண்மணி மாலை தொடுத்தான். | கண்மணி மாலை தொடுத்தாள். |
| 4 | நான் ஒரு புதிய எழுதுகோல் ஒன்று வாங்கினான். | நான் புதிய எழுதுகோல் ஒன்று வாங்கினேன். |
| 5 | புலவர் பலர் வந்தார்கள். | புலவர்கள் பலர் வந்தனர். |
| 6 | கண்ணன் வரைந்த ஓவியம் இதுவல்ல. | கண்ணன் வரைந்த ஓவியம் இதுவன்று. |
| 7 | செல்வி, நில். நானும் வந்தேன். | செல்வி, நில். நானும் வருகிறேன். |
| 8 | ஒருவர் எப்படிப் பேசுகிறாரோ அவ்வாறே வாழ்ந்துகாட்ட வேண்டும். | ஒருவர் எப்படிப் பேசுகிறாரோ அப்படியே வாழ்ந்துகாட்ட வேண்டும். |
| 9 | ஒரு ஆலமரத்தில் ஓர் கிளியைக் கண்டேன். | ஓர் ஆலமரத்தில் ஒரு கிளியைக் கண்டேன். |
| 10 | கந்தன் தான் செய்த தவறை எண்ணி வருந்தினான். | கந்தன் தான் செய்த தவற்றை எண்ணி வருந்தினான். |
| 11 | அழகுமயில் தோகை விரித்து ஆடின. | அழகுமயில் தோகை விரித்து ஆடியது. |
| 12 | திருக்குறள் இல்லங்கள்தோறும் இருக்கவேண்டிய ஓர் அறநூலாகும். | திருக்குறள் இல்லந்தோறும் இருக்கவேண்டிய ஓர் அறநூலாகும். |
| 13 | பழமொழி நானூறு என்னும் நூலில் ஒவ்வொரு பாடல்களிலும் ஒரு பழமொழி இருக்கும். | பழமொழி நானூறு என்னும் நூலில் ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி இருக்கும். |

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் தொடர்களுள் வழாநிலைத் தொடர்களைக் கண்டறிந்து (✓) குறிப்பிடுக.

1. அழகன் விளையாடினான். ( )
2. மதுமிதா பாடினான். ( )
3. இந்த ஊர் எங்குள்ளது? ( )
4. நாளை மழை பெய்தது. ( )
5. அறிவாளன் சுற்றுலா சென்றான். ( )

### ஆ) கீழ்க்காணும் தொடர்களைப் பிழையின்றி எழுதுக.

| | |
|---|---|
| வசந்தா படித்தான். | |
| கமலி பாடியது. | |
| நீ சென்றேன். | |
| அவள் வந்தானா? | |
| நாய் கத்தும். | |

### இ) கீழ்க்காணும் உரைப்பகுதியில் பிழையாக உள்ள தொடர்களை எடுத்து எழுதுக.

மழை பெய்துகொண்டிருந்தது. வாழைத்தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த பசுமாடு கத்தியது. தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன்.

## சுவைச்செய்தி

தமிழ்மீது பற்றுக்கொண்ட எல்லீஸ் பிரான்சிஸ் என்பவர், தமிழ் இலக்கியச் சுவடிகளைத் திரட்டுவதில் ஆர்வம் கொண்டிருந்தார். அவரது ஆர்வத்தை அறிந்துகொண்ட கந்தசாமி என்பவர், தம்மிடமிருந்த சில நூல்களின் ஓலைச்சுவடிகளை அவரிடம் கொடுத்தார். அவற்றைப் பெற்றுக்கொண்ட எல்லீஸ் பிரான்சிஸ் அந்த ஓலைச்சுவடிகளில் இருந்த செய்திகளைக் கந்தசாமியிடம் கேட்டறிந்தார். அவற்றைத் தொகுத்து 1812இல் அச்சிட்டு நூலாக வெளியிட்டார். அதுதான் உலகம் போற்றும் பொதுமறையாம் திருக்குறள். அவருக்கு ஓலைச்சுவடி தந்து உதவிய கந்தசாமி என்பவர், அயோத்திதாசரின் பாட்டனார் ஆவார்.

## 27.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் விடுகதைகளுக்கும் பழமொழிகளுக்கும் பொருந்தும் ஒரு சொல்லைக் கண்டறிந்து நிரப்புக.**

| வ.எண் | விடுகதை | பழமொழி | விடை |
|---|---|---|---|
| 1. | நீரைக் குறிக்கும் மற்றொரு சொல் ________ | உப்பு தின்றவன் ________ குடிக்க வேண்டும். | |
| 2. | சவாரி செய்ய ஏற்ற விலங்கு ________ | மண் ________ நம்பி ஆற்றில் இறங்காதே. | |
| 3. | தண்ணீரில் நீந்தும் தரையில் தாவும் அது என்ன? ________ | ________ தன் வாயால் கெடும். | |
| 4. | இதை வளர்த்தால் மழை பெறலாம் அது என்ன? ________ | ________ வைத்தவன் தண்ணீர் ஊற்ற வேண்டும். | |
| 5. | நேரத்தை இப்படியும் குறிப்பிடுவர் ________ | யானை வரும் பின்னே ________ ஓசை வரும் முன்னே. | |

## 27.5 கேட்டல் கருத்தறிதல்


### சிந்தித்துச் செயல்படு

மாணிக்கம், தம் நிலத்தில் தென்னங்கன்றுகளை நட முடிவு செய்தார். அந்த வேலையை கபிலன் என்பவரிடம் ஒப்படைத்தார். ஒரு குழியைத் தோண்டி, அதில் தென்னங்கன்று நடுவதற்கு ₹500 தருவதாகக் கூறினார். கபிலன் முதல்நாளில் இருபது குழியைத் தோண்டி 20 தென்னங்கன்று நட்டார். இரண்டாம் நாள் 15; மூன்றாம் நாள் 10; நான்காம் நாள் 5; இவ்வாறு குழிதோண்டும் எண்ணிக்கையும், தென்னங்கன்று நடும் எண்ணிக்கையும் நாள்தோறும் குறைந்துகொண்டே வந்தது. இறுதியில் குழி தோண்டவே முடியவில்லை. ஏன்? ஏனெனில் - மண்வெட்டியின் முனை மழுங்கிவிட்டது.

**வினாக்கள்**

1. மாணிக்கம் என்ன செய்ய முடிவெடுத்தார்?
2. மாணிக்கம் வேலையை யாரிடம் ஒப்படைத்தார்?
3. முதல் நாளில் கபிலன் எத்தனை தென்னங்கன்று நட்டார்?
4. ஒரு தென்னங்கன்று நடுவதற்கு எவ்வளவு கூலி கொடுக்கப்பட்டது?
5. கபிலனால் ஏன் குழி தோண்ட முடியவில்லை?

## 27.6 படம் பார்த்துக் கருத்துக் கூறல்



## 27.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்

- (குறள் 997)

-திருவள்ளுவர்

அரம் – கூர்மையான கருவி, போல்வர் - போன்றவர்

பொருள்:

மக்களுக்குரிய பண்பு இல்லாதவர், அரம்போலக் கூர்மையான அறிவைப் பெற்றிருந்தாலும் ஓரறிவு உயிராகிய மரத்துக்கு ஒப்பாவர்.

### பழமொழி

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. சீர்திருத்தச் செம்மல
2. உயர்ந்த எண்ணம்
3. பன்மொழிப் புலவர்
4. பொருளாதாரம்
5. பகுத்தறிவாளர்

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. ஆசிரியர்
2. அன்பு
3. முன்னேற்றம்
4. வார இதழ்

## 27.8 மொழிபெயர்ப்போம்

உலக மக்கள் அனைவரையும் சமமாகக் கருதி, அன்பு காட்டவேண்டும். பிறருக்கு ஏற்படும் பசி போன்ற துன்பங்களைப் போக்க முயற்சி செய்தல் வேண்டும்.

---

---

---

## 27.9 அறிந்துகொள்வோம்

1. வரலாறு – History
2. இலவசக் கல்வி – Free Education
3. உதவித்தொகை – Scholarship
4. சீர்திருத்தம் – Reformation
5. சமுதாய நலன் – Social welfare
6. உரிமை – Rights
7. பொருளாதாரம் – Economy

8. வேலைவாய்ப்பு – Employment

9. சமூகப்பணி – Social work

10. இதழ் – Magazine

11. புலமை – Scholarship

12. இதழாசிரியர் – Journalist

13. பகுத்தறிவாளர் – Rationalist

## 27.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் இணைப்புச்சொற்களுள் பொருத்தமானவற்றைக் கொண்டு உரையாடல் ஒன்று உருவாக்குக.**

**ஆனால் / ஆகையால் / அதனால் / அப்படியெனில் / எனவே / ஆகவே / ஆதலால் / ஏனெனில் / அல்லது / ஆயினும் / ஆனாலும் / இருப்பினும்**

நகுல் : முகிலா, நேற்று ஏன் விளையாட வரவில்லை?

முகில் : ஏனெனில், என் வீட்டிற்கு உறவினர் வந்திருந்தனர்.

நகுல் : அடுத்த வாரம் நமக்கு அரைஇறுதிப்போட்டி உள்ளது. மறந்துவிட்டாயா?

முகில் : மறக்கவில்லை, நகுல். ஆனாலும் இன்றும் என்னால் விளையாட முடியாது.

நகுல் : என்ன இப்படிச் சொல்கிறாய்? நீ சிறப்பாக விளையாடுகிறாய் என்று ஆசிரியர் கூறினாரே. ஆதலால், நீ கட்டாயம் வரவேண்டும்.

முகில் : ______________________________

நகுல் : ______________________________

முகில் : ______________________________

நகுல் : ______________________________

முகில் : ______________________________

நகுல் : ______________________________

முகில் : ______________________________

நகுல் : ______________________________

முகில் : ______________________________

நகுல் : ______________________________

## 27.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் படங்களுள் ஏதேனும் ஒன்றைத் தேர்வுசெய்து அதற்குப் பொருத்தமான உரையாடல் எழுதுக.**





## 27.12 செயல்திட்டம்

உனக்குப் பிடித்த சமூகச் சீர்திருத்தவாதி ஒருவரின் வாழ்வியல் நிகழ்வு ஒன்றனைக் கணினி நழுவமாக (Power Point) உருவாக்குக.

## 28.1 பேசுவோம்

# பாடம் 28





### கலந்துரையாடுவோம்

கேள்விகள் கேட்பதால் நமக்குக் கிடைக்கும் நன்மைகள் என்ன என்பதை வகுப்பில் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 28.2 படிப்போம்

### கேள்வி என்னும் கலை



**சாக்ரடீஸ்**
**(கி.மு. 470–399)**

கிரீஸ் நாட்டின் இராணுவத்தில் அவர் பணியாற்றினார். சிறப்பாகப் போரிட்டதைப் பாராட்டி அவருக்குப் பரிசு அறிவிக்கப்பட்டது. ஆனால் அவரோ, 'பரிசை என் நண்பருக்கு வழங்குங்கள்; ஏனெனில் அவரின் போர் உத்தியைத்தான் நான் கையாண்டேன்' என்றார். இத்தகைய பெருந்தன்மை அவரிடம் இயல்பாகவே இருந்தது.

அவரது நெருங்கிய நண்பர்கள் நீங்கள் அரசியலில் ஈடுபட்டால் பெரும்புகழ் பெறலாம் என்று கூறினர். அதற்கு அவர் 'பணத்தையும், பதவியையும் பெறுவது என் நோக்கமல்ல. மக்களின் மனத்தில் தெளிவினை ஏற்படுத்துவதே என்னுடைய முதன்மையான நோக்கமாகும்' என்றார். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

தம் நாட்டு மக்கள், அறியாமை நீங்கி நல்லறிவு பெற வேண்டும் என்று அவர் விரும்பினார். அதற்காக 'உன்னையே நீ அறிவாய்' என்று எல்லாரிடமும் எடுத்துக் கூறினார். அதனால் கேள்வி கேட்கும் எண்ணத்தை மக்கள் மனத்தில் உருவாக்கினார்.

சிந்திக்கத் தெரிந்தவன் மனிதன்; அவனுக்குச் சிந்திக்கும் பண்பு வளர வேண்டும் என்றார். ஆகவே, மக்கள் கூடும் இடங்களில் நம்பிக்கையோடு பேசினார். 'ஏதென்ஸ் நகர மக்களே! உங்களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் மாற்றவே நான் பேசிவருகிறேன். அதற்காக எனக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணாதீர்கள். இன்னும் என்னிடம் அறியாமை உள்ளது. அதைப் போக்கவும் நான் முயற்சி செய்கிறேன்' என்று பணிவோடு பேசினார்.

அவர் பேச்சு, மக்கள் மனத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது; மக்கள் விழிப்புணர்வு பெறத்தொடங்கினர். அவரைச் சுற்றி மக்கள் கூட்டம் எப்பொழுதும் இருந்தது. இதைப் பிடிக்காத சிலர், அவர்மீது பொய்யான குற்றம் சுமத்தினர். அதனால், அவர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்து தப்பிச் செல்வதற்கு அவருடைய நண்பர் ஆலோசனை கூறினார். அதற்கு அவர், 'அன்பு நண்பரே! ஒருவர் நமக்குத் தீமையே செய்தாலும், நம் கடமை அவருக்கு நன்மை செய்வது மட்டுமே. ஆகவே, அரசின் உத்தரவை எதிர்த்து தப்பிச் செல்வது தவறு' என்று கூறினார். தண்டனை பெற்ற நிலையிலும் தம் கொள்கையிலிருந்து மாறாமல் இருந்தார். அவர்தாம் உலகம் அறிந்த சிந்தனையாளர் மாமேதை சாக்ரடீஸ்.

## பொருள் அறிவோம்

1. இராணுவம் - நாட்டைக் காக்கும் வீரர் படை
2. உத்தி - தந்திரம்
3. எண்ணம் - சிந்தனை
4. தாக்கம் - விளைவு
5. ஆலோசனை - வழிகாட்டுதல்
6. உத்தரவு - ஆணை

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. சாக்ரடீஸ் ஏன் பரிசை நண்பருக்கு வழங்கச் சொன்னார்?
2. சாக்ரடீஸ் எந்த நாட்டின் ராணுவத்தில் பணி புரிந்தார்?
3. சாக்ரடீஸ் நோக்கம் என்ன?
4. சாக்ரடீஸ்மீது என்ன குற்றம் சுமத்தப்பட்டது?
5. சாக்ரடீஸ் சிறையில் இருக்கும்போது என்ன கூறினார்?

### ஆ) பின்வரும் வினாக்கள் சரியா/தவறா எனக் குறிப்பிடுக.

1. சாக்ரடீஸ் மக்களைச் சிந்திக்கத் தூண்டினார். (சரி/தவறு)
2. சாக்ரடீஸின் பேச்சை மக்கள் விரும்பவில்லை. (சரி/தவறு)
3. சாக்ரடீஸ் கேள்வி கேட்பதைத் தவறு என்றார். (சரி/தவறு)
4. சாக்ரடீஸ் அரசியலில் ஈடுபட விரும்பினார். (சரி/தவறு)
5. சாக்ரடீஸ் சிறையில் இருக்கும்போது தப்பிக்க முயன்றார். (சரி/தவறு)

### இ) பொருந்தாததை எடுத்து எழுதுக.

1. சாக்ரடீஸின் பண்புகளுள் பொருந்தாதது எது?

அ) பெருந்தன்மை ஆ) அரசியல் ஈடுபாடு

இ) பணிவான பேச்சு ஈ) கேள்வி கேட்டல்

2. சாக்ரடீஸ் மக்களிடம் கூறியவை

அ) உன்னையே நீ அறிவாய் ஆ) சிந்தித்துச் செயல்படுங்கள்

இ) கேள்வி கேளுங்கள் ஈ) கடமையைச் செய்யாதே

## 28.3 தெரிந்துகொள்வோம்


### தொகைச்சொற்கள்





இருதிணை - இரண்டு + திணை




முக்கனி - மூன்று + கனி




நாற்றிசை - நான்கு + திசை




ஐம்பொறி - ஐந்து + பொறி




அறுசுவை - ஆறு + சுவை

## மேலும் சில தொகைச்சொல் அறிவோம்.

| | | |
|---|---|---|
| 2 | இருசுடர் | ஞாயிறு, திங்கள் |
| 3 | முத்தமிழ் | இயல், இசை, நாடகம் |
| | மூவேந்தர் | சேரர், சோழர், பாண்டியர் |
| | முப்பால் | அறம், பொருள், இன்பம் |
| | முக்காலம் | இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் |
| | மூவிடம் | தன்மை, முன்னிலை, படர்க்கை |
| 4 | நாற்படை | தேர், யானை, குதிரை, காலாள் |
| 5 | ஐம்பூதம் | நிலம், நீர், காற்று, தீ, வானம் |
| | ஐம்பெருங்காப்பியம் | சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி |
| | ஐந்திலக்கணம் | எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி |
| | ஐம்பால் | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் |
| | ஐந்திணை | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| 6 | ஆறு பொழுது | மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு |
| 7 | எழுவகைப் பெண்பாற்பருவம் | பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் |
| | எழுவகை ஆண்பாற்பருவம் | பாலகன், விடலை, காளை, மீளி, மறவோன், திறவோன், முதுமகன் |
| | பூவின் ஏழு பருவம் | அரும்பு, மொட்டு, மலர், முகை, அலர், வீ, செம்மல் |
| | கடையெழு வள்ளல் | பாரி, காரி, பேகன், ஆய், ஓரி, அதிகன், நள்ளி |
| 8 | எண்வகை மெய்ப்பாடு | நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை |
| 9 | நவ(ஒன்பது) இரத்தினம் | கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம் |
| 10 | பத்துப் பருவம் (ஆண்) | காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை |
| | பத்துப் பருவம் (பெண்) | காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல் |

## பயிற்சிகள்

### அ) தொகைச்சொற்களைப் பிரித்து எழுதுக.

1. இருசுடர்
2. முப்பால்
3. மூவேந்தர்
4. நாற்படை
5. ஐந்திலக்கணம்

### ஆ) படங்கள் உணர்த்தும் தொகைச்சொல்லை எழுதுக.

(முத்தமிழ், ஐந்திணை, ஐம்பால்)




1. ______________________






2. ______________________




3. ______________________

## இ) விடுபட்ட சொல்லைக் கண்டறிக.


**(தெற்கு, மெய், பலா, புளிப்பு)**

| | | |
|---|---|---|
| இருசுடரில் ஒன்று விடுபட்டுள்ளது. அது எது? |  | சந்திரன் |
| முக்கனியுள் ஒன்று விடுபட்டுள்ளது. அது எது? |  | |
| நாற்றிசையில் ஒன்று விடுபட்டுள்ளது. அது எது? |  | |
| ஐம்பொறியுள் ஒன்று விடுபட்டுள்ளது. அது எது? |  | |
| அறுசுவையுள் ஒன்று விடுபட்டுள்ளது. அது எது? |  | |

## 28.4 மொழியோடு விளையாடுவோம்

**கட்டத்தில் ஒரே வண்ணமிட்ட எழுத்துகளை முறைப்படுத்தி எழுதிச் சொற்படிக்கட்டு அமைக்க.**

| | | | |
|---|---|---|---|
| | தி | கை | கை |
| கா | ந | த் | ழு |
| கை | பு | கை | கை |
| ன் | ர் | அ | ன |



### சுவைச்செய்தி

சாக்ரடீஸ், பிளேட்டோவுடன் கடைத்தெரு வழியாகச் சென்றார். அப்பொழுது ஒவ்வொரு பொருளையும் நுட்பமாகப் பார்த்தார். இதைக் கண்ட பிளேட்டோ 'நீங்கள் எந்தப் பொருளையும் வாங்கப் போவதில்லை, பின்பு ஏன் ஒவ்வொரு பொருளையும் கூர்ந்து பார்க்கிறீர்கள்' என்று கேட்டார். அதற்குச் சாக்ரடீஸ், 'உண்மைதான். நான் எவற்றையும் வாங்கப்போவதில்லை. ஆனால், எனக்கு வேண்டாத, நான் பயன்படுத்தாத பொருள்கள் இந்த உலகத்தில் எவ்வளவு இருக்கின்றன என்றுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்றார்.



சாக்ரடீஸ், பிளேட்டோ

## 28.5 கேட்டல் கருத்தறிதல்

### தனித்தன்மையை இழக்காதே!

துறவி ஒருவர் ஒற்றையடிப் பாதை வழியே நடந்து சென்று கொண்டிருந்தார். அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள், "ஐயா, அந்தப்பக்கம் சென்று விடாதீர்கள். ஒரு பாம்பு அந்த வழியாகப் போவோர் வருவோரையெல்லாம் கொத்துகிறது" என்றனர். அதற்கு அந்தத் துறவியோ "நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறியவாறே சென்றார். காலடியோசை கேட்டவுடன் புற்றிலிருந்து வந்த பாம்பு, துறவியைக் கொத்த வந்தது. அப்போது, துறவி அந்தப் பாம்பைக் கட்டுப்படுத்தும் வித்தையைச் செய்யவே, பாம்பு அமைதியாக இருந்தது. "யாருக்கும் தீங்கு செய்யாதே" என்று சொல்லிவிட்டுச் சென்றார் அந்தத் துறவி. சில மாதம் கழித்து, அவர் மீண்டும் அந்த வழியே வந்தார். அவரை அடையாளம் கண்டு பாம்பு வெளியே வந்தது. அதன் உடல் மெலிந்திருந்தது. "ஏன் இப்படி இருக்கிறாய்?" என்று அவர் கேட்டார். அதற்கு அந்தப் பாம்பு, "யாரையும் துன்புறுத்தக்கூடாது என்று கூறினீர்கள். நானும் அமைதியாகத்தான் இருந்தேன். ஆனால், நான் அமைதியாக இருப்பதைப் பார்த்து, சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் என்னைக் கல்லால் அடித்துத் துன்புறுத்தினர். உயிருக்குப் பயந்து, யார் கண்ணிலும் படாமல் வாழ்கிறேன்" என்று பரிதாபமாகக் கூறியது. "அடடே, யாருக்கும் தீங்கு செய்யாதே என்றுதான் கூறினேன். ஆனால், உன்னை யாராவது துன்புறுத்தும்போது, சீறக்கூடாது என்று கூறவில்லையே" என்றார் அந்தத் துறவி.

#### வினாக்கள்

1. துறவி எதன்வழியே நடந்து சென்றார்?

2. துறவியைக் கண்ட சிறுவர்கள் என்ன கூறினார்கள்?

3. பாம்பின் உடல் ஏன் மெலிந்திருந்தது?

4. உயிருக்குப் பயந்து வாழ்வதாகப் பாம்பு கூறக் காரணம் என்ன?

5. பாம்புக்குத் துறவி கூறிய அறிவுரை என்ன?

## 28.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 28.7 செந்தமிழ்ச்செல்வம்

### ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கிடில் தாழ்வு!
உள்ளத்திலே ஒரு கள்ளமில்லாமல்
ஊருக்குள்ளே பல பேதங்கொள்ளாமல்
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!
சண்டைகள் தீர்ந்தே மனிதர்கள் சேர்ந்தால்
தரணியில் அது புதுமை!
உண்மை தெரிந்தால் தன்னை உணர்ந்தால்
ஓடி மறைந்திடும் மடமை!
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!
ஒற்றுமை நீங்கிடில் தாழ்வு!

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(கள்ளம் - குற்றம் ; பேதம் – பாகுபாடு;
தரணி – உலகம்; மடமை – அறியாமை)

**பழமொழி**

தனிமரம் தோப்பாகாது

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. பரிசு அறிவிக்கப்பட்டது
2. கேள்வி கேளுங்கள்
3. நல்லறிவு பெறட்டும்

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. இராணுவம்
2. நண்பர்கள்
3. விழிப்புணர்வு
4. உத்தரவு

## 28.8 மொழிபெயர்ப்போம்

சாக்ரடீஸின் கேள்வி கேட்கும்முறை, ஏதென்ஸ் நகர இளைஞர்களை மிகவும் கவர்ந்தது. இவரின் கொள்கைகளால் பிளாட்டோவும் அரிஸ்டாட்டிலும் ஈர்க்கப்பட்டனர். இவருடைய கொள்கைகளைப் பரப்பினர். பிற்காலத்தில் சிறந்த தத்துவ அறிஞர்களாகவும் விளங்கினர்.

## 28.9 அறிந்துகொள்வோம்

1. இராணுவம் – Army
2. போர் – War
3. உத்தி – Strategy
4. கையாளுதல் – Handling
5. அரசியல் – Politics

6. நோக்கம் – Aim

7. அறியாமை – Ignorance

8. குற்றம் – Crime

9. சிறை – prison

10. கடமை – Duty

11. உத்தரவு – Order

12. நம்பிக்கை - Confidence

13. அறியாமை - Ignorance

14. கொள்கை - Policy

15. தத்துவம் - Philosophy

## 28.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**இனிப்புக் கடையொன்று தன் பொருள்களை விற்பனை செய்ய விரும்புகிறது. அதற்கேற்ப, விலைப் பட்டியல் ஒன்றை உருவாக்கி வருக.**



## 28.11 உயர்நிலைத்திறன்

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பயன்படுத்தி, 'வானவில்' என்னும் தலைப்பில் உரைப்பகுதி உருவாக்குக.**

இயற்கை அழகு – அழகிய வண்ணங்கள் – மழைக்காலம் – கிழக்கிலும் மேற்கிலும் தோன்றுதல் – மழைத்துளி வழியே ஒளி – ஏழு நிறம் – அனைவருக்கும் மகிழ்ச்சி.

## 28.12 செயல்திட்டம்

உலகின் தலைசிறந்த மாமேதைகளின் ஒளிப்படங்களைத் திரட்டித் தொகுப்பேடு ஒன்றனை உருவாக்குக.

29.1 பேசுவோம்

பாடம் 29

# ஆதரவற்றோர் இல்லம்




## கலந்துரையாடுவோம்

அறச்செயல்கள் பற்றியும் நீங்கள் பிறருக்கு உதவி செய்த நிகழ்வுகள் குறித்து வகுப்பில் உங்கள் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 29.2 படிப்போம்

### வள்ளலாரின் வாழ்வியல் நெறி



மனிதனை மனிதனாக வாழச்செய்வது அன்பு. அந்த அன்பை அனைத்து உயிர்களிடமும் காட்டுவதே மிகச்சிறந்த மனிதநேயமாகும்.

எந்த உயிரையும் துன்புறுத்துதல் கூடாது; எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல எண்ணுதல் வேண்டும்; உயிர்க்கொலை அறவே கூடாது; எல்லாரையும் சமமாகக் கருதுதல் வேண்டும்; ஏழைகளின் பசியைப் போக்குதல் வேண்டும் ஆகிய உயர்ந்த கருத்துகளை வலியுறுத்தினார். அதன்படி வாழ்ந்தும் காட்டினார். அவர்தாம் திருவருள் பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்பட்ட இராமலிங்க அடிகள்.

இராமலிங்க அடிகள், 1823 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 ஆம் தேதி கடலூர் மாவட்டத்திலுள்ள மருதூரில் இராமையா பிள்ளை – சின்னம்மையார் இணையருக்கு மகனாகப் பிறந்தார்.

இராமலிங்கனாரின் கொள்கைகளுள் முதன்மையானது, உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதலாகும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய இவர், மனிதர்கள்மீது மட்டுமல்லாமல் தாவரங்கள், விலங்குகள் மீதும் அன்பு செலுத்துதல் வேண்டும் என்றார்.

மனிதர்களுக்கு ஏற்படும் துன்பங்களுள் கொடுமையானது பசியினால் ஏற்படும் துன்பம் என்பதை உணர்ந்திருந்தார். வறுமையில் வாடும் மக்களின் பசியைத் தீர்ப்பதே

வாழ்வின் சிறந்த நெறியாகும் என்று வலியுறுத்தினார். அதனால்தான், 1867 ஆம் ஆண்டு கடலூர் மாவட்டத்திலுள்ள வடலூர் என்னும் சிற்றூரில், சத்திய தருமச் சாலை என்னும் அமைப்பை நிறுவினார். இதன்மூலம் உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஏழை, பணக்காரன், ஆண் – பெண் என வேறுபாடுகள் இன்றி அனைவரின் பசியையும் போக்கினார். அன்று அவர் மூட்டிய அடுப்பின் தீ இன்றும் அணையாமல் பசித்தோர்க்கு உணவளித்து வருகிறது.

இந்தத் தருமசாலையைத் தேடி வருபவர்களுக்கு 3 வேளையும் உணவு வழங்கப்படுகிறது. தற்போது தருமசாலைக்கான உணவுப் பொருள்களைத் தமிழக அரசு குறைந்த விலைக்கு வழங்கி வருகிறது.

பசித்தவர்களின் பசிப்பிணியைப் போக்கும் "வள்ளல்" தன்மை கொண்டவராக இராமலிங்க அடிகள் திகழ்ந்ததால் மக்கள் இவரை "வள்ளலார்" என அன்புடன் அழைத்தனர். இன்றும் வள்ளலாரின் பெயரால் இலட்சக்கணக்கான மக்களின் பசியாற்றப்படுகிறது. வடலூரில் தலைமை இடம் இருந்தாலும், உலகமெங்கும் அவரது கொள்கையைப் பின்பற்றுகின்றவர்கள் அனைவருக்கும் உணவளித்துப் பசியாற்றுகிறார்கள்.

பசித்துன்பத்தைப் போக்கியதுடன் மக்களின் அறியாமை இருளைப் போக்கவும் வள்ளலார் அறிவுரை வழங்கினார். அதற்காக வடலூரில் சத்திய ஞான சபையை நிறுவினார். இது, வள்ளலாரின் வாழ்வியல் நெறிகளை வளர்க்கும் இடமாக இன்றும் விளங்குகிறது.

வள்ளலார் சமத்துவம், கல்வி, தியானயோகம் இவற்றை வலியுறுத்தினார். உயிர்ப்பலியைத் தடுத்து நிறுத்தினார். சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை, அறக் கூழ்ச்சாலை என்று அவர் தோற்றுவித்த ஆன்மிகப் பணிகள் இன்றும் வடலூரில் நடந்து வருகின்றன. வள்ளலார் வாரவழிபாட்டு நிலையங்கள், வள்ளலார் மன்றங்கள், அருட்பிரகாச சபைகள், சன்மார்க்க சங்கங்கள் என வெவ்வேறு பெயர்களில் அவை செயல்படுகின்றன. தமிழகத்தில் ஏராளமான ஊர்களில் வள்ளலாருக்குச் சிறிய ஆலயங்களும் உள்ளன. வள்ளலார் ஜோதியில் கலந்ததாகச் சொல்லப்படும் தைப்பூச நாள் அவருக்கான குருபூஜை நாளாக இன்றும் கொண்டாடப்படுகிறது.

வள்ளலாரின் எளிய கொள்கைகள் பலரால் இன்றளவும் பின்பற்றப்படுகின்றன. அவை பின்வருமாறு:

பிற உயிர்களையும் தன்னுயிர் போல் கருதவேண்டும்.

பசித்த உயிர்களுக்கு உணவு அளித்து ஆதரிப்பதும் உயிர்க்கொலை செய்யாத பண்புமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஜீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்.

ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு !

எல்லா உயிரையும் தம் உயிர்போல் நினைக்கும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையைக் கடைப்பிடிக்க வேண்டும் !

## பொருள் அறிவோம்

1. அறவே – முழுவதுமாக
2. கருதி – நினைத்து
3. இரந்து – பிறரிடம் கேட்டு
4. மூட்டிய – உண்டாக்கிய
5. நெறி - கொள்கை

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. மனிதநேயம் என்றால் என்ன?
2. வள்ளலாரின் கொள்கைகளுள் இரண்டனைக் கூறுக.
3. வள்ளலார் எதைக் கண்டு வாடினார்?
4. சத்திய ஞானசபை ஏன் ஏற்படுத்தப்பட்டது?
5. சத்திய தருமச் சாலையின் சிறப்பு என்ன?

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(இராமலிங்க அடிகள், உயிர்க்கொலை, அன்பு செலுத்துதல், சத்திய தருமச்சாலை, உள்ளம்)

1. வள்ளலார் ______________ அறவே கூடாது என்றார்.
2. வள்ளலார் என்று அழைக்கப்பட்டவர் ______________
3. வள்ளலாரின் கொள்கைகளுள் முதன்மையானது, உயிர்களிடத்தில் ______________
4. வள்ளலார் பசியால் வாடியவர்களைக் கண்டு ______________ பதைத்தார்.
5. வள்ளலார் வடலூரில் ______________ நிறுவினார்.

### இ) கீழ்க்காணும் வினாக்களுக்கு சரியான விடையை எழுதுக.

1. மனிதனை மனிதனாக வாழச்செய்வது

   அ) குணம் ஆ) பண்பு இ) அன்பு

2. இராமலிங்க அடிகள் பிறந்த ஊர்

   அ) வடலூர் ஆ) மருதூர் இ) வடமூர்

3. மனிதர்களுக்கு ஏற்படும் துன்பங்களுள் கொடுமையானது

   அ) பசி ஆ) பார்வைக் குறைபாடு இ) மனநோய்

## 29.3 தெரிந்துகொள்வோம்

### புணர்ச்சி

இருசொல் இணைவது புணர்ச்சி

**புணர்ச்சி**

- இயல்பு புணர்ச்சி
- விகாரப் புணர்ச்சி

**இயல்பு புணர்ச்சி**

இரு சொல் இணையும்போது, எந்த மாற்றமும் இல்லை.

(எ.கா.)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ் | + | மொழி | = | தமிழ்மொழி |
| 2. | ஆணி | + | வேர் | = | ஆணிவேர் |
| 3. | வாழை | + | மரம் | = | வாழைமரம் |

**விகாரப் புணர்ச்சி**

இரு சொல் இணையும்போது மாற்றம் உண்டு.

**விகாரப் புணர்ச்சி**

- தோன்றல்
- திரிதல்
- கெடுதல்

## தோன்றல்

இடையில் ஓர் எழுத்து தோன்றும்

(எ.கா.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திரு | + | குறள் | = | திருக்குறள் |
| 2. | தமிழ் | + | பாடம் | = | தமிழ்ப்பாடம் |
| 3. | மலை | + | தேன் | = | மலைத்தேன் |
| 4. | பட்டு | + | சட்டை | = | பட்டுச்சட்டை |

## திரிதல்

ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாக மாறும்

(எ.கா.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பல் | + | பசை | = | பற்பசை |
| 2. | மண் | + | குடம் | = | மட்குடம் |
| 3. | அருள் | + | செல்வம் | = | அருட்செல்வம் |
| 4. | பொன் | + | சிலம்பு | = | பொற்சிலம்பு |

## கெடுதல்

ஓர் எழுத்து கெடும் (மறையும்)

(எ.கா.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மரம் | + | வேர் | = | மரவேர் |
| 2. | வட்டம் | + | வளையல் | = | வட்டவளையல் |
| 3. | பாடம் | + | நூல் | = | பாடநூல் |
| 4. | தங்கம் | + | மோதிரம் | = | தங்கமோதிரம் |

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. மலைவாழை = ________________
2. கடலலை = ________________
3. மண்ணடுப்பு = ________________
4. கற்கண்டு = ________________
5. வட்டமுகம் = ________________

### ஆ) கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. எழுத்து + அறிவு = ________________
2. தீ + சுடர் = ________________
3. அழகு + உணர்ச்சி = ________________
4. மேகம் + கூட்டம் = ________________
5. பத்து + இரண்டு = ________________

### இ) சேர்த்து எழுதப்பட்ட சொற்களில் புதியதாகத் தோன்றியுள்ள எழுத்தை எழுதுக.

1. வாழை + பழம் = வாழைப்பழம் ________________
2. பள்ளி + பருவம் = பள்ளிப்பருவம் ________________
3. இந்த + கை = இந்தக்கை ________________
4. கை + தொழில் = கைத்தொழில் ________________
5. தமிழ் + சங்கம் = தமிழ்ச்சங்கம் ________________

### ஈ) சொற்களில் திரிவதற்கு முன் இருந்த எழுத்துகளோடு பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1 | கற்சிலை | ள் - ட் |
| 2 | பொற்சிலை | ல் – ற் |
| 3 | கட்செவி | ன் – ற் |
| 4 | உட்பொருள் | ண் – ட் |

## 29.4 மொழியோடு விளையாடுவோம்

**சொற்றொடர்ப் படிக்கட்டு உருவாக்குக.**

பச்சைக் கிளி

கிளிப் பேச்சு

பேச்சுத் தமிழ்

தமிழ் மொழி

மொழி விளையாட்டு

தொடர்வண்டி

________________________

________________________

________________________

________________________

மலர்மாலை

________________________

________________________

________________________

________________________

### தகவல் துளி

மழை, வெள்ளம், நிலநடுக்கம் போன்ற இயற்கைப்பேரிடர்கள் மக்களைப் பாதிக்கின்றன. போர், குண்டுவெடிப்பு போன்ற செயற்கைப்பேரிடர்களாலும் மக்கள் துன்பப்படுகின்றனர். அவற்றில் பாதிக்கப்பட்டவர்களை மீட்கவும் பாதுகாக்கவும் நல்ல மனிதர்கள் சிலர் முன்வருகின்றனர். அவர்கள் தங்கள் உயிரைக்கூடப் பொருட்படுத்தாமல் போராடுகின்றனர். அவர்களின் மனிதநேயம் மிக்க சேவையை நன்றியுடன் நினைவுகூர்வதற்காக உருவாக்கப்பட்டதே 'உலக மனித நேய நாள்'. இது ஆண்டுதோறும் ஆகஸ்டு 19ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

## கருத்து விளக்கப்படம்

**கீழ்க்காணும் நூல் அறிமுகத்தினைப் படித்து, வினாக்களுக்கு விடையளிக்க.**

### நூல் அறிமுகம்




**குழந்தைக் கவிஞரின் கதைப்பாடல்கள் முதல் தொகுதி**

குழந்தைகள் கதை படிப்பதிலும் பாடல் பாடுவதிலும் மகிழ்ச்சி அடைவர். ஆனால் பாடலிலேயே கதை இருப்பின் அவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இவ்வாறு பாடல்வழியே கதை கூறுவதைக் கதைப்பாடல்கள் என்பர். இதனை ஆங்கிலத்தில் Story Poems என்று கூறுவர்.

இன்று குழந்தைப் பாடல்கள் எழுதும் பலருக்கு வழிகாட்டியாக விளங்குபவர் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா.

இவருடைய இந்நூலில் 50 கதைப்பாடல்கள் உள்ளன.
இவை, ஒவ்வொன்றும் படிப்போர்க்கு எல்லையற்ற மகிழ்ச்சியளிக்கின்றன.

**வினாக்கள்**

1. யாருடைய நூலுக்கான அறிமுகம் கொடுக்கப்பட்டுள்ளது?
2. கதைப்பாடல்கள் என்றால் என்ன?
3. கதைப்பாடல்கள் என்பதை ஆங்கிலத்தில் எவ்வாறு கூறுவர்?
4. அழ.வள்ளியப்பா யாருக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்?
5. கதைப்பாடல்கள் நூலில் எத்தனை பாடல்கள் உள்ளன?

## 29.5 கேட்டல் கருத்தறிதல்

### அறிவே ஆயுதம்

ஒரு குளத்தில் மீன்கள் மூன்று வாழ்ந்து வந்தன. முதல் மீனின் பெயர் 'வருமுன் காப்பான்'. இரண்டாவது மீனின் பெயர் 'வரும்போது காப்பான்'. மூன்றாவது மீனின் பெயர் 'வந்தபின் காப்பான்'. ஒருநாள், அந்தக் குளத்தைச் சிலர் பார்வையிட்டனர். அதில் மீன்கள் இருப்பதைக் கண்டனர். நாளை வலையுடன் வந்து மீன் பிடிக்கலாம் என்று கூறியவாறே திரும்பிச் சென்றனர். அவர்கள் கூறியதை மீன்கள் கேட்டன. வருமுன் காப்பான், மற்ற மீன்களிடம் நாம் இப்போதே இங்கிருந்து வேறு நீர்நிலைக்குச் சென்றுவிடுவோம் என்று கூறியது. ஆனால், வரும்போது காப்பான், அப்படி ஒன்றும் அவசரமில்லை. அவர்கள் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்றது. வந்தபின் காப்போனோ இதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று அமைதியாக இருந்தது. மற்ற இரண்டும் தன் பேச்சைக் கேட்காததால், வருமுன் காப்பான் மட்டும் அங்கிருந்து வேறு நீர்நிலைக்குச் சென்றுவிட்டது. மறுநாள் அங்கு வந்தவர்கள் வலையைக் குளத்தினுள் வீசினர். மற்ற இரண்டு மீனும் வலையில் சிக்கிக்கொண்டன. அப்போது, வரும்போது காப்பான் வலையில் அசையாமல் இருந்தது. அதனைக் கண்டவர்கள் அஃது இறந்துவிட்டதெனக் கருதி, தரையில் தூக்கிப் போட்டனர். ஆனால், வரும்போது காப்போனோ மெதுவாக நழுவி, மீண்டும் குளத்தினுள் மறைந்துவிட்டது. பாவம். வந்தபின் காப்பான் மட்டும் தப்பிக்க வழிதெரியாமல் வலையில் சிக்கியது.

**வினாக்கள்**

1. குளத்தில் வாழ்ந்த மீன்களின் பெயர்களைக் கூறுக.
2. குளத்தைப் பார்வையிட்டவர்கள் என்ன கூறிவிட்டுச் சென்றார்கள்?
3. வருமுன் காப்பான், மற்ற மீன்களிடம் என்ன கூறியது?
4. வரும்போது காப்பான் வலையிலிருந்து எவ்வாறு தப்பித்தது?
5. கதையில் எந்த மீனின் செயல் உனக்குப் பிடித்திருந்தது? காரணம் கூறுக.

## 29.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 29.7 செந்தமிழ்ச்செல்வம்

### மணிமேகலை

அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இது கேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும், உடையும், உறையுளும் அல்லது
கண்டது இல்...

- (பாடல் வரி 228-231)

- சீத்தலைச் சாத்தனார்

(மன்னுயிர் – நிலைபெற்ற உயிர்; உண்டி - உணவு; உறையுள் – இருப்பிடம்)

**பொருள்:**

அறம் என்பது யாது என்றால், உயிர்களிடத்து எந்த வேறுபாடும் இன்றி உணவும் உடையும் வாழும் இடமும் தருவதே ஆகும்.

**பழமொழி**

முயற்சி திருவினை ஆக்கும்

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. மனிதநேயக் கொள்கை
2. வள்ளலார் வழி
3. வாடிய பயிர்
4. பசித்தோர்க்கு உணவு

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. உணவு
2. உள்ளம்
3. உயிர்கள்
4. சமம்

## 29.8 மொழிபெயர்ப்போம்

Humanity refers to caring for and helping others whenever and wherever possible. It means helping others at times when they need that help the most.

________________________________________

________________________________________

________________________________________

## 29.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பசி | - | Hunger |
| 2. | இரக்கம் | - | Compassion |
| 3. | தாவரங்கள் | - | Plants |
| 4. | விலங்குகள் | - | Animals |
| 5. | வறுமை | - | Poverty |
| 6. | தன்னம்பிக்கை | - | Self-confidence |
| 7. | சமத்துவம் | - | Equality |

8. ஆதரித்தல் - Support

9. ஒருமைப்பாடு - Integration

10. தியானம் - Meditation

## 29.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கொடுக்கப்பட்ட பாதிக்கதையுடன் உம் கற்பனையை இணைத்து மீதிக் கதையைக் கூறுக. பொருத்தமான தலைப்பு ஒன்றும் தருக.**

செல்வன் தன் தம்பியுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது, செல்வன் எறிந்த பந்து, அருகிலிருந்த குளத்தினுள் விழுந்துவிட்டது. பந்து தண்ணீரில் மிதப்பதைக் கண்டு, இருவரும் பந்தை எடுக்க முயற்சி செய்தனர். அப்போது, எதிர்பாராத வகையில்...

## 29.11 உயர்நிலைத்திறன்

பள்ளி ஆண்டு விழாவிற்கு வருகை தர இருக்கும் சிறப்பு விருந்தினரை வரவேற்பதற்காக உரை ஒன்றனை உருவாக்குக.

## 29.12 செயல்திட்டம்

நீங்கள் செய்த நற்செயல் ஒன்றனை வரைகதையாக (Cartoon) வரைந்து வருக.



பாடம்

30

## 30.1 பேசுவோம்

### கலந்துரையாடுவோம்

பிறருக்காகச் செய்யும் செயலால் நீங்கள் அடைந்த மகிழ்ச்சியை வகுப்பில் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 30.2 படிப்போம்

### அன்னை தெரசாவின் அருள்உள்ளம்



அன்னை தெரசா 1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ஆம் நாள் தென் யுகோஸ்லாவியாவில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஷா போஜ்ஷேவ் (Agnes Gonsha Bhojshew). இவர், சிறுவயதிலிருந்தே பிறருக்குத் தொண்டு செய்யும் நல்ல உள்ளம் கொண்டு விளங்கினார். தமது 18ஆவது வயதில் அயர்லாந்து நாட்டில் இருந்த லொரேட்டோ கன்னித் துறவிமார் திருச்சபை மடத்தில் சேர்ந்தார். பின்னர், ஓராண்டு கழித்து இந்தியாவிலுள்ள கொல்கத்தாவுக்கு வந்தார். அங்குக் கன்னித்துறவிகள் நடத்திவந்த புனிதமேரிப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

நோய், வறுமை போன்ற காரணங்களினால் துன்பப்படுகின்ற சிறு வயது குழந்தைகள், முதியோர்கள் போன்றவர்களின் துயரங்களைப் போக்குவதில் அன்னை தெரசா தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார்.

ஒரு முறை அன்னை தெரசா, தொழுநோயால் பாதிக்கப்பட்ட பெண்மணி ஒருவரைப் பார்த்தார். அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அவர், சிகிச்சைபெற உதவினார். ஆனால், மருத்துவமனையிலிருந்த மற்ற நோயாளிகளின் நிலை அவரைப் பெரிதும் பாதித்தது.

அவர்களைப் பராமரிக்க நினைத்தார். அதற்காகப் பலரின் உதவியை நாடினார். அவர்களைப் பாதுகாக்கவும் சிகிச்சை அளிக்கவும் இட வசதி கேட்டார். அப்போது, சுகாதார

அலுவலர் ஒருவர், இரண்டு அறையைக் காண்பித்தார். அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கூறியதைக் கேட்ட தெரசா மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

தம்முடன் இருந்த தன்னார்வலர்களை அழைத்தார். அவர்களிடம் 'அறையைத் தூய்மை செய்யுங்கள்; இங்குதான் நம் பணி தொடரப் போகிறது; தொழுநோய் பாதித்தவர்களைக் கவனத்துடனும் பரிவுடனும் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று கூறினார்.

தொழுநோய் பாதித்த ஒருவரைத் தெரசா சுத்தம் செய்துகொண்டிருந்தார். அதனைக் கண்ட அவரின் நண்பர், 'எவ்வளவு பணம் கொடுத்தாலும் இதுபோன்ற செயல்களை நான் செய்யமாட்டேன்' என்றார். அதற்குத் தெரசா, 'இச்செயலைச் செய்வது மகிழ்ச்சி அளிக்கிறது. ஏனெனில், தொழுநோயாளிகள் என்று எவரும் இல்லை. தொழுநோய் என்ற வியாதி மட்டுமே இருக்கிறது. அதையும் குணப்படுத்திவிட முடியும்' என்றார். நண்பர் தெரசாவின் அன்னை உள்ளத்தை உணர்ந்து பாராட்டினார்.

பல இன்னல்கள் அவருக்கு வந்தபோதிலும், தாம் எடுத்த காரியத்தில் பின்வாங்காமல் ஏழைமக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்பதையும், அவர்களின் பசி நீங்கவேண்டும் என்பதையுமே தம் முழுமூச்சாகக் கொண்டார். அதன் பின்னரே கொல்கத்தா மாநகரில் "அன்பின் பணியாளர்" (Misssionaries of Charity) என்ற சபையினை நிறுவிப் பலரும் ஏழை மக்களுக்காகத் தொண்டு செய்ய வழிவகுத்தார்.

"உண்ண உணவு, உடுத்த உடை இல்லாதவர்கள், வீடு இழந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள், தொழுநோயாளிகள் ஆகியவர்களையும், சமூகத்திற்கே பெரும் பாரமெனக் கருதப்பட்டு அனைவராலும் வெறுக்கப்பட்டவர்களையும் கவனித்தலே இந்தச் சபையின் குறிக்கோள் ஆகும்" என்றார் தெரசா. இந்தக் குறிக்கோளைச் செயல்படுத்துவதில் முனைப்புடன் செயல்பட்டார். கொல்கத்தாவில் பதின்மூன்று உறுப்பினரோடு தொடங்கப்பட்ட இச்சபை, இவர் இறந்தபோது நூற்றிருபத்து மூன்று நாடுகளில் அறுநூற்றுப் பத்துச் சபைகளாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகிலேயே மனித குலத்திற்குத் தொண்டுகள் செய்ததற்காக அதிக அளவு விருது பெற்றவராக அன்னை தெரசா விளங்குகிறார். சமூகசேவை, சகிப்புத்தன்மை மூலம் இவரது புகழ் உலகம் முழுவதும் பரவியது. 1962ஆம் ஆண்டு அன்னை தெரசாவின் தொண்டுகளைப் பாராட்டி இந்திய அரசு இவருக்குப் பத்மஸ்ரீ விருது வழங்கியது. அதே ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டின் ரமோன் மக்சேசே அமைப்பு, இவரின் தொண்டினைப் பாராட்டி விருது வழங்கிச் சிறப்பித்தது. 1969ஆம் ஆண்டு சர்வதேசப் புரிந்துணர்வுக்கான ஜவஹர்லால் நேரு விருது அன்னை தெரசாவிற்கு வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1979இல் அமைதிக்கான நோபல் பரிசும், 1980இல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதும் அன்னை தெரசாவிற்குக் கிடைத்தன.

இவை மட்டுமல்லாமல், அமெரிக்க ஜனாதிபதி பதக்கம், ஆர்டர் ஆஃப் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆர்டர் ஆஃப் மெரிட் உள்ளிட்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட விருதுகளையும் சிறப்புகளையும் இவர் பெற்றுள்ளார்.

## பொருள் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | சிகிச்சை | - | மருத்துவம் |
| 2. | நோயாளி | - | உடல்நலம் இல்லாதவர் |
| 3. | தன்னார்வலர் | - | தன்னலம் கருதாது விருப்பத்துடன் தொண்டு செய்பவர் |
| 4. | பரிவு | - | அன்பு |
| 5. | சுத்தம் | - | தூய்மை |
| 6. | வியாதி | - | நோய் |

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. அன்னை தெரசா யாரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்?
2. அன்னை தெரசா பிறரிடம் என்ன உதவி கேட்டார்?
3. அன்னை தெரசாவின் நண்பர் என்ன கூறினார்?
4. அன்னை தெரசா தம் நண்பரிடம் கூறியது என்ன?
5. அன்னை தெரசாவிற்குக் கொடுக்கப்பட்ட விருதுகள் யாவை?

### ஆ) கீழ்க்காணும் தொடர்கள் யாரால் யாரிடம் கூறப்பட்டன என்பதை எழுதுக.

(தெரசா நண்பரிடம், தெரசா தன்னார்வலர்களிடம்)

1. அறையைத் தூய்மை செய்யுங்கள்; இங்குதான் நம் பணி தொடரப் போகிறது.
2. தொழுநோயாளிகள் என்று எவரும் இல்லை. தொழுநோய் என்ற வியாதி மட்டுமே இருக்கிறது. அதையும் குணப்படுத்திவிட முடியும்.

### இ) பொருத்துக.

| | நிகழ்வு | | ஆண்டு |
|---|---|---|---|
| 1. | அன்னை தெரசா பிறந்த ஆண்டு | - | 1962 |
| 2. | அன்னை தெரசாவிற்குப் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்ட ஆண்டு | - | 1979 |
| 3. | அன்னை தெரசாவிற்கு ஜவஹர்லால் நேரு விருது வழங்கப்பட்ட ஆண்டு | - | 1980 |
| 4. | அன்னை தெரசா அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்ற ஆண்டு | - | 1910 |
| 5. | அன்னை தெரசாவிற்குப் பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட ஆண்டு | - | 1969 |

## 30.3 தெரிந்துகொள்வோம்

### தொடர் உருவாக்குதல்

| | |
|---|---|
|  | ❖ ஆசிரியர் பாடம் நடத்தினார்<br>❖ ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடம் நடத்தினார்<br>❖ ஆசிரியர் மாணவர்களுக்குத் தமிழ்ப் பாடம் நடத்தினார் |
|  | ❖ நான் கடற்கரைக்குச் சென்றேன்.<br>❖ நானும் அண்ணனும் கடற்கரைக்குச் சென்றோம்.<br>❖ நானும் அண்ணனும் உறவினர்களோடு கடற்கரைக்குச் சென்றோம். |
|  | ❖ நான் கபடி விளையாடினேன்.<br>❖ நானும் என் நண்பர்களும் கபடி விளையாடினோம்.<br>❖ நானும் என் நண்பர்களும் இரு அணிகளாகக் கபடி விளையாடினோம். |
|  | ❖ நான் புத்தகம் படித்தேன்.<br>❖ நான் கவிதைப் புத்தகம் படித்தேன்.<br>❖ நான் நூலகம் சென்று கவிதைப் புத்தகம் படித்தேன். |

## பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு நான்கு சொல் கொண்ட தொடர்களை உருவாக்குக.**

| | | |
|---|---|---|
| நான் | பள்ளிக்குச் சென்று | வந்தேன் |
| கண்ணன் | | வந்தான் |
| மாலதி | | வந்தாள் |
| மாணவர்கள் | | வந்தனர் |

தொடர் 1 : ______________________________

தொடர் 2 : ______________________________

தொடர் 3 : ______________________________

தொடர் 4 : ______________________________

**ஆ) கீழ்க்காணும் படத்தைப் பார்த்து நான்கு அல்லது ஐந்து சொல்கொண்ட ஐந்து தொடர் உருவாக்குக.**




தொடர் 1 : ______________________________


தொடர் 2 : ______________________________

தொடர் 3 : ______________________________

தொடர் 4 : ______________________________

தொடர் 5 : ______________________________

இ) பறவையை அதன் கூட்டிற்கு அழைத்துச் சென்று, மூன்று சொல் கொண்ட தொடர்களை உருவாக்குக.

| | | |
|---|---|---|
|   | வானில் |   |
|   | பள்ளிக்குச் |   |
|   | தண்ணீரில் |   |
|   | புல்லை |   |

தொடர் 1 : ______________________________

தொடர் 2 : ______________________________



தொடர் 3 : ______________________________

தொடர் 4 : ______________________________

## 30.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் படங்களின் பெயர்களைக் கட்டத்தில் கண்டறிந்து வட்டமிடுக.**









| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கு | ரு | வி | ன் | பூ | ட் | டு | லி |
| சு | ண் | டெ | லி | மை | ன் | ப | க |
| ய | ம் | க் | ரா | கி | ளி | கா | ட |
| நா | தா | எ | ச | ட் | சா | லி | ல் |
| சே | வ | ல் | பி | யி | ப | னு | மீ |
| னி | வே | ன் | து | ச | ட் | டை | பா |
| மா | பு | லி | வி | னா | ட | த் | கு |
| ர் | ச | த | ன் | னி | ம் | ச் | டை |

## தகவல் துளி

அன்னை தெரசா கொல்கத்தாவில் குழந்தைகள் காப்பகம் ஒன்றைத் தொடங்கினார். அதற்கு, 'நிர்மலா சிசுபவன்' என்று பெயரிட்டார். 1953ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15ஆம் நாள் சிசுபவனுக்கு முதல் குழந்தை கொண்டு வரப்பட்டது. அன்றுமுதல் ஆயிரக்கணக்கான ஆதரவற்ற குழந்தைகளைச் சிசுபவன் காத்து வருகிறது.


அன்னை தெரசா

## 30.5 கேட்டல் கருத்தறிதல்

அன்பு வேண்டும்

அன்பு வேண்டுமா? – தம்பீ
அழகு வேண்டுமா?
அன்பைப் பெற்றால் அழகுவரும்
அன்பு வேண்டுமே! அகத்தில்

அன்பு வேண்டுமே!
ஊக்கம் வேண்டுமா? – தம்பீ!
உடைமை வேண்டுமா?
ஊக்கம் பெற்றால் உடைமை வரும்

ஊக்கம் வேண்டுமே! – அகத்தில்
ஊக்கம் வேண்டுமே!
கல்வி வேண்டுமா? – தம்பீ!
செல்வம் வேண்டுமா?

கல்வி பெற்றால் செல்வம் வரும்
கல்வி வேண்டுமே, மனத்தில்
கல்வி வேண்டுமே!
உண்மை வேண்டுமா? – தம்பீ

திண்மை வேண்டுமா?
உண்மை பெற்றால் திண்மை வரும்
உண்மை வேண்டுமே! எனக்கு
உண்மை வேண்டுமே!

அன்பும் ஊக்கமும் கல்வியும்
உண்மையும் இருந்தால்
பின்பு தோன்றும் யாவையும்
நல்லவே தோன்றும்.

- தமிழறிஞர் அடிகளாசிரியர்

(அகம் – உள்ளம்; உடைமை – பொருள்; திண்மை – வலிமை)

### வினாக்கள்

1. அன்பைப் பெற்றால் என்ன வரும்?
2. ஊக்கம் வந்தால் என்ன வரும்?
3. செல்வம் கிடைக்க என்ன செய்ய வேண்டும்?
4. வலிமை கிடைக்க என்ன செய்ய வேண்டும்?
5. நல்லவை அனைத்தும் கிடைக்க இருக்க வேண்டியவை யாவை?

## 30.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 30.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

- (குறள் 39)

-திருவள்ளுவர்

(அறம் - தருமம்; இன்பம் - மகிழ்ச்சி; இல - இல்லை)

**பொருள்:**

அறத்தோடு பொருந்திவரும் இன்பமே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாது வருவன எல்லாம் துன்பம் தருவன. அவை புகழும் இல்லாதன.

### பழமொழி

அன்பே கடவுள்

## சொல்லக் கேட்டு எழுதுக.

1. அன்னை தெரசா
2. சுகாதார அலுவலர்
3. தன்னார்வலர்கள்

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. அமைதி
2. ஊர்மக்கள்
3. இடவசதி
4. எதிர்ப்பு

## 30.8 மொழிபெயர்ப்போம்

உலகிலேயே மனித குலத்திற்குத் தொண்டுகள் செய்ததற்காக அதிக அளவு விருது பெற்றவராக அன்னை தெரசா விளங்குகிறார். சமூகசேவை, சகிப்புத்தன்மை மூலம் இவரது புகழ் உலகம் முழுவதும் பரவியது.

---

---

---

## 30.9 அறிந்துகொள்வோம்

1. தொழுநோய் – Leprosy
2. மருத்துவமனை - Hospital
3. நோயாளி – Patient
4. சிகிச்சை – Treatment
5. சுகாதார அலுவலர் – Health Inspector
6. தன்னார்வலர் – Volunteer
7. துறவி - Ascetic

8. வறுமை - Poverty

9. பராமரிப்பு - Maintenance

10. சுகாதாரம் - Hygiene


11. தொண்டு - Charity/Service

12. குறிக்கோள் - Aim

13. பதக்கம் - Medal

## 30.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் படங்களைக் கொண்டு, சிறுகதை ஒன்றனை எழுதுக.**



## 30.11 உயர்நிலைத்திறன்

**காணாமல் போன இருசக்கர வண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு, காவல் கண்காணிப்பாளருக்கு ஒரு கடிதம் எழுதுக.**

அனுப்புநர்

________________

________________

________________

பெறுநர்

________________

________________

ஐயா,

பொருள் : காணாமல் போன இரு சக்கர வண்டி – கண்டுபிடித்துத் தர கோருதல் – சார்பு.

நேற்று இரவு என் ________________________________________

__________________________________________________________

________________________________________________________

தங்கள் உண்மையுள்ள,

____________________

நாள் :

இடம் :

## 30.12 செயல்திட்டம்

அன்னை தெரசா போல் சமூக சேவை செய்தவர்களின் படங்களையும் செய்திகளையும் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குக.

# மீள்பார்வை

## பயிற்சிகள்

**1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.**

(துரோணாச்சார்யா, இராமலிங்க அடிகள், இன்பம், துளசி, அயோத்திதாசர்)

1. உடலின் உறுதி உடையவரே! உலகில் ______________ உடையவராம்
2. உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டவர் ______________
3. ஒவ்வோர் ஆண்டும் சிறந்த பயிற்சியாளருக்குத் ______________ விருது வழங்கப்படுகிறது.
4. மூலிகைகளின் அரசி என அழைக்கப்படுவது ______________
5. எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல எண்ணுதல் வேண்டும் என்று கூறியவர் ______________

**2) கீழ்க்காணும் சொற்களைப் பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்குறள் | - | திரிதல் விகாரப் புணர்ச்சி |
| 2. | மரவேர் | - | இயல்பு புணர்ச்சி |
| 3. | வாழைமரம் | - | தோன்றல் விகாரப் புணர்ச்சி |
| 4. | பொற்குடம் | - | கெடுதல் விகாரப் புணர்ச்சி |

**3) கீழ்க்காணும் தொடர்கள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.**

1. நிலவேம்பு இரத்தத்தில் தட்டணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது. (சரி/தவறு)
2. மாதுளை, மாம்பழம், வாழைப்பழம் ஆகிய மூன்றும் முக்கனி என்று அழைக்கப்படுகின்றன. (சரி/தவறு)
3. அயோத்திதாசர் 'ஒரு பைசாத் தமிழன்' என்னும் வார இதழைத் தொடங்கினார். (சரி/தவறு)
4. வள்ளலார் சத்திய ஞான சபையைத் திருவாரூரில் நிறுவினார். (சரி/தவறு)
5. இருசொல் இணையும்போது மாற்றம் ஏற்படுவது விகாரப் புணர்ச்சி ஆகும். (சரி/தவறு)

## 4) கீழ்க்காணும் வழுநிலைத் தொடர்களை வழாநிலைத் தொடர்களாக மாற்றுக.

1. அப்பா வந்தது.
2. செந்தில் சென்றது.
3. மாலா விளையாடியது.
4. புலி முழங்கியது.
5. மாணவர்கள் படம் வரைந்தார்.

## 5) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?.
2. ஐந்திணை என்பன யாவை?
3. வழாநிலைத் தொடர்கள் என்றால் என்ன?
4. மனித உடலில் ஏற்படும் சளியை அகற்றப் பயன்படும் மூலிகையின் பெயர் என்ன?
5. "உடலின் உறுதி உடையவரே! உலகில் இன்பம் உடையவராம்" என்று கூறியவர் யார்?

## 6) பின்வரும் பழமொழிகளைச் சரியான சொல் கொண்டு நிரப்புக.

(தோப்பாகாது, கோடி, கடவுள், உறுதி, தின்றால்)

1. நொறுங்கத் ________________ நூறு வயது.
2. தனிமரம் ________________.
3. கூடி வாழ்ந்தால் ________________ நன்மை.
4. அன்பே ________________.
5. உடலினை ________________ செய்.

## 7) பின்வரும் தொகைச்சொற்களைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | நானிலம் | - | மெய், வாய், கண், காது, மூக்கு |
| 2. | இருதிணை | - | இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு |
| 3. | மூவிடம் | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |
| 4. | அறுசுவை | - | உயர்திணை, அஃறிணை |
| 5. | ஐம்பொறி | - | தன்மை, முன்னிலை, படர்க்கை |

**8) பின்வரும் ஆங்கிலச்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.**

1. Diabetes -
2. Leprosy -
3. Economy -
4. Suffering -
5. Award -

**9) பின்வரும் தமிழ்ச்சொற்களுக்கு இணையான ஆங்கிலச்சொற்களை எழுதுக.**

1. திருவிழா -
2. உடற்பயிற்சி -
3. விழிப்புணர்வு -
4. தன்னார்வலர் -
5. பசி -

**10) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஆவாரைச் செடியின் பயன்கள் யாவை?
2. அன்னை தெரசாவின் குணநலன்கள் பற்றிக் குறிப்பிடுக.
3. வழுநிலைத்தொடருக்கும் வழாநிலைத்தொடருக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டு தந்து விளக்குக.
4. கருத்துமாறாத் தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. திரிதல் விகாரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**11) பின்வரும் உரைப்பகுதியைப் படித்து, அதிலுள்ள வழுநிலைத்தொடர்களை, வழாநிலைதொடர்களாக மாற்றி எழுதுக.**

கண்ணனும் சிவாவும் நெருங்கிய நண்பர்கள். கண்ணனின் பிறந்தநாளை முன்னிட்டு, சிவா கண்ணனைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்தது. சிவா, தன் அண்ணன் மற்றும் தங்கையுடன் தன் நண்பனையும் அழைத்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்றாள். அவர்கள் கடற்கரையில் சற்று நேரம் விளையாடிவிட்டு அங்கிருந்து திரையரங்கம் சென்றது. திரைப்படம் பார்த்துவிட்டு வெளியே வந்த அவன் ஓர் உணவகத்திற்குச் சென்று உணவருந்தி மகிழ்ந்தது. பின்னர் அனைவரும் வீட்டிற்குச் செல்லத் திட்டமிட்டனர். அப்போது கண்ணன் சிவாவிடம் இந்தத் தினத்தை என் வாழ்வின் மிகவும் மகிழ்ச்சியான தருணமாக மாற்றியதற்கு நன்றி எனத் தெரிவித்தது.

12) பின்வரும் விளம்பரத்தைப் பார்த்துக் கீழே கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.




வினாக்கள்

1. கண்காட்சி எங்கு, எப்போது நடைபெறுகிறது?
2. கண்காட்சி எத்தனை நாள் நடைபெறுகிறது?
3. கண்காட்சி எதைப் பற்றியது?
4. கண்காட்சியில் என்னென்ன கலைகள் இடம்பெறுகின்றன?
5. கண்காட்சியில் பங்குபெறுபவர்கள் யார்?

13) **பின்வரும் மூன்று சொல் கொண்ட தொடர்களை ஆறு சொல் கொண்ட தொடர்களாக மாற்றுக.**

1. வண்ணத்துப்பூச்சி அழகாகப் பறந்தது.
2. சீதாவின் குரல் இனிமையானது.
3. நண்பர்கள் சுற்றுலா சென்றனர்.
4. குமரன் பறை இசைத்தான்.
5. குதிரை வேகமாக ஓடியது.

14) **பின்வரும் தொடர்களைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. Herbal medicine is the use of roots, stems, leaves, flowers, or seeds of plants to improve health, prevent disease, and treat illness.
2. Exercise will help you deal with stress and reduce your risk of depression.
3. Socrates, ancient Greek philosopher whose way of life, character and thought exerted a profound influence on Western philosophy.
4. Humanity refer to the kind feelings humans often have for each other living beings.
5. Mother Teresa devoted her life to serving the poor and destitute all over the world.

# அடிப்படை மொழித்திறன்கள்
# பாடங்கள் 17 – 30, இலக்கணம் மொழிப் பயிற்சிகள்

## கேட்டல்

- புதிய செய்திகளைக் கேட்க ஆர்வம் கொள்ளுதல்.
- சிறுசிறு உரைப்பகுதிகளைக் கேட்டுப் பொருளுணர்தல்.
- அறக்கருத்துகள் நிறைந்த பாடல்களைக் கேட்டுணர்தல்.
- வாழ்வியல் திறன் வளர்க்கும் சிறுசிறு கதைப்பகுதிகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்.
- இலக்கணக் கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல் (இடைச்சொற்கள், பெயரெச்ச வகைகள், வினையெச்ச வகைகள், வழு, வழாநிலை - (திணை, பால், எண், இடம், காலம், மரபு), புணர்ச்சி- இயல்பு, விகாரம்)

## பேசுதல்

- உரைப்பகுதி வழித் தாம் புரிந்துகொண்ட கருத்துகளை வெளிப்படுத்துதல்.
- நற்பண்பை வளர்க்கும் பாடலின் கருத்தைப் புரிந்துகொண்டு, தம் சொந்த நடையில் கூறுதல்.
- இலக்கணக் கருத்துகளைப் படங்கள், உரையாடல்கள் வாயிலாக எளிமையாக அறிந்துகொண்டு பேசுதல்.
- படக்காட்சிகள், சூழல்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப உரையாடல் அமைத்துப் பேசுதல்.
- தாம் கேட்ட புதிய சொற்கள், தொடர்கள், உரைப்பகுதிகள் முதலியவற்றின் பொருளுணர வினாக்கள் எழுப்பி விடைகாணல்.
- எளிய இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு பேசுதல். (இடைச்சொற்கள், பெயரெச்ச வகைகள், வினையெச்ச வகைகள், வழு, வழாநிலை - (திணை, பால், எண், இடம், காலம், மரபு), புணர்ச்சி- இயல்பு, விகாரம்)
- மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாகப் பேசுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள், சிலேடை நயங்கள், உவமைத் தொடர்கள், கருத்துமாறாத் தொடர்கள், தொகைச்சொற்கள் போன்றவை)
- மூன்று, நான்கு, ஐந்து சொல் கொண்டு தொடர் உருவாக்கிப் பேசுதல்.
- பிறரோடு தயக்கமின்றித் தமிழில் பேசும் திறன் பெறுதல்.

## படித்தல்

- சிறுசிறுஉரைப்பகுதிகள், பாடல்கள், கதைகள் ஆகியவற்றைப் பொருளுணர்ந்து படித்தல்.
- படச்சூழல்களைப் புரிந்துகொள்ளுதல்.
- புதிய சொற்களின் பொருளுணர்ந்து தம் முன்னறிவோடு இணைத்தல்.
- அறக்கருத்துகள் உணர்த்தும் பாடல்களைப் படித்துப் பொருளுணர்தல்.
- இலக்கணக் கருத்துகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (இடைச்சொற்கள், பெயரெச்ச வகைகள், வினையெச்ச வகைகள், வழு, வழாநிலை - (திணை, பால், எண், இடம், காலம், மரபு), புணர்ச்சி- இயல்பு, விகாரம்)
- எளிய நடைமுறை இலக்கணக் கூறுகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள்)
- மூன்று, நான்கு, ஐந்து சொல் கொண்ட தொடர்களைப் படித்தல்.
- விளம்பரம்/ அறிவிப்பு முதலானவற்றைப் படித்துக் கருத்துணர்தல், விடை கூறும் திறன்பெறுதல்.
- கருத்துவிளக்கப்படத்தின் கருத்தறிதல்.
- பாடநூலுக்கு அப்பாற்பட்டும் தமிழ்நாளிதழ்கள், வார, மாத இதழ்கள், கதைநூல்கள் ஆகியவற்றைப் படிப்பதற்கு ஆர்வம்கொள்ளுதல்.

## எழுதுதல்

- எளிய எழுத்துப் பயிற்சிகளை மேற்கொள்ளுதல். (சொல்வதைக் கேட்டு எழுதுதல், சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுதல்.)
- சிறுசிறு உரைப்பகுதிகளைப் படித்துப் புரிந்துகொண்டு விடை எழுதுதல்.
- படச்சூழல்களுக்குத் தமிழில் உரையாடல் எழுதும் திறன் பெறுதல்.
- இலக்கணக் கருத்துகளைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதிப்பழகுதல். (இடைச்சொற்கள், பெயரெச்ச வகைகள், வினையெச்ச வகைகள், வழு, வழாநிலை - (திணை, பால், எண், இடம், காலம், மரபு), புணர்ச்சி- இயல்பு, விகாரம்)
- எளிய மொழிப் பயிற்சிகளைப் புரிந்துகொண்டு விடையளித்தல். (ஒலி வேறுபாடுடைய சொற்கள்)
- மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள், சிலேடை நயங்கள், உவமைத் தொடர்கள், கருத்துமாறாத் தொடர்கள், தொகைச்சொற்கள் போன்றவை)
- மூன்று, நான்கு, ஐந்து சொல் கொண்டு தொடர் உருவாக்குதல்.
- விடுகதை/ புதிர் போன்றவற்றைப் படித்து விடை எழுதுதல்.
- உரைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.
- ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுதல்.
- சிந்தனைக்கு விருந்து அளிக்கும் படைப்பாற்றல் வளர்செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுதல்.
- சொற்கள், எளிய தொடர்கள், சிறுஉரைப்பகுதி ஆகியவற்றை மொழிபெயர்த்து எழுதுதல்.
- எளிய செயல் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

## மேலாய்வாளர் குழு

**முனைவர் மருதூர் அரங்கராசன்,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**முனைவர் மு. சுதந்திரமுத்து,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**திரு. ச. தமிழ்ச்செல்வன்,**
எழுத்தாளர், சிவகாசி.

## பாடத்திட்ட வல்லுநர் குழு

**முனைவர் ந. நடராச பிள்ளை,**
மேனாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
மைசூரு.

**முனைவர் ப. டேவிட் பிரபாகர்,**
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
சென்னை.

**முனைவர் வ. தனலட்சுமி,**
இணைப்பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி &
இலக்கியப் புலம், புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி – 605014.

**திருமதி பா. மலர்விழி,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி
நிறுவனம், திருவூர் - 602025, திருவள்ளூர் மாவட்டம்.

## பாட ஒருங்கிணைப்பாளர் குழு

**திருமதி ப. கலைச்செல்வி,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி
நிறுவனம், களியாம்பூண்டி, காஞ்சிபுரம் மாவட்டம்.

**முனைவர் க. ஜானகி,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திரு. ச. சுசீந்திரன்,**
உதவி நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**முனைவர் இரா. சிங்காரவேலன்,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## மெய்ப்புத் திருத்துநர்

**திரு. ம. அமல்ராஜ்,**
பட்டதாரி ஆசிரியர், பல்லவபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி,
ஜமீன் இராயப்பபேட்டடை , செங்கல்பட்டு மாவட்டம்.

## புத்தக வடிவமைப்பாளர்

**திரு. ச. அசோக் குமார்,**
68, வடக்கு தெரு, எக்கியர்குப்பம், மரக்காணம் 604 303

**திரு. வே.வெண்மணிவேலன்,**
நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## ஓவியங்கள்

**திரு. கா. தனஸ் தீபக் ராஜன்,**
ஓவியர், நலன் தனஸ் ஸ்டுடியோஸ், சேலம்.

**திரு. அச்சுதன் ரவி,**
ஓவிய ஆசிரியர், நாடார் கமிட்டி மேல்நிலைப்பள்ளி, தென்காசி.

**திரு. ரா. ராஜேஷ்,**
42/2, கண்ணகி தெரு, தூலைமேடு, சென்னை-600094

## பாட ஆசிரியர் குழு

**திரு. லூ. இக்னேஷியஸ் சேசுராஜா,**
பட்டதாரி ஆசிரியர், அன்னை வேளாங்கண்ணி உயர்நிலைப்
பள்ளி, வியாசர்பாடி, சென்னை.

**திருமதி ஜோ. பிரேமா கிறிஸ்டி,**
பட்டதாரி ஆசிரியர், டி.இ.எல்.சி. மேக்தலின் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி, புரசைவாக்கம், சென்னை.

**திரு. கு. சம்பந்தம்,**
முதுகலை ஆசிரியர் (பணிநிறைவு), டி.ஆர்.பி.சி.சி.சி.
இந்து மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்.

**திருமதி நா. ஜானகி,**
பட்டதாரி ஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
சின்னதடாகம், கோவை மாவட்டம்

**முனைவர் ப. மெய்யப்பன்,**
ஆசிரியப் பயிற்றுநர், வட்டார வளமையம், நம்பியூர்,
ஈரோடு மாவட்டம்

**திரு. ந. மாமலைவாசன்,**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, இராயபுரம்,
திருவாரூர் மாவட்டம்.

**திரு. ஜோ. அலெக்ஸ் கிறிஸ்டோபர்,**
பட்டதாரி ஆசிரியர், ச.உ.நி. மேல்நிலைப்பள்ளி,
இராயப்பன்பட்டி, தேனி மாவட்டம்.

## தட்டச்சுக் குழு

**திருமதி சோ. ஜோதி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம்,
சென்னை-25.

**திருமதி கோ. கல்விக்கரசி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம்,
சென்னை-25.

**திருமதி சசிகலா ஜீவா,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம்,
சென்னை-25.

**திருமதி இரா. சிவசங்கரி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம்,
சென்னை-25.

**திருமதி ம. சரண்யா,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம்,
சென்னை-25.

## தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை – 600025.

www.tamilvu.org

978-81-977380-4-3